# ‘ஓட்டைப் படகு’

முகவுரை,
தேசீய கவி, நாமக்கல்,
ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை.

ஆசிரியர்கள்,
அ. டேவிட் பிச்சை.
எஸ். எ. ரஹீம்.

# "ஓட்டைப் படகு"

(ஒரு சிறந்த அரசியல் ஆராய்ச்சி)

தேசீய கவி, நாமக்கல்,

ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்

முகவுரை கொண்டது.

ஆசிரியர்கள்.

அ. டேவிட் பிச்சை

எஸ். ஏ. ரஹீம்.

டார்பிடோ பதிப்பகம்,

தஞ்சை.

காபி ரைட்]

[அணா 10

## பொருளடக்கம்


ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளை அவர்களின் முகவுரை.
ஆசிரியர்களின் முன்னுரை.

| | |
|---|---|
| *சில உண்மைகள்* | — 1 — 27. |
| *புது யோசனையும், வாதப்பிரதி வாதங்களும்* | — 28 — 62. |
| *வழி என்ன ?* | — 63 — 95. |

# தேசிய கவி, நாமக்கல்,
# ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின்
## முகவுரை.

தேசபக்தியே வெறியாகக்கொண்டு ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைத்து தமிழ்நாட்டில் காங்கிரசுக்காக மிக உயர்ந்த சேவை செய்துவரும் **ஸ்ரீ S. A. ரஹீம்** அவர்களும், **ஸ்ரீ டேவிட் பிச்சை** அவர்களும், இப்புத்தகத்தில் பெயர் வாராத இன்னும் சில அரிய நண்பர்களும் நான் இதற்கு முகவுரை தரவேண்டுமென்று விரும்புகின்றார்கள்.

நான் அரசியல் அறிஞன் அல்ல. வெறும் இலக்கியவாதி. ஒரு சிறு கவிஞன். உலகத்திலுள்ள எல்லா உயர்ந்தநூல்களிலும், சரித்திரங்கள்—இதிகாசங்கள்—புராணங்கள்-கட்டுக்கதைகள், நாவல்களிலும்கூட கற்பனையாகவும் கண்டறியாத அற்புத மனிதன் **காந்தியடிகளின்** மயக்கமே என்னையும் **ஒரு காங்கிரஸ்காரனுக** இருக்கச்செய்தது

உலகத்துக்கெல்லாம் ஒரு பொதுவான அறநூல் என்று சொல்லத்தகுதியுடைய திருக்குறளை நான் முறையோடு படித்து சிந்திக்க நேர்ந்த என் இளம்பிராயத்தில் அதிற்சொல்லப்பட்ட பல அறங்களை வாழ்க்கையில் நடத்தக்கூடிய மனிதனும் இருக்க முடியுமா என்று அடிக்கடி சந்தேகிப்பதுண்டு. அறநூல்கள் எல்லாம் மனித சமூகத்துக்கு ஏதோ ஏகதேசமாக ஒருவழியைக்காட்ட உதவுமேயல்லாமல் அவற்றில்சொல்லப்பட்டஒழுக்கங்களிற் பெரும் பகுதியும் ஏட்டோடு இருக்கவேண்டியதுதான் என்றும் எண்ணுவதுண்டு. ஆனால் காந்தியடிகளின் சரித்திரத்தையும், ஒழுக்கத்தையும் தவத்தையும் கண்ணாரக் கண்ட பிறகு வள்ளுவர் சொன்ன

**"ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று"** என்ற குறளின் கருத்தைப்பின்பற்றி மற்ற அறங்களையும் தினசரி வாழ்க்கையில் நடத்தக்கூடிய மகாத்மாக்களும் மனிதரில் உண்டு; திருக்குறளும்

உண்மை என்று உணர்ந்து மகிழலானேன். என்னுடைய கவி களுக்கு மூலபலமும் இந்த உணர்ச்சிதான். ஆதலால் காங்கிரசைப் பற்றிய எந்த விஷயத்தையும் காந்தீயத்தைவிட்டுப் பிரித்து வெறும் அரசியல்முறையில்வைத்து எண்ணிப்பார்க்கக்கூடிய சுதந்திரத்தை நெடுநாளைக்கு முன்னலேயே இழந்துவிட்டவர்களில்ஒருவன் நான். ஆகையினல் **ஸ்ரீ ராஜாஜியவர்களுடைய பாகிஸ்தான் தீர்மா னத்தைப்** பார்த்தவுடன் திடுக்கிட்டுப்போனேன் அதை ஒத்துக் கொள்ள என்மனம் இடங்கொடுக்கவில்லை.

பிறகு எனக்குள்ளேயே சிந்திக்கலானேன்: "ஸ்ரீ ராஜாஜி சாதாரண மனிதரா? தமிழ் நாட்டின் தனிப்பெருந்தலைவர்! தியாக மூர்த்தி. காந்தீயத்தைக் கண்ணில் வைத்துக்காத்தவர்! நம்மைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமாக காந்தியடிகளின் பெரு மையை அறிந்தவர்! அவர் தமிழ் நாட்டில் காந்தீயத்தைப் பரப்பு வதற்குப் பட்டிருக்கும் கஷ்டங்களை எண்ணிப்பார்த்தால் கண்ணீர் வரும். தன்னலம் சிறிதும் கருதாத்தவசி மாசுமருவற்ற வாழ்க்கை யுடையவர். காந்தீயத்திற்கோ காங்கிரசுக்கோ தீங்கிழைக்கக்கருது வாரா அவர்? இதில் ஏதோ ரகசியம் இருக்கும். நாம் வெறும் காந்தீயத்தையே சுற்றிச்சுற்றி வருகிறோம். காந்தீயத்தை விட்டு விலகிநின்று வெறும் அரசியல் முறையிலும் எண்ணிப்பார்க்கவேண் டும். அப்படிப்பார்க்கிறபோது இது ஒரு அரசியல் உபாயம்தான். சாம, பேத, தான, தண்டம் என்று சொல்லப்பட்ட ராஜதந்திரங் களிற் சேர்ந்தது. இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி விடாப் பிடியாக பாகிஸ்தான்காரர்கள் கேட்கிறார்கள் நாமும் அதை இல்லை இல்லையென்று சொல்லச்சொல்ல அதற்குகிராக்கி அதிகமாகிறது. ஆகையால், **'இதோ உங்கள் பாகிஸ்தான் வேண்டும்போது எடுத்துக்கொள்ளுங்கள்'** என்று சொல்லி இப்போதைக்கு அவர் களை திருப்தி செய்துவிட்டால் அரசியல் முறையில் அவர்களும் நம்முடன் சேர்ந்து கிரிப்ஸ் துரை சொல்லிப்போன முறுக்கான வார்த்தைகளை முறித்துவிடலாம் என்று எண்ணித்தான் ராஜாஜி இதைச்சொல்லியிருக்கிறார்" என்று நான் எண்ணலானேன்.

இரண்டாம் பேருக்குத் தெரியாமல் எல்லாரும் சேர்ந்து இந்த உபாயத்தை ஒத்துக்கொண்டால் ஒருக்கால் ராஜாஜி எண்ணுகிறபடி பாகிஸ்தான் பேச்சு தானாகவே மறைந்துபோகலாம் என்றும் கருதினேன்.

இப்படியெல்லாம்எனக்குள் குழம்பிக்கொண்டிருக்கிற சமயத்தில் காந்தியடிகள் பாகிஸ்தான் பேச்சு பாதகம் என்று விளக்க ஆரம்பித்துவிட்டார். ஓ! இனிமேல் ராஜாஜியின் யோசனை எவ்வளவு உயர்ந்ததானாலும் அது காங்கிரஸ் உலகத்தில் செல்லாது என்று அதைப்பற்றி சிந்திப்பதையே விட்டுவிட்டேன். சில பத்திரிகை நிருபர்கள் என்னை அபிப்பிராயம் கேட்டபோது, 'காந்தியடிகளுக்கும் அவருடைய பிரதி பிம்பம் போன்ற ராஜாஜிக்கும் அபிப்பிராய பேதமாக வந்துவிட்ட ஒரு விஷயத்தைப்பற்றி பகிரங்கமாக கட்சிப் பிரதிகட்சிகளில் சேர எனக்கு மனமில்லை. இந்த விவாதத்தை அவர்களோடும் மற்றும அதிகாரம் வாய்ந்த தலைவர்களோடும் விட்டுவிட்டு சும்மா இருக்கவேண்டுமென்பதுதான் என் வேலை" என்று சொல்லிவிட்டேன்.

இனி "ஓட்டைப் படகு" என்ற இப்புத்தகத்தைப் பற்றி என்னுடைய எண்ணத்தைச் சொல்லுகிறேன் இந்த 'ஓட்டைப் படகு' என்ற பெயரும், இதன் பிரசுராலயத்துக்கு 'டார்பிடோ' பதிப்பகம் என்ற பெயரும் புத்தகத்தை வாங்குகின்றவர்களுடைய கவனத்தை இழுப்பதற்காக இடப்பட்டன போலும். 'ஓட்டைப் படகு' என்பது ஒரு கேலியான வார்த்தையாக இருந்தாலும், 'டார்பிடோ' என்பது ஒரு பயங்கரமான சொல்லாக இருந்தாலும் இந்தப் புத்தகத்தில் கேலியோ பயங்கரமோ இல்லாத உயர்ந்தகருத்துகள் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த தர்க்கவாத முறையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராஜாஜியவர்களுடைய பாகிஸ்தான் தீர்மானத்தை மறுத்துப்

*பேசவென்றே எழுதப்பட்டிருந்தாலும்* வெறும் கட்சிவாதக் கசப்புகளோடு வெளிவருகின்ற மேடைப்பிரசங்கங்களையும் பத்திரிகைப் பேச்சுகளையும் போல இல்லாமல் மிகவும் போற்றத்தகுந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. ஹிந்து-முஸ்லீம் பிரச்னையைப்பற்றி பேசுகின்ற பெரும்பாலோர் கேட்டிராததும், கேட்டு மறந்துபோனதுமான பல தஸ்தாவேஜுகள் வெகு அழகான முறையில் அடுக்கப்பட்டிருக்கின்றன. ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலிருந்தஒற்றுமை எப்படி நாளுக்குநாள் வேற்றுமையாக விரிந்துவிட்டது என்ற சரித்திரம் தக்க ஆதாரங்களுடன் வெகு நன்ருக விளக்கப் பட்டிருக்கிறது. *பாகிஸ்தான் என்ற பேச்சு பொதுவாக இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் சிறப்பாகச் சிறுபான்மைத் தொகுதியினராக இருக்கிறவர்களுக்கும் தீங்கையே விளைவிக்கும் என்றகட்சியை தகுந்த நியாயங்களுடன் தெளிவாகச்சொல்லுகின்ற* ஒரு நல்ல இலக்கியமாகும் இது. *இப்போது தமிழ்நாட்டில் நடந்துவரும் பாகிஸ்தான்விவாதங்கள் ஓய்ந்துவிட்டபிறகும் உபயோகப்படக்கூடிய பல விஷயங்கள் முதல் இரண்டு அத்தியாயங்களில் இருக்கின்றன. பல்வேறு தலைவர்கள் முன்னே வெவ்வேறுசமயங்களில் சொன்ன அபிப்பிராயங்கள் மிக்க சிரமத்துடன் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விவாதத்தில் எந்தக் கட்சியைச்சேர்ந்தவர்களாஞலும் எல்லாரும் படித்துப்பயனடையத் தக்க நூல் இப்புத்தகம்.*

**வெ. இராமலிங்கன்.**

# ஆசிரியர்கள் முன்னுரை.

**"என்ன பெயர் வைப்பது"** என்பதையே ஒரு பெரும் பிரச்னையாகப்பெற்று, நடைபெறும் பயங்கரப்போர் உலகத்தின் மக்களையெல்லாம் சுழலவைத்திருக்கிறது. இப் போர் தேசத்தின் ஒரே அடிமை அழிப்பு ஸ்தாபனமாகிய காங்கிரஸிலும் தன் வல்லமையைக் காட்ட ஆரம்பித்திருக் கிறது. இதனுல் பெரும் தலைவர்கள்கூட தடுமாற்றத்திற் குள்ளாகிவிட்டார்கள் போற்றப்பட்டுவந்த நமது லக்ஷியங் கள் இந்த யுத்தப்புயலில் சிக்குண்டு சின்னுபின்னப்படுகின் றன. எவை எவை தேசத்திற்குப் பாதகத்தை விளைவிக்கு மென உலகமறியப் பறைசாற்றினேமோ அவைகளெல்லாம் வரவேற்கப்படுகின்றன. அல்லலுற்றடைந்த அனுபவங்கள் மறைக்கப்படுகின்றன இக்கஷ்டகாலத்தில் நமது லக்ஷியங் களை மறவாது, அனுபவங்களை மனதிற்கொண்டு நம்மை நோக்கிவரும் ஆபத்துக்களையெல்லாம் சமாளிக்க முயற்சிக்க வேண்டும். இந்நெருக்கடியில் சமர்ப்பிக்கப்படும் எல்லா யோசனைகளையும் அலசிப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண் டியது அத்தியாவசியமாகும்.

அதையுத்தேசித்தே இச்சிறு புத்தகத்தில் தேசத்தின் விமோசனத்திற்கு தற்சமயம் சமர்ப்பிக்கப்படும் அபிப்பிரா யங்களைக் கூடியவரை ஒன்றுதிரட்டி வெளியிட முன் வந் தோம். எல்லாவித அபிப்பிராயங்களையும் மிகக்குறைவான எங்கள் அரசியல் அனுபவங்களைக்கொண்டு பரிசீலனைசெய்து எங்கள் அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறோம்.

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாங்க ளிருவரும், சந்தர்ப்பவாதிகள் சுதந்திரத்தைத் தடுக்கும்நோக் கத்தோடு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தி மக்களைச் சுதந்திர ஆர்வமுடையவர்களாக்கி, அவர்

களின் மாயவலையில் சிக்கவிடாமல் செய்வதே கடமையென மதிக்கிறோம். அதற்காகவே இச்சிறுபுத்தகத்தை வெளியிட முன்வந்தோம்.

இதற்கு மிக ஒத்தாசையாயிருந்து இடையறு ஊக்கத்தைக்கொடுத்த எங்கள் ஆப்த நண்பர் பண்டிட் **ஸ்ரீ ஏ.எஸ். ரெங்கநாதாச்சாரியார், சிரோமணி,** அவர்களுக்கு எங்கள் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

புத்தகங்கள் எழுதுவதென்பது மிகக்கஷ்டமான காரியமாகும். இக்கஷ்டமான காரியத்தில் அனுபவமே இல்லாத எங்களை ஈடுபடச்செய்தது எங்கள் உணர்ச்சியே. அவ்வுணர்ச்சியின் தூண்டுதலால் உண்டான அபிப்பிராயங்களை ஒன்றுதிரட்டிதொகுத்திருக்கிறோம். அவைகளைச்சரிபார்த்துதவிய எங்கள் ஆப்த நண்பர் **ஸ்ரீ. ந. பிச்சமூர்த்தி,** பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும், காகிதம் கிடைக்காமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் 'நான் தருகிறேன்' என்று வேண்டிய அளவு காகிதம் கொடுத்துதவிய 'தியாகி' பத்திராதிபர் **ஸ்ரீ இராம-சடகோபன்** அவர்களுக்கும், இப்புத்தகம் அவசரமாக வெளியிட வேண்டிய அவசியத்தையுணர்ந்து கொஞ்சமும் தாமதமில்லாமல் அச்சடித்துக் கொடுத்த **துறையூர், ஜனோபகார அச்சுக்கூடத்தினருக்கும்** எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இதற்குப் பொருளுதவி செய்து ஊக்கத்தையளித்த, தனது பெயரை வெளியிட்டுக்கொள்ள இஷ்டப்படாத எங்கள் நண்பருக்கு ஹிருதய பூர்வமான நன்றியையும், வந்தனத்தையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.

தஞ்சாவூர்,
கும்பகோணம்,
15—7—42.

**அ. டேவிட் பிச்சை.**
**எஸ். ஏ. ரஹீம்.**

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 19 | 1921 | 1912 |
| 21 | 22 | News papper | News paper |
| 25 | 19 | சிக்கந்தர் ஹபத்கனும் | சிகந்தர் ஹயாத்கானும் |
| 29 | 22 | தடையாாகவுள்ள | தடையாகவுள்ள |
| 39 | 10 | சசிக்க முடியாது | சகிக்கமுடியாது |
| 49 | 2 | வருவதுபொல் | வருவதுபோல் |
| 49 | 20 | முற்றுலும் | முற்றிலும் |
| 61 | 16 | சேர்ந்தால் | சேர்ந்ததால் |
| 79 | கடைசி. | சகோதரத்துவ | சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ |

## முதல் அத்தியாயம்.

# சில உண்மைகள்.

"ஹிந்து, முஸ்லீம் இருசமுதாயங்களிலுள்ள ஜனங்களின் பிளவு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் ஆரம்பமாயிற்று என்பது முற்றிலும் உண்மை. அதற்குமுன் அவர்கள் தோளோடுதோளொட்டி ஒரே இடத்தில் சாந்தமும், சமாதானமும் நிலவ ஆண்டவனைத் தொழுதார்கள்" என்று பஞ்சாப் நிர்வாக சபையில் முதல் அங்கத்தினராயிருந்த ஸர். ஜான் மேனுர்ட் சொல்லியிருக்கிருர்.

"இந்திய நிர்வாகத்திலும் அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும், ராணுவத்துறையிலும் பிரித்தாளுவதே பிரிட்டிஷ் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது." என்று ஒரு ஆங்கில உத்தியோகஸ்தர் 1821-ம் வருஷ ஏஷியாடிக் ஜர்னலில் எழுதியிருக்கிருர்.

## எல்லன்பரோ கடிதம்.

முதல் காபூல் படையெழுச்சி காலத்தில் இந்திய முஸ்லீம்களின் மனப்பான்மை, அப்பொழுது ராஜப்பிரதிநிதியாக விருந்த லார்டு எல்லன் பரோவுக்குப் பிடிக்கவில்லை. அவர் 1842-ம் வருஷம் அக்டோபர் மாதம் 4-ம் தேதி வெல்

லிங்டன் கோமகனுக்கு எழுதிய கடிதத்தில், "ஹிந்துக்கள் முஸ்லீம்களை விட அதிக விசுவாசமாக இருப்பார்கள். ஆதலால் அவர்களுடைய ஒத்துழைப்பைப்பெற பெரிதும் விரும்புகின்றேன்." என்று எழுதியிருக்கிறார்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஹிந்துக்கள் ஹோம்ரூல் போன்ற கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்ததும் அரசாங்கத்தார் ஹிந்துக்களை தாஜா செய்வதை விட்டு முஸ்லீம்களைத் தாஜா செய்ய ஆரம்பித்தனர்.

## சர்க்காரின் சதி.

"தேசீய அபிலாஷைகளை எதிர்க்கும் ஓர் கருவியாக முஸ்லீம் சமூகத்தாரை உபயோகித்துக்கொள்ள அன்னிய சர்க்கார் முன்வந்திருக்கிறது" என்று அக்காலத்திலிருந்த இந்தியா மந்திரி லார்ட் ஆலிவர் தெள்ளத்தெளிய ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## லார்டு மார்லியின் கடிதம்.

1906-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ம் தேதி இந்தியா மந்திரி லார்டு மார்லி, ராஜப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் "ஜாக்கிரதையாய் இருங்கள்; கூடிய சீக்கிரத்தில் முஸ்லீம்களும் உங்களுக்கு விரோதிகளாகி விடுவார்களென்று லாரன்ஸ், சிராஃப், ஸிட்னிலோ முதலியவர்கள் ஒருமுகமாகச் சொல்லுகிறார்கள்" என்று எழுதியிருந்தார். அதற்குப் பதிலாக 1906-ம் வருஷம் ஜூன் மாதம் 27-ம் தேதி ராஜப் பிரதிநிதி லார்டு மின்டோ "காங்கிரஸ் சக்தியை எதிர்க்க வேண்டியதை உணர்கிறேன். தாங்கள் சொல்லும் ஆபத்தையும் நன்றாக அறிந்திருக்கிறேன்" என்று எழுதினார்.

இதன் பயனாக முஸ்லீம் சமூகத்தை காங்கிரஸினிடமிருந்து பிரிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப் பட்டதைப்பற்றி 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி ஓர் அதிகாரி ராஜப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் "இன்று ஒரு பெரிய காரியம் நடந்திருக்கிறது. அது வெகுகாலத்திற்கு இந்தியாவையும் இந்திய சரித்திரத்தையும் பாதிக்கக்கூடியது. அதாவது ராஜத்துரோகிகளோடு (காங் கிரஸில்) சேருவதிலிருந்து 6 கோடி (முஸ்லீம்களை) மக்களைத் தடுத்ததேயாகும். இதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று விஸ்தரித்திருக்கின்றார்.

## சேவைக்கு சன்மானம்.

இச்சதியின் பயனாக ஒரு முஸ்லீம் தூதுகோஷ்டி, 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி ஜனுப் ஆகாகான் தலைமையில் ராஜப்பிரதிநிதியை பேட்டி கண்டு "முஸ்லீம்களை ஒரு தனி சமுதாயமாகப் பிரித்து அவர் களுடைய அந்தஸ்தை அவர்களது எண்ணிக்கையினால் மாத்திரமல்லாது அந்த சமுதாயத்தின் அரசியல் முக்கியத்து வத்தையும், சாம்ராஜ்யத்துக்கு அவர்கள் செய்துள்ள சேவைகளையும் எண்ணி நிர்ணயிக்கவேண்டும்" என்று கேட்டார்கள்.

## லீகின் ஜனனம்.

இத்தூதின் பலனாக 1906-ம் வருஷம் டிசம்பர் மாதம் 30-ம் தேதி முஸ்லீம் லீக் அலிகாரில் ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய முக்கிய சட்டதிட்டங்களில் ஒன்று "ஆங்கில அரசாங்கத்தினரிடத்தில் பக்தி காட்டுவது."

அந்த முஸ்லீம் லீக் நாளடைவில் கேட்கும் கோரிக்கை

களை சர்க்கார் கொடுக்க மறுத்தது. இருந்தாலும் மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தில் தனித்தொகுதி யென்ற விஷம் இந்திய அரசியலில் புகுத்தப்பட்டது.

## ஜின்னாவின் எச்சரிக்கை.

அதையுணர்ந்த காங்கிரஸ், 1910-ம் வருஷத்தில் தனித் தொகுதியைக்கண்டித்துத்தீர்மானம்நிறைவேற்றியது. ஜனுப் ஜின்ஞ ஷெ. தனித்தொகுதியைப்பற்றி எழுதுகையில் "இப் பேற்பட்ட விஷத்தை(தனித்தொகுதியை) அரசியல் துறை யில் செலுத்தியதற்காக சர்க்காருக்கு சாபமிட்டு, இந்தச் செய்கையினுல் இருசமூகத்தாரும் ஒருவரை விட்டு ஒருவர் அதிக தூரம் பிரிந்துபோய் விடுவார்கள்" என்று எச்சரித் திருக்கிறுர்.

அக்காலத்தில் படித்த முஸ்லீம்களில் பெரும்பாலோர் காங்கிரஸில் இருந்தார்கள். 1911-ல் துருக்கிக்குச்சொந்த மான திரிபோலியை இத்தாலி எதிர்த்தபோது பிரிட்டன் நடுநிலைமை வகித்ததால் இந்திய முஸ்லீம்களிடையே பெரும் மனத்தாங்கல் ஏற்பட்டது.

## திட்டங்கள் மாற்றம்.

அதன் காரணமாக 1921-ம் வருஷம் லீகின் காரியதரிசி யாக இருந்த ஜனுப் சையத்வாஸீர்ஹுஸேன் முஸ்லீம்லீகின் கொள்கை பிடிக்காமல் அதைமாற்றி அமைக்கப்பிரயத்தனப் பட்டு 1913 வருஷம் மார்ச் மாதம் 22உ லெக்ஷ்மணபுரியில் கூடிய முஸ்லீம் லீகில் அதன் திட்டங்களை மாற்றி காங்கிர ஸின் கொள்கைகளைப்போலவே லீகின் கொள்கைகளையும் அமைத்தார்.

1912ம் வருஷம் பால்கன் யுத்தத்தில் எல்லா கிருஸ்துவ பால்கன் தேசங்களும் துருக்கிக்கு விரோதமாக இருந்தன. அப்பொழுதும் இந்திய முஸ்லீம்கள் உணர்ச்சி ததும்பி டாக்டர் அன்ஸாரி தலைமையில் ஓர் வைத்திய கோஷ்டியை துருக்கிக்கு உதவியாக அனுப்பினர்.

## மறுத்தலும், சேர்தலும்.

முஸ்லீம்லீகின் ஆரம்பத்தில் அதன் சட்டதிட்டங்கள் குறுகியநோக்கமுடையவையெனக்கூறி ஜனாப்ஜின்னா அதில் சேர மறுத்துவிட்டார். சட்ட திட்டங்கள் மாறினபின்னர் மௌலானா ஹஸரத்மோஹானி அவர்களின் தூண்டுதலின் பேரில் லண்டனிலிருந்தே லீகில் சேர்ந்தார்.

## ஒன்றைப்போலவே இருந்தன.

1914ம்வருஷம் லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ், லீக் ஆகிய இரண்டு ஸ்தாபனங்களும் ஒன்றுகூடி தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொண்டு, வெவ்வேறு ஸ்தாபனங்கள் என்று சொல்லமுடியாத நிலையிலிருந்தன. காங்கிரஸ், லீக் இவ்விரண்டின் வருஷாந்தரக் கூட்டங்கள்கூட ஒரே இடத்தில் ஒரேதேதியில் நடந்து வந்தன. ஹிந்துக்கள் லீகின் கூட்டத்திற்குப்போவதும், லீகர்கள் காங்கிரஸ் கூட்டத்திற்கு வருவதும் 1916-ம் வருஷ முதல் 1921-ம் வருஷம் வரை சர்வ சாதாரணமாக இருந்துவந்தது.

1914-ம் வருஷம் காங்கிரஸும், லீகும் கூடி ஒரு சீர்திருத்தத் திட்டத்தை எதிர்ப்புஇல்லாமலேயே தயாரித்து 1917-ல் சர்க்காரிடம் சமர்ப்பித்தன.

ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து ஒற்றுமையாக

ஓர் சீர்திருத்தத்தைக்கேட்டால் தருவதாக இன்று ஐம்பம டிக்கும் சர்க்கார் அன்று 1917-ல் இதைக்கவனிக்க மறுத்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்டாக்ஹோம் இறக்குமதி.

எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் எல்லா சமூகங்களும் ஏகோபித்து, 1916-ம் வருஷம் தயாரித்து, பிரிட்டிஷ் சர்க்காருக்கு சமர்ப்பித்த 1917-ம் வருஷத்தில் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் புரபஸர் அப்துஸ் ஸத்தார்கேரி என்பவரும், டாக்டர் அப்துல் ஐப்பார்கேரி என்பவரும் ஸ்டாக்ஹோமில் கூடிய அகில உலக ஸோஷியலிஸ்ட் மகாநாட்டின் காரியதரிசியாக இருந்த **காமிலே ஹ்யுஸ்மான்**ஸோடு கலந்தாலோசித்ததின் பேரில் இந்தியப் பிரிவினை யோசனையைக் கிளப்பினார்கள்.

இந்தியாவை ஹிந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என்று பிரிப்பதற்கான யோசனை இவ்விரண்டுபேராலும் தோற்றுவிக்கப்பட்டது. இவ்விரண்டுபேரும் இந்தியாவிலுள்ள எந்த முஸ்லீம்களேயும் கலந்தாலோசித்ததாகத் தெரியவில்லை. இங்கிருந்து மகாநாட்டிற்குப் போகும்போதும் இந்தப்பிரிவினை யோசனை இவ்விருவர்களுக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே முதன்முதலாக இத்துண்டாடும் யோசனை எங்கே கிளப்பப்பட்டதென்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். ஆனல் இப்பிரிவினை திட்டத்தை அப்பொழுது இந்தியாவில் விதைக்கமுடியவில்லை.

## பாகிஸ்தான்?

அகிலஉலக இஸ்லாமிய நாடுகளின் சமஷ்டியை ஏற்ப

டுத்தும் நோக்கத்தோடு முதன்முதலாக மௌலானு ஜமாலுத்தீன் ஆப்கானி அவர்கள் பாகிஸ்தான் யோசனையை வெளியிட்டார். அந்த யோசனைக்கும் இந்தியாவைத்துண்டாடும் யோசனைக்கும் சம்பந்தமில்லையெனினும் முஸ்லீம் லீகர்கள் ஒரு சம்பந்தத்தையுண்டாக்கிவிட்டனர். முதன் முதலில் பாகிஸ்தான் யோசனைக் கிளப்பப்பட்டது இந்தியாவைத் துண்டாடும் நோக்கத்தோடல்ல.

## ஒற்றுமையின் தூதர்.

பல சந்தர்ப்பங்களில் முஸ்லீம்களை காங்கிரஸில் சேரவொட்டாமல் தடுக்கச்செய்த சர்க்கார் முயற்சிகளெல்லாம் வீணுயின. சதா சமூகச்சச்சரவுகளால் இந்தியா சீர்குலைய சதி செய்தவர்களின் எண்ணத்திற்கு மாருக 1917-ம்வருஷம் முதல் 1921-ம் வருஷம்வரை காங்கிரஸும், லீகும் தேச நன்மைக்கு ஒன்றுசேர்ந்து உழைத்தன. அக்காலத்தில் ஜனுப் ஜின்னு ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக் கொண்ட சிரத்தைக்காக அவரை ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையின் தூதுவரென எல்லோரும் அழைத்தார்கள்.

## கிளர்ச்சிகளும் ஜின்னுவும்.

ஆனுல் கிலாபத் இயக்கஆரம்பத்தில் ராஜப்பிரதிநிதிக்கு கிலாபத் கோஷ்டியினரால் அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் கையெழுத்திட்டதைத் தவிர ஹோம்ரூல் கிளர்ச்சியிலாவது, ரவுலட் ஆக்ட் கிளர்ச்சியிலாவது, அல்லது கிலாபத் கிளர்ச்சியிலாவது ஜனுப்ஜின்னுபங்கெடுத்துக்கொள்ளவில்லை. தம்முடைய சமூகத்திற்கு பெரும் தீங்கிழைக்கப் பட்டதாக நம்பினுரேயொழிய அதை நிவர்த்திக்க ஓர் வழியும் சொல்லவில்லை. எந்தக் காலத்தில் ஒவ்வொரு தனி நபருடைய உத

வியும் தேவையோ அந்தக் காலத்தில் அவர் தன் சமூகத்தைக் கைவிட்டு விட்டார்.

## சர்வகட்சி மகாநாடு

1922-ம்வருஷம் காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்தி சர்க்காரோடு சமரசம் செய்துகொள்ள ஒருவழியைக் கண்டு பிடிக்க ஒரு சர்வகட்சி மகாநாடு (மாளவியா மகாநாடு) கூடிற்று. அதற்கு ஜனுப் ஜின்ஞு காரியதரிசியாக இருந்தார். இச்சமயத்தில் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் எப்படி வேலை செய்கிறது என்ற விசாரணைக்கேற்பட்ட மட்டிமன் கமிட்டியிலும், ராணுவத்தை இந்திய மயமாக்குவதற்காக ஏற்பட்ட ஸ்கீன் கமிட்டியிலும் ஓர் அங்கத்தினராக ஜனுப் ஜின்ஞு சர்க்காரால் நியமிக்கப்பட்டார்.

இவ்விரண்டு கமிட்டிகளும் செய்த சிபார்சுகளையும் கூட சர்க்கார் நிராகரித்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

## ஜனுப் ஜின்ஞுவின் துறவு.

இக்காலத்தில் ஜனங்களிடையே தோன்றிய மனப்பான்மை பிடிக்காமல் ஜனுப் ஜின்ஞு, காங்கிரஸ், ஹோம்ரூல் லீக், முஸ்லீம் லீக் முதலிய ஸ்தாபனங்களிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்தியாவின் பெரும் நகரங்களிலெல்லாம் ஹிந்து முஸ்லீம்கலகங்கள் ஏற்பட்டன. கலகங்கள் உண்டாவதற்கு முன் ஹிந்து முஸ்லீம்கள் பிணக்கு ஒன்றுமில்லாமலேயே ஒற்றுமையாக இருந்தார்கள். அநேகமாக எல்லா முஸ்லீம் தலைவர்களும் காங்கிரசில் அங்கத்தினராக இருந்தார்கள்.

## மகாத்மாஜீயின் உபவாசம்.

இக்கலகங்களைக்கண்டுகலங்கி மகாத்மாஜி 21 தினங்கள் பட்டினி கிடந்தார். காந்திஜியின் இச்செய்கையைக்கேட்டுத் திகைத்துப்போன தலைவர்கள், மௌலானா முஹம்மத்அலியின் அழைப்பிற்கிணங்க 1924-ம்வருஷம் செப்டம்பர் மாதம் 26 தேதி கூடினார்கள்.

இந்த ஒற்றுமை மகாநாட்டில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள், பார்ஸிகள், சீக்கியர்கள் கிருஸ்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தார்கள். சில ஆங்கிலேயரும் வந்திருந்தனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காந்திஜியும் 21 நாள் உண்ணாவிரதத்தை முடித்தார். ஆனால் கலகங்கள் ஓய்ந்தபாடில்லை. வரவர கலகங்கள் வளர்ந்து கொண்டே வந்தன.

## வகுப்புக்கலகங்களும் சைமன் கமிஷனும்.

1927-ம்வருஷம் அக்டோபர் மாதம் 27ந்தேதி மறுபடியும் ஒரு ஒற்றுமை மகாநாடு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரால் கூட்டப்பட்டது. அதில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானங்கள் அப்படியே காங்கிரஸால் ஒப்புக்கொள்ளப்பட்டன. கலகங்கள் உச்சஸ்தானத்தை அடைந்த 1927-ம்வருஷம் நவம்பர் மாதத்தில்தான் சைமன் கமிஷன் வருவதாக அறிவிக்கப்பட்டது.

## ஒன்று இரண்டானது!

மரணப்படுக்கையிலிருந்த முஸ்லீம் லீகிற்கு புத்துயிர் உண்டாயிற்று. ஆனால் "தான் தான் உண்மை முஸ்லீம்லீக்" என்று கூறிக்கொண்டு இரு ஸ்தாபனங்கள் கிளம்பின.

1927-ம்வருஷம் டிசம்பர்மாதம் 30உ இரண்டுமுஸ்லீம் லீகுகளும் தனித்தனியாகக் கூடின. மௌல்வி (இப்பொழுது ஸர்) முகம்மத் யாகூப் தலைமையில் கல்கத்தாவில் கூடிய முஸ்லீம் லீக், ஜனுப் அலி இமாம் அவர்களால்பிரேரேபிக்கப்பட்ட சைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

மற்றொரு லீக் வைஸ்ராய் நிர்வாகசபை அங்கத்தினராயிருந்த ஸர். முஹம்மத் ஷபீ தலைமையில் கூடியது. "சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக்கூடா"தென்ற தீர்மானத்தை சொற்ப ஓட்டுகள் வித்தியாசத்தால் நிறைவேற்றியது. ஓட்டுகளை மறுபடியும் எண்ணவேண்டுமென்று தோற்றுப்போனவர்கள் கேட்டுக்கொண்டும் அனுமதிக்கப்படவில்லை. டாக்டர் முகம்மத் ஆலம், மௌலானு அப்துல் காதர், ஜனுப்அப்ஸல் ஹக், மௌல்வி மஸ்ஹர்அலி அஸ்ஹர், மௌல்விமுஹம்மத், ஷரீப் போன்றவர்கள், தலைவரின் செய்கையைக் கண்டித்து கூட்டத்தில் பெரும்பாலோர் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தை ஆதரித்தார்களென்று ஓர்அறிக்கைவெளியிட்டார்கள்.

டாக்டர், எம். ஏ. அன்சாரி அவர்கள் தலைமையில் காங்கிரஸும் பகிஷ்காரத்தீர்மானத்தை நிறைவேற்றியது.

## சூழ்ச்சி.

இதுவிஷயமாய் லார்ட்பர்க்கன்ஹெட், ராஜப்பிரதிநிதி லார்ட் இர்வினுக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்ததை இங்கு குறிப்பிடவேண்டியது அத்தியாவசியமாகும்.

"கமிஷனை பகிஷ்கரிக்காதவர்களில் முக்கியமானவர்

களையெல்லாம் குறிப்பாக முஸ்லீம்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களையும் பார்க்கும்படி சைமனுக்கு நான்யோசனை கூறுகிறேன். பிரதிநிதித்துவம் வாய்ந்த முஸ்லீம்லீகோடு சைமன் நடத்தும் பேச்சு வார்த்தைகளையெல்லாம் நன்முக விளம்பரப்படுத்தவேண்டும். இதைக்கண்டு தங்களுக்குப் பாதகமாக அறிக்கை வெளியிட்டு முஸ்லீம்களின் பலத்த உதவியை தேடிக்கொள்வார்களோ என்று ஹிந்து சமூகம் கலங்கவேண்டும்.''

## வலையில் சிக்கவில்லை.

இருந்தாலும் முஸ்லீம் தலைவர்கள் இந்த வலையில் சிக்கிக்கொள்ளவில்லை. சைமன் கமிஷன் பகிஷ்காரம் எவ்வளவு வெற்றிகரமாக நடந்ததென்பதை வாசகர்கள் நன்கறிவார்கள்.

## மீண்டும் சர்வகட்சி மகாநாடு.

இப்பகிஷ்காரத்திற்குப் பிறகு லக்ஷ்மணபுரியில் மற்றொரு சர்வகட்சி மகாநாடு கூடி **நேருயாதாஸ்தை** சில மாறுதல்களுடன் ஒப்புக்கொண்டது. இம்மகாநாட்டில் கீழ்க்கண்ட ஸ்தாபனங்கள் கலந்துகொண்டன. காங்கிரஸ், ஹிந்துமகாசபை, முஸ்லீம்லீக், அகிலஇந்திய லிபரல்சமஷ்டி, மத்திய சீக்கியர் சங்கம், மத்திய கிலாபத் கமிட்டி, ஹோம் ரூல்லீக், அகில இந்திய இந்தியக்கிருஸ்தவர் மகாநாடு, ஜமீயத் துல்-உலமா-யெ-ஹிந்த், அகில இந்திய சமஸ்தானப்பிரஜைகள் மகாநாடு, மாளவியா தேசீயக்கட்சி, பிரிட்டிஷ் இந்தியக் கூட்டம், கல்கத்தா இந்தியன் அஸோஸியேஷன், மகாராஷ்ட்ர வர்த்தகச்சங்கம், சிந்து தேசீயசபை, தக்ஷிணசபா, சாவதான் பாரத சங்கம்.

இம்மகாநாட்டில் பல பிரபலஸ்தர்கள் கலந்து கொண்டனர் என்று சொல்லத்தேவை இல்லை. இம்மகாநாட்டில் ஒவ்வொரு தீர்மானமும், ஒருஹிந்துவாலும், ஒருமுஸ்லீமாலும் பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## உண்மை உணர்ச்சி.

வகுப்புக் கலகங்களில் களைப்படைந்து ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்ற உண்மையான ஆர்வம் 1927—28-ம் வருஷங்களில் தாண்டவமாடிற்று. வகுப்புக்கலகங்கள் பயன் தராதென மக்கள் நன்குணர்ந்தனர்.

காங்கிரஸ் சென்னையில் கூடி வகுப்புக்கலவரங்களைப் பற்றித் தீர ஆலோசித்து தீர்மானங்களை நிறைவேற்றியது. முஸ்லீம்களில் 90 சதவிகிதம்பேர் சென்னை காங்கிரஸ் தீர்மானங்களை ஆமோதிக்கிறார்களென்று முஸ்லீம் லீக் தலைவர் அப்பொழுது நடந்த முஸ்லீம் லீக் வருஷாந்திரக் கூட்டத்தின் தலைமைப் பிரசங்கத்தில் கூறினார்.

## எச்சரிக்கை

காங்கிரஸ் கல்கத்தாவில் கூடி லக்ஷ்மணபுரி சர்வகட்சி மகாநாட்டில் முடிவு செய்த தீர்மானங்களை அப்படியே ஒப்புக்கொண்டு மக்களின் ஏகமனதான இந்த முடிவுகளை ஒப்புக்கொள்ளும்படி சர்க்காரை அறைகூவி அழைத்தது. இம்முடிவுகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிடில் மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும் எச்சரிக்கைசெய்தது.

ஒன்று சேர்ந்து கேட்டால் சுதந்திரமளிப்பதாக இப்பொழுது பறைசாற்றி வரும் பிரிட்டிஷார் ஏகோபித்து இரண்டாவது தடவையாகக் கோரியதையும் அப்பொழுது சட்டை செய்யவில்லை.

## ஜனுப் ஜின்னுவின் தோற்றம்.

இச்சமயம்தான் ஜனுப் ஜின்னு இங்கிலாந்திலிருந்து திரும்பினுர். வந்ததும் நேரு யாதாஸ்தைக் கண்டிக்க ஆரம்பித்தார். முஸ்லீம் லீகில் சேர்ந்தார். பிரசித்தி பெற்ற 14 பாயிண்டுகள் தோன்றின.

## போராட்டம்.

சர்க்கார், இந்த அகில இந்திய சர்வகட்சி கோரிக்கைக்கும் இணங்காததால் மகாத்மா காந்தியின் தலைமையில் பெரும் போராட்டத்தை காங்கிரஸ் ஆரம்பித்தது. சர்வ கட்சி கோரிக்கைக்கு சர்க்கார் இணங்காததால் சகலத் தியாகமும் செய்து சர்க்காரோடு போராடின ஸ்தாபனம் காங்கிரஸ் ஒன்றுதான் என்பதை நேயர்கள் உணரவேண்டும்.

## ஒற்றுமையும் சிதறலும்.

இப்போராட்டத்தின் நடுவில்தான் முதல்வட்டமேஜை மகாநாடு கூடிற்று. பிறகு காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இச்சமயத்தில் தேசீய முஸ்லீம்களுக்கும், வகுப்பு வாத முஸ்லீம்களுக்குமிடையே போபால்நவாப் முயற்சியால் ஒரு சமரசம் ஏற்பட்டது. இது அதிகாரத்திலுள்ளவர் கட்குப் பிடிக்கவில்லை. ஆகவே ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை அங்கத்தினராகவிருந்த ஸர்.பஸ்லேஹுஸேன் வெளிப்

படையாகத் தலையிட்டு இச்சமரஸத்தைக்குலைத்தார் என்பது பிரசித்தம்.

## வட்டமேஜை மகாநாடு.

காந்தி-இர்வின் பேச்சு வார்த்தைகளின்படி காந்திஜி காங்கிரஸ் பிரதிநிதியாகவும், பண்டித மாளவியா தேசீய ஹிந்துக்கள் பிரதிநிதியாகவும், டாக்டர் எம். ஏ. அன்ஸாரி தேசீய முஸ்லீம்களின் பிரதிநிதியாகவும், ஸ்ரீமதி சரோஜனி நாயுடு பெண்கள் பிரதிநிதியாகவும் அனுப்ப முடிவு கட்டப் பட்டது. ஆனால் கடைசி நிமிஷத்தில் டாக்டர் அன்ஸாரி பெயரை சர்க்கார் கைநழுவ விட்டுவிட்டனர் என்பதையும் தேசீய முஸ்லீம்கள் சார்பாக ஒருவரையும் அனுப்ப சர்க்கார் இஷ்டப்படவில்லை என்பதையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

ஷை வட்டமேஜை மகாநாட்டில் "சிறுபான்மைக் கமிட்டி" ஒன்று நிறுவி, "சிறுபான்மையோர் ஒப்பந்தம்" என்ற திட்டத்தை வகுத்தார்கள். இந்த சிறுபான்மைக் கமிட்டியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை வகுப்புவாரி யாகக் கீழ்க்கண்டவாறு:—

| | | | |
|---|---|---|---|
| ஹிந்துக்கள் | 10 | சர்க்கார் | 6 |
| முஸ்லீம்கள் | 13 | பிரிட்டிஷ் மக்கள் | 2 |
| தாழ்த்தப்பட்டோர் | 2 | ஆங்கிலோ இந்தியர் | 1 |
| பார்ஸி | 1 | தொழிலாளர் | 2 |
| இந்தியக்கிருஸ்தவர் | 2 | பெண்கள் | 3 |
| சீக்கியர் | 2 | | |

மொத்த ஸ்தானங்கள் 44

## அபயப்பிரதானம்!

இந்த ஒப்பந்தத்தைப்பற்றி சில பிரிட்டிஷ் பிற்போக்காளர்கள் விடுத்த சுற்றறிக்கையில் "முஸ்லீம்கள் சரியான நிலையை அடைந்து விட்டார்கள். சிறுபான்மையோரின் ஒப்பந்தமும் அரசாங்கத்தாரின் கொள்கையும் அவர்களைப் பிறழாது பாதுகாக்கும்" என்று எழுதினார்கள்.

இந்த வட்டமேஜை மகாநாட்டிலும், வகுப்புவாத முஸ்லீம்கள் கேட்ட எல்லா கோரிக்கைகளுக்கு இணங்குவதாகவும், காங்கிரஸோடு ஒத்துப்போகும்படியும் அவர்களைக் காங்கிரஸ் கேட்டு ஒரு சமரஸத்திற்கு வரும் தருணத்தில் அவசர அவசரமாக ஒரு நைட் பட்டம்பெற்ற முஸ்லீம் பிரபலஸ்தரை லண்டனில் இறக்குமதி செய்யப்பட்டதின் பேரில் இப்பேச்சு வார்த்தைகள் குலைந்தன.

## ஒத்துக்கொண்ட உண்மை.

ராம்ஸே மாக்டோனல்ட் பிரதம மந்திரியாவதற்கு முன் "இப்பரந்தகண்டத்தை ஆள பிரிட்டிஷ் சாமர்த்தியத்திலிருந்து உண்டானதுதான் வகுப்புவாதப் பிரச்னை" என்று பேசிவந்தார். ஆனால் அவரே பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக வந்ததும் "வகுப்புத்தீர்ப்பை அளித்ததின்மூலம் இப்பிரச்னையை இன்னும் மோசமானதாக ஆக்கிவிட்டார். இந்த வகுப்புத்தீர்ப்பு மற்றவர்களுக்குக்கெடுதியாக இருந்தபோதிலும்கூட முஸ்லீம் வகுப்புவாதிகளைத் திருப்திசெய்வதற்காக காங்கிரஸ் இது விஷயத்தில் நடுநிலைமை வகித்தது. இதன் பயனாக பண்டிட் மாள்வியா கோஷ்டியாரின் ஒத்துழைப்பைக் காங்கிரஸ் இழந்துவிட்டது.

## பிரிவினைக்கு ஜின்னாவின் எதிர்ப்பு.

1930-ம்வருஷம் முஸ்லீம்-லீக் மகாநாட்டில் தலைமை வகித்த டாக்டர் முஹமத் இக்பால் பிரிவினைத் திட்டத்தை மறுபடியும் கிளப்பினார். முதல் வட்டமேஜை மகாநாட்டில் இந்திய சீர்திருத்தக் கமிட்டியில் வாக்குமூலம்கொடுத்த முஸ்லீம்-லீக், முஸ்லீம் மகாநாட்டுப் பிரதிநிதிகள், இவர்களை ஸர் ரெயினால்ட் கிரடாக் "பிரிவினைத் திட்டத்தைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்" என்று கேட்டதற்கு இரண்டு கோஷ்டிகளுடைய தலைவர்களும் "அது ஒரு சிறுபிள்ளைத் தனமான யோசனை; பொறுப்புவாய்ந்தவர்கள் அதைச் சொல்லவில்லை. நாங்கள் அதைப்பரிசிலனை செய்துபார்த்த தில் அது ஒரு மனக்கோட்டை, நடைமுறைக்கு உத வாதது என்ற முடிவுக்குவந்தோம்" என்று சொன்னார்கள். அப்பொழுது ஜனாப் ஜின்னா அவர்களும் இந்தப்பிரிவினை யோசனையை எதிர்த்தார். 1930-ம்வருஷம் நவம்பர் மாதம் 20 தேதி வட்டமேஜை மகாநாட்டில் ஜனாப் ஜின்னா பிரிவினை யைக் கண்டித்துப் பேசியதை மீண்டும் ஓர்முறை வாசகர்கள் படித்துப்பார்க்க வேண்டும்.

டாக்டர் இக்பால் முஸ்லீம் லீகில் பிரிவினைப் பிரச்னை யைக் கிளப்பியதையும், வட்டமேஜைமகாநாட்டிற்குச்சென் றிருந்தமுஸ்லீம்களிடத்தில் ஆங்கிலேயர்கள்அதைத்திரும்பத் திரும்ப 'விவாதித்ததையும் சேர்த்துக் கவனித்தால் இப்பிரி வினை சூழ்ச்சிக்குத் தூபம் போட்டதும், போட்டுக்கொண் டிருப்பதும் யார் என்பது நன்கு விளங்கும்.

## லீகின் தேய்வு.

1931-ம்வருஷத்திலிருந்து 1933-வரை தேசீய முஸ்லீம்களுக்கும், வகுப்புவாத முஸ்லீம்களுக்கும் இடையே ஓர் போட்டி நடந்தது. அதில் வகுப்புவாத முஸ்லீம்களுக்கு செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. முஸ்லீம் லீக் பெயரளவில்தான் ஜீவித்து வந்தது. இதனுடைய வருஷாந்திரக் கூட்டம் ஓர் வீட்டில் நடந்துவந்தது. இதற்கு 100 பேர் கூட ஆஜராகவில்லை. ஆனல் அகிலஇந்திய தேசீய முஸ்லீம் மகாநாடு வெகு விமரிசையாக நடந்தது.

1931-ம் வருஷம் ஏப்ரல்மாதம் 18ந்தேதி இம்மகாநாடு ஜனுப் அலி இமாம் தலைமையில் கூடிற்று. எல்லா மாகாணத்திலிருந்தும் முஸ்லீம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இம்மகாநாட்டில் முஸ்லீம் தியாகிகளைப்பாராட்டி ஒருதீர்மானம் நிறைவேற்றினுர்கள்.

## கூட்டுத்தொகுதி வேண்டும்.

அத்தீர்மானத்தில் மகாத்மாஜியின் போராட்டத்தில் சுமார் 12000 முஸ்லீம்களுக்குமேல் கலந்துகொண்டு சிறை சென்றதையும், அநேக முஸ்லீம்கள் உயிர் இழந்ததையும், அங்கஹீனப்பட்டதையும் குறிப்பிட்டிருந்தார்கள். அம்மகாநாட்டில் தனித்தொகுதி கூடாதெனவும், கூட்டுத்தொகுதி வேண்டுமெனவும் முடிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

இச்சமயத்தில் வகுப்புவாத முஸ்லீம்கள் விடுத்த நீண்ட அறிக்கையையும், அதற்கு தேசீய முஸ்லீம்கள் விடுத்த பதிலையும் மீண்டும் படிப்பது பயன்தரும்.

இதற்குப்பிறகு பண்டித மதன்மோகன் மாளவியா, மௌலானு அபுல்கலாம்ஆஸாத், மௌலானுஷவுக்கத் அலி, டாக்டர் சைய்த் மஹமூத் இவர்கள் சமரஸத்திற்காக அரும் பாடு பட்டதும் அதற்கு சர்க்கார் தடையாக இருந்ததும் சரித்திரப்பிரசித்தி பெற்றவை.

## ஒப்பந்த முறிவு.

1935-ம் வருஷத்தில் டாக்டர் ராஜேந்திரபிரசாத், ஜனுப் ஜின்னுவோடு பேச்சுவார்த்தைகள் நேரில் நடத்தினர். ஓர் திட்டம் தயாரித்து அவர்கள் கையெழுத்திடும் சமயத்தில் "அந்தத் திட்டத்திற்கு இன்னும் மற்ற ஸ்தாபனங்களின் தலைவர்களும் கையெழுத்திடாவிடில் தான் ஒப்புக்கொள்ள முடியா" தென ஜனுப் ஜின்னு ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்கிக்கொண்டார். டாக்டர் ராஜேந்திரபிரசாத், ஒப்பந்த முறிவிற்குக் காரணத்தைவிளக்கி ஓர் அறிக்கைவிடுத்தார். அதை ஜனுப் ஜின்னு மறுத்தார். காங்கிரஸ் காரியதரிசி, "ராஜன் பாபுவின் அறிக்கை உண்மை விஷயங்களைக்கொண்டதென்றும், அதை உண்மையல்லவென்று நிரூபிக்க ஜின்னுஸாஹிப் முன்வருவாரா" எனவும் அறைகூவி அழைத்தார். அதற்கு ஜனுப்ஜின்னு மௌனம் சாதித்துவிட்டார்.

## ஜின்னுவின் முஸ்தீப்பு.

இந்தப் பேச்சுவார்த்தைகள் முறிந்தபிற்பாடு ஜனுப் ஜின்னு முஸ்லீம் லீகை பலப்படுத்த முயன்ருர். மற்ற முஸ்லீம் ஸ்தாபனங்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தினர். முஸ்லீம் லீகின் சட்டதிட்டங்களை மாற்றினர்.

1935-ம் வருஷ அரசாங்க திட்டத்தைக் கண்டித்தார்

ஜனநாயக சர்க்கார் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## பிரமுகர்கள் வெளியேற்றம்.

1936-ம்வருஷம் பம்பாயில்நடந்த முஸ்லீம்லீகின் தலைவர் "காங்கிரசின் கொள்கைக்கும், முஸ்லீம் லீகின் கொள்கைக்கும் யாதொரு வேற்றுமையுமில்லை" யென்று பேசினர். ஆனல் கொஞ்சகாலத்தில் மாற்றின அந்த சட்டதிட்டங்களெல்லாம் பெயரளவில்தானென்றும் காரியாம்சத்தில் செய்வதற்கில்லையென்றும் கண்டு அத்தலைவரும் ஸர். வாஸீர் ஹுஸேனும், ஜமீயத்துல்-உலமா-யே-ஹ்ந்த் பிரமுகர்களும் லீகிலிருந்து விலகிக்கொண்டனர்.

## வெல்லிங்டன் ஜம்பம்.

ராஜப்பிரதிநிதி லார்ட்வில்லிங்டன், காங்கிரஸை நசுக்கிவிட்டதாகவும், சட்டசபைகளைக் கைப்பற்ற காங்கிரஸால் முடியாதென்றும் ஜம்பமடித்துக்கொண்டு இந்தியா மந்திரி ஸர். சாமுவேல்ஹோருக்குத் தெரிவித்தார். மத்திய சட்டசபைத்தேர்தல் நடந்தது. ராஜப்பிரதிநிதியின் நம்பிக்கைப் பொய்த்தது. காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் தேசியவாதிகளும் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பொழுது அகில இந்திய முஸ்லீம் யூனிட்டி போர்டும் இந்தத் தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்திற்று. ஆனல் ஏழே பேர்தான் தேர்தலில் வெற்றிபெற்றார்கள் ஜனப் ஜின்னு இந்த ஸ்தாபனத்தின் பெயரால் தேர்தலுக்குநிற்க இஷ்டப்படவில்லை. ஆகவே அவர் ஓர் சுயேச்சைவாதியாக நின்று தேர்தலில் வெற்றி பெற்றார்.

## காங்கிரஸின் வெற்றி.

1937-ம் வருஷம் நடந்த தேர்தலில் 11-மாகாணங்களுள் 8-மாகாணங்களில் காங்கிரஸிற்குப் பெருமிதமான வெற்றி. மற்ற மாகாணங்களில் பலமான தனிக்கட்சி.

முஸ்லீம் மாகாணங்கள் நான்கையும், (அதாவது பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறம், ஸிந்து, வங்காளம்) எடுத்துக் கொண்டால், 94-சத விகித முஸ்லீம்களுள்ள வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸிற்குப் பெருமிதமான வெற்றி. காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டது. லீகிற்கு ஆதரவில்லை. பஞ்சாபில் 84 முஸ்லீம் அங்கத்தினர்களில் ஒருவர்தான் லீகின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லீக் மந்திரிசபையும் இல்லை. ஸிந்துவில் 33 பிரதிநிதிகளில் ஒருவராவது லீகின் பெயரால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அங்கும் லீக்மந்திரிசபை இல்லை. வங்காளத்தில் பலத்த கட்சி காங்கிரஸ். அதற்கடுத்தது கிருஷிக் பிரஜா கட்சி. முஸ்லீம்லீக் கடைசி. இங்கே எந்ததனிக்கட்சியும் தனித்து மந்திரிசபையை அமைக்க முடியவில்லை. பிரஜா கட்சி முதலில் லீகோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டும், பிறகு அதை விட்டு மற்றவர்களுடன் ஒப்பந்தம்செய்துகொண்டும் மந்திரி சபையை ஸ்தாபித்தது.

## குறிப்பிடத்தக்கது.

முஸ்லீம்கள் பெருவாரியாக இருக்கும் மாகாணங்களில் லீகின் நிலைமை இவ்வாறிருக்க, ஹிந்துக்கள் பெருவாரியாக இருக்கும் மாகாணங்களில்தான் லீகர்கள் அதிக வெற்றியடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தன் பிரயாசையால் உயிர்ப்பிக்கப்பெற்ற முஸ்லீம் லீகிற்கு எங்கும் பெரும்பான்மை ஸ்தானங்கள் தேர்தலில்கிடைக்கா ததைக்கண்டு ஜனுப்ஜின்ஞ மிகுந்த கோபங்கொண்டார். லீகின் சட்டதிட்டங்கள் காற்றில் பறந்தன. தேசமுன்னேற் றத்துக்கான திட்டங்களைவிட்டு வந்தேமாதரம் பாடக்கூடா தென்ற சில்லரைப் பிரச்னைகளைக் கிளப்புவதில் ஈடுபட்டார்.

## பழைய பேச்சு.

பஞ்சாபிலுள்ள யூனியனிஸ்ட் கட்சியும் லீகுடன் சேர்ந் துகொண்டது. இந்தக்கட்சியைப்பற்றி ஜனுப் ஜின்ஞ ஒரு சமயத்தில் "அரசாங்கத்தின் வேலையாட்கள் இந்த நைட்க ளும், நவாபுகளும்; இவர்களால் மக்களுக்கு யாதொரு நன்மையும் கிடைக்காது" எனக் கூறியிருக்கிறார்.

## சமரஸப்பேச்சு முறிவு.

சாசுவதமான ஹிந்து—முஸ்லீம் சமரஸம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தினுல், மகாத்மா காந்தி, ஸ்ரீசுபாஷ் பாபு, மௌலாஞ அபுல்கலாம் ஆஸாத், பண்டித ஜவஹார் லால் நேரு இவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்திஞர்கள். ஜனுப் ஜின்ஞவோடு நேருஜி நடத்திய கடிதப்போக்கு வரத்து சரித்திரப்பிரசித்தி பெற்றது. "முஸ்லீம் லீகின் கோரிக்கைதான் என்ன?" என்று பண்டிதநேரு கேட்டதற்கு ஜனுப் ஜின்ஞ பதிலளிக்க மறுத்துவிட்டார். நேருஜி வற் புறுத்தவே பத்திரிகை வெட்டுகளை (News papper cuttings) அனுப்பி படித்துக்கொள்ளச் சொன்ஞர். பண்டித நேரு அவற்றையெல்லாம் படித்து "இவ்வளவு தானே உங் கள் கோரிக்கைகள்" என்று கேட்டதற்கு இன்னும் உண்டு

எனப் பதிலளித்தார். மேலும் வற்புறுத்திக் கேட்டவுடன் "முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனம் லீக்தான்" என்று முதலில் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஜனுப் ஜின்ஞ கூறினுர்.

## மறக்க முடியுமா ?

இஸ்லாமிய மார்க்க பண்டிதர்களின் சபையாகிய ஜமீயத்துல்-உலமா-யே-ஹிந்த், போராட்டக் காலங்களில் மிகப்பெரும் பங்கை ஏற்றுக்கொண்ட அஹ்ரார்கள், எல்லைப் புற குதாயீ கித்மத்கார்கள், மோமின்கள் இவர்களை எல்லாம் காங்கிரஸ் எவ்வாறு மறக்கமுடியும் ?

சமரஸத்திற்கு வழி தேடத்தேட ஜனுப் ஜின்ஞ கோரிக்கைகளை பெருக்கிக்கொண்டே போவதைக்கண்டு 'தேசத்தில் ஒற்றுமை அவசியம் என்பதைக் காங்கிரஸ் கருதி தனித்தொகுதியின்மூலம் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந் தெடுக்கப்படும் முஸ்லீம்களின் யோசனைக்கு அப்படியே இணங்கி அவர்கள் வேண்டும் அனைத்தையும் கொடுத்து விடுவது' என்று தீர்மானித்தது. இதற்கு ஜனுப் ஜின்ஞ "முஸ்லீம்களுக்குப் பெரும் தீங்கையுண்டாக்கக்கூடிய யோசனை" என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

## திகைப்பு.

ஜனுப் ஜின்ஞவுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. காங்கிரஸ் மந்திரி சபைகளின் போக்கைக்கண்டு நடுங்கிய ஜமீன்தரார்களும் சமஸ்தானுதிபதிகளும் தங்களுக்கு ஆபத்து வராமல் இருக்கவேண்டுமென்பதை உத்தேசித்து

காங்கிரஸின் பலத்தை யொடுக்க ஓர் வழியைக்கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. முஸ்லீம் லீகின் தலைவர் ஜனுப் ஜின்னு வும் அதற்கு வழியைத்தேடிக்கொண்டிருந்தார். இரு சக்தி களும் ஒன்றுசேர்வதில் ஆச்சரியமில்லை. ஏராளமான முஸ்லீம் ஜமீன்தார்கள் லீகில் சேர்ந்தார்கள். பல முஸ்லீம் சமஸ்தானுதிபதிகளும் லீகிற்கு அனுதாபம்காட்டினர். முஸ் லீம்லீக் ஜமீன்தார்களின் ஸ்தாபனமாக மாறியது. சுதந்திர இந்தியாவில் ஜமீன்தார்களும், சமஸ்தானுதிபதிகளும் இப்போதிருக்கும் தங்கள் நிலைமையையே ஸ்திரப்படுத்திக் கொள்ளவேண்டுமென நினைத்துவிட்டனர். அதற்கு இந் திய சுதந்திரம் தடைபடுத்தப்படவேண்டும். அதற்கு ஓர் யோசனையும் கண்டு பிடிக்கப்பட்டது. ஜனுப் ஜின்னுவினுல் கண்டிக்கப்பட்ட பிரிவினைப்பிரச்னை மீண்டும் கிளப்பப்பட் டது. பாமர முஸ்லீம்களின் ஆதரவுதேட வேண்டிய அவசி யத்தையுணர்ந்தனர். "தங்கள் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் முஸ்லீம்களும் தங்களை வெறுக்கிருர்கள்" என்பதை ஜமீன்தார்கள் நன்குஉணர்ந்துகொண்டனர். பாமர முஸ்லீம் களை தங்கள் பக்கத்தில் சேர்த்துக்கொள்ள "முஸ்லீம்களே! ஒன்று சேருங்கள். இஸ்லாத்திற்காபத்து" என்ற கோஷம் கிளப்பப்பட்டது.

## புகுத்தப்பட்டது.

1940-ம் வருஷம் லாகூரில் நடைபெற்ற லீகின் வரு ஷாந்திர மகாநாட்டில் சுதந்திர திட்டத்திற்குப்பதிலாக 'பாகிஸ்தான்' என்ற பெயருடன் இப்பிரிவினைத்திட்டத்தை லீகில் புகுத்தினர்.

## பிரிவினையும், பாலஸ்தீனமும்.

1906-ம் வருஷம் முதல் 1940வரை 'ஒன்றுபட்ட இந்தியா' என்று பிரசாரம் செய்தவர் தனது வயது முதிர்ந்த காலத்தில் இந்தியப்பிரிவினைப்பேச்சைக் கிளப்ப நேர்ந்தது இந்தியாவின் துர்ப்பாக்கியமாகும்! ஆனால் இவர்களே **பாலஸ்தீன் பிரிவினையை** எதிர்த்து கிளர்ச்சி செய்ததை மறந்துவிட்டார்கள். பாலஸ்தீன் பிரிவினையைப் பிரிட்டிஷார் தான் வற்புறுத்தினார்கள் என்பதை ஒருவரும் மறந்துவிடக் கூடாது. பல அம்சங்களில் அதையே ஒத்திருக்கும் இந்தியப்பிரிவினையை இந்திய முஸ்லீம்கள் எப்படி ஆதரிக்க முடியும்? பிரிவினைக்குப்பிரிட்டன் ஆதரவு காட்டுவதேன் என்பதை ஊன்றிக்கவனித்தால் நன்குவிளங்கும். இந்தப் பாகிஸ்தான் பிரேரபணை ஜனாப் **பஸ்லுல்ஹக்** அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு லாகூர் மகாநாட்டில் நிறைவேறியது. தீர்மானத்தைப் பிரேரேபித்த **ஜனாப் ஹக்** இன்று அதைப் பற்றிப்பேச்சே எடுப்பதில்லை. மகாநாட்டை நடத்திய **ஸர். சிக்கந்தர் ஜின்னா சாஹிபோடு** முரண்படுகிறார்.

## விளக்க கமிட்டி.

பாகிஸ்தானைப்பற்றி தீர்மானித்தபிறகு அதைவிளக்கிச் சொல்ல ஒருகமிட்டி நியமிக்கப்பட்டது. ஆனால்அக்கமிட்டி நாளது வரையில் கூடி விளக்கவில்லை.

## அறைகூவல்.

லாகூர் மகாநாட்டிற்குப்பின் தேசத்திலுள்ள பலதரப் பட்ட முஸ்லீம்பிரமுகர்கள் எல்லாம் அகில இந்திய முஸ்லீம்

களுக்காகப்பேசக்கூடிய தன் உரிமையை நிரூபிக்கும்படி ஜனுப் ஜின்ஞவை அறைகூவி அழைத்தார்கள்.

டில்லியில் மக்களெதிரில் பாகிஸ்தானைப்பற்றிப் பேசி விவாதம் நடத்தி மக்களின் ஓட்டைப்பெற அகில இந்திய அஹ்ரார்கட்சித்தலைவர் ஜனுப் ஜின்ஞவை அறைகூவி அழைத்தார். அதற்கு ஜனுப் ஜின்ஞ செவி சாய்க்கவில்லை.

## உண்மை நிலை?

பொதுவாக மாகாணங்களின் நிலைமையைக்கவனித்தால் சிந்து முஸ்லீம்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானுக்கு விரோதமாக இருக்கிறுர்கள்.

எல்லைப்புற முஸ்லீம்கள் பாகிஸ்தானைப்பற்றி நினைப்பது கூட இல்லை.

பஞ்சாபிலும் அதிக ஆதரவு இல்லையென்றே சொல்ல வேண்டும்.

வங்காளத்திலோ தனக்கு விரோதமாக இருக்கும் ஜனுப் ஹக்கை ஜின்ஞ சாஹிபால் ஒன்றும் செய்ய முடியவில்லை. லீகின் தீர்மானங்களை லீகர்களே எதிர்க்கின்றுர்கள். தீர்மானங்கள் காற்றில் பறந்துவிட்டன. லீகின் தூண்களென்று சொல்லப்பட்ட ஸர். சிக்கந்தர்ஹயத்கனும் ஜனுப் ஹக்கும் தீர்மானத்திற்கு விரோதமாக யுத்தக்கமிட்டிகளில் சேர்ந்தார்கள். அவர்களை ஜின்ஞ சாஹிப் ஒன்றும் செய்ய முடியவில்லை. வேறு வழியின்றி, பதவி வகிக்கும் மந்திரிகளுக்கு விதிவிலக்களிக்கப்பட்டது.

## யார் இருக்கிறார்கள்?

முஸ்லீம்லீகின் காரியக்கமிட்டியிலும், கவுன்ஸிலிலும் இருப்பவர்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையோர் **ஜமீன்தார்கள், நவாபுகள், பட்டதாரிகள், மாஜி அரசாங்க உத்தியோகஸ்தர்கள்** இவர்கள்தான் என்பதை நன்குணர வேண்டும். தீவிரவாதிகளாக கருதப்பட்ட **மௌலானாஜபர் அலிகானும், மௌலானா ஹஸ்ரத்மோஹானியும்** காரியக்கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் முஸ்லீம்லீகை முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொல்ல முடியுமா? ஆனால் சர்க்காரின் அனுசரணையின் போக்கும், பணத்தின் பலமும் ஒரு பலத்த ஸ்தாபனமாகத் தோற்றுவிக்கச் செய்கின்றன.

போதாக்குறைக்கு பாமரமுஸ்லீம்களை மயக்க சந்தர்ப்பவாதிகள் 'இஸ்லாத்திற்கு ஆபத்து' என்றகோஷத்தையும் கிளப்புகின்றனர். இந்நாட்டில் அன்னியஆதிக்கம் இருக்கும் வரைதான் தாங்கள் இப்போது வகித்துவரும் ஸ்தானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமென்ற அசைக்கமுடியாத முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் எதையும் செய்யக் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் இத்தகையவர்களைக்கொண்ட ஒரு ஸ்தாபனத்தை, இந்தியாவின் சுதந்திரத்தையும், மக்களின் சுகவாழ்வையும் கருதும் ஸ்தாபனமெனக் கூறமுடியுமா? அவர்களின் தற்போதைய நிலைமை நீடிக்கப்படுவதுதான் லக்ஷியம். ஆகவே இம்மாதிரியான ஸ்தாபனத்தோடு பூரண சுதந்திரத்தையே லக்ஷியமாகக் கொண்ட ஒரு ஸ்தாபனம் சமரஸம் செய்துகொள்வது சாத்

நியமா? இரு ஸ்தாபனங்களிலுமுள்ள பிரதிநிதிகள் கூடிப் பேசி ஒரு முடிவுக்குவர மறுக்கும் ஸ்தாபனத்தோடு சமரஸம் சாத்தியமேயில்லை. மேலும் அந்த ஸ்தாபனத்தின் தலைவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்கேந்திரஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொண்டிருக்கும் பெரும்பான்மை அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்தான் இருக்கவேண்டுமென்ற நோக்கமுடையவர்கள் என்பதை சரித்திரம் சொல்லுகிறது.

## சமரஸம் எதற்கு?

இம்மாதிரியான ஒரு ஸ்தாபனத்தோடு இடைக்கால ஏற்பாட்டைமட்டும் உத்தேசித்து ஒரு சமரஸம் செய்து கொள்ள **ராஜாஜி** கையாண்ட முறை நாட்டிற்குப்பெரும் தீங்கையுண்டுபண்ணிவிட்டது. விவரங்கள் அடுத்த அத்தியாயங்களில் கவனிப்போம்.

## இரண்டாம் அத்தியாயம்.

# புதுயோசனையும், வாதப்பிரதிவாதங்களும்

**ஸர். ஸ்டாபோர்ட்கிரிப்ஸ்** தூது வெற்றியடையாமற் போகவே ராஜாஜி டில்லியிலிருந்து சென்னைக்குத்திரும்பினார். 1942-ம் வருஷம் மே மாதம் முதல் வாரத்தில் அலகாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. **ராஜாஜி** அவசர அவசரமாக சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியைக்கூட்டினார். கூட்டத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதேயொழிய இன்ன விஷயங்கள்தான் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்படுமென அங்கத்தினர்களுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்படவில்லை. பெருவாரியான அங்கத்தினர்களும் ஆஜராகவில்லை. கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டது. பலத்த விவாதம் நடைபெற்றது. ஆஜாராயிருந்தவர்களில் அநேகர் வெளியேறிவிட்டார்கள். **ராஜாஜி** தன் தீர்மானத்தின் நோக்கமும் கருத்தும், "ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமையை உண்டாக்குவதும் ஜப்பானிய ஆக்கிரமிப்பைத்தடுத்தலும்தான்" என விளக்கினார். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

## ஓட்டு விபரம்.

| | | |
|---|---|---|
| தீர்மானத்திற்குச் சாதகமாக | 37 | ஓட்டுகள் |
| பாதகமாக | 6 | ,, |
| நடுநிலைமை | 3 | ,, |

இதற்குப்பின் பிரேரேபணையின்மேல் தேசமுழுவதும் வாதப்பிரதிவாதங்கள் கிளம்பின. அதன் விவரங்கள் தொடர்ச்சியாகக் காணலாம்.

## தீர்மானம்.

"தற்பொழுதுஏற்பட்டுள்ள நெருக்கடியானநிலைமையை சமாளித்துக்கொள்ள இந்தியாவில் தேசீயசர்க்கார்ஏற்படுத்த முடியாமல்போனதினுல், அதன்விளைவாக தேசீய இந்தியா தர்மசங்கடமான நிலைமைக்கு ஆளாகிவிட்டது. இதைக் கண்டு காங்கிரஸ் சட்டசபைக்கட்சி ஆழ்ந்த மனவருத்தம் கொள்ளுகிறது. பகைவல்லரசு படையெடுக்கும்போது நடுநிலைமைவகிப்பதுஅல்லது செயலற்றிருப்பதுஎன்றபோக்கை அனுஷ்டித்துக்கொண்டிருப்பதுபொதுமக்களுக்குச்சாத்திய மில்லை. தவிரவும் தனியாக சர்க்காரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பில்லாமல் தற்காத்துக்கொள்வது காரியசாத்தியமானதல்ல. தேசத்தின் சிறந்த நலன்களை முன்னிட்டு இந்த நெருக்கடியான நேரத்தில் நிலைமையைச் சமாளிக்கக்கூடிய தேசீயநிர்வாகம் ஏற்படுவதற்கு தடையாகவுள்ள சகல முட்டுக்கட்டைகளையும் சாத்திய மானஅளவு அகற்றவும் காங்கிரஸ் முயலவேண்டுவது உடனடியாக அவசியமாகும். ஆகையால் ஐக்கிய இந்தியாவின்

ருந்து சில குறிப்பிட்ட பிராந்தியங்கள் அந்த வட்டாரத்திற்குட்பட்ட மக்களின் சம்மதத்தின்பேரில் பிரிந்திருக்க உரிமையுண்டு என்பதை அங்கீகரிக்கவேண்டும் என்றும், இதுவே இப்பொழுது ஏற்பட்டுள்ள தேசிய அபாயத்தின் போது ஐக்கியமாக தேசீயநடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு பூர்வாங்க நிபந்தனையாகவிருக்கவேண்டுமென்றும், முஸ்லீம் லீக் விடாப்பிடியாக வற்புறுத்துவதாலும், இக்கட்சி கீழ்க்கண்ட தன் அபிப்பிராயத்தை அகிலஇந்திய காங்கிரஸ்கமிட்டிக்கு சிபார்சுசெய்கிறது. இந்தச்சமயத்தில் தேசீயசர்க்கார் ஏற்படுத்துவதற்குள்ள சந்தர்ப்பத்தை கைவிட்டு இந்திய ஐக்கியத்தைப்பற்றிய சர்ச்சையை வளர்த்துக்கொண்டிருப்பது மிகவும்புத்திக்தாழ்வான காரியமாதலாலும், இரண்டாம்படியான இந்தக்கெடுதலை தெரிந்தெடுத்து, அரசியல் அமைப்பை நிர்ணயிக்கும் காலம் வரும்போது பிரிவினையை வற்புறுத்தி லீக பிடிவாதம் காட்டுவதாகவிருந்தால் அதற்கு இணங்குவதாக ஒப்புக்கொண்டு அதன் மூலமாக லீகின் சந்தேகங்களையும், பயங்களையும் போக்கி சமரஸ ஒப்பந்தம் செய்துகொள்வதற்காகவும், தற்போதைய நெருக்கடியை சமாளிக்க தேசியசர்க்கார் ஏற்படுத்தவும் கலந்துபேச அதற்கு அழைப்பு அனுப்பப்படவேண்டும்."

## அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி கூட்டம்.

## ராஜாஜி தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியது.

### கடல் கடைந்த கதை.

என்னுடைய முயற்சி கசப்பை விளைவித்திருக்கிறது. நம்முடைய முன்னோர்கள் வெகு காலத்திற்கு முன்பே

கண்டுபிடித்து, அமிர்தத்திற்காகவும், லக்ஷ்மிக்காகவும், கடல் கடையும் கதையில் இதை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அமிர்தத்தை உண்டுபண்ண வேண்டுமென்றாலுங்கூட முதலில் அதிகவிஷத்தைக் கிளப்பித்தானாகவேண்டும். இப்படிச் செய்கிறவர் உங்களுடைய விரோதியல்ல. உங்கள் சிநேகிதனாகவே இருக்கவேண்டுமென்று வெளியிட்டிருக்கிறார்கள். வித்தியாகர்வம் கொண்ட மனப்பான்மையில் இக்கதையை நான் சொல்லவில்லை. இக்கதைமூலம் வெளிப்படும் உண்மைகளை நான் நம்புவதாலேயே இக்கதையைச் சொல்லுகிறேன். இப்பழங்காலக்கதையிலுள்ளஉண்மை தெள்ளத்தெளியஇப்பொழுது மெய்ப்பிக்கப்படுகிறது. விஷத்தையுட்கொண்ட மகாதேவனாக என்னை நினைத்துக்கொள்ளவில்லை. இதை காங்கிரஸ்தான் செய்யமுடியும். காங்கிரஸ்தான் மனக்கசப்பைத்தாங்கி தன்னுடைய நெற்றிக்கண்ணால் விஷத்தை எறிக்கமுடியும்.

## ஆலயப்பிரவேசக்கதை.

இதற்குமுன் காங்கிரஸ் மனக்கசப்பை எதிர்த்து நின்றதற்கு நிதர்சனமாக உதாரணங்களில்லையா? தங்களுடைய புராதன பழக்கவழக்கங்களை மாற்ற சம்மதித்து கோயிலுக்குள் தீண்டாதாரை அனுமதிக்க சென்னை ஜனங்களை நான் கேட்கவில்லையா? இப்பொழுது எவ்வளவு சமத்காரமாகச் சொல்லுகிறார்களோ இதுபோலவே அப்பொழுதும் நான் அவசரப்படுகிறேன்என்று நண்பர்கள் என்னிடம்சொன்னார்கள். அப்படியிருந்தும் "ஆலயப் பிரவேசம்" நன்மைதானென்று இப்பொழுது பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நமக்குக்கொஞ்சமும் சம்பந்தமில்லாத "கிலாபத்

இயக்க"த்திலுங்கூட ஜனங்கள் அதிக கஷ்டப்பட்டார்கள். அப்படியிருந்தும் அதுதான் இந்தமேதசத்தில் முஸ்லீம்களின் பலத்திற்கு ஆரம்பம். நம்முடையஜனங்களில் எந்தப்பகுதியினராவது பலமடைந்தால் அது வாழ்த்துக்குரியதாகும். இன்று என்னுடைய திட்டம் முஸ்லீம்களின் பலத்தைக் கூட்டி, அவர்களுடைய உணர்ச்சியை அதிகப்படுத்தி, அரசியல் ஸ்தாபனத்தைப் பலப்படுத்தினுல் அதற்காக கவலைப் படுவதோ, வருத்தப்படுவதோ, சாத்தியமானதல்ல. நாம் ஒருவரையொருவர் கூடியவரை பலப்படுத்திக்கொள்வோம். மற்ெறுரு சமூகத்தவரை பலமுள்ளவர்களாக்க முன் மாதிரியே நாம் முயல்வோம். இது நம்மை அதிக பலமுள்ளவர்களாக்கும். சாமர்த்தியமான செயலின்மையோடிருக்க இது காலமல்ல. அவ்விதமான காலமாயிருப்பின் இந்தத் தீர்மானங்களைக் கொண்டுவர நானும் துரிதப்பட்டிருக்க மாட்டேன். நாம்இக்காரியத்தில் துணிந்துஇறங்குவோமாக. **முஸல்மான்கள் கேட்டுக்கொண்டிருந்ததை அவர்களுக்குக் கொடுப்போமாக. அது வெறும் சாயைதான். அதை நம் பைக்குள் வைத்துக்கொண்டிருக்காமல் மேஜையின்மேல் வைத்துவிட்டால் அவர்களே தங்களுக்கு வேண்டாமென்று சொல்லுவார்கள்.**

**ஒரு குரல்:—**

**எல்லா முஸ்லீம்களும் அதைக்கேட்கிருர்களா ? அல்லது முஸ்லீம்-லீக் மாத்திரம்தானு ?**

**தெரிந்தகதை.**

இந்த வித்தியாசம் அடிக்கடி தெளிவாக்கப்பட்டு எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. இதற்குப்பதிலும் எல்

லோருக்கும் தெரியும். **கஷ்டமென்னவெனில் முஸ்லீம்களின் பெரும்பாலான மக்களிடையே லீகுக்கு இருந்துவரும் அதிகாரத்தையும், செல்வாக்கையும் அகற்றமுடியவில்லை.**
**பண்டித நேரு:—.........இல்லை.**

பலனைக்காட்டுங்கள். இந்த சமூகப்பிரச்னையில் அவர் ஒரு ஒப்பந்தத்தை உண்டுபண்ணட்டும். அப்பொழுது அவருக்கு நான் தண்டனிடுவேன்.

## ரயில்வண்டி கதை.

முஸ்லீம்லீகை தைரியமாகச்சமாளிக்கவேண்டும். தங்களுடைய எதிர்காலம் பத்திரமாயிருக்கிறதென்று தங்களுக்குத்தெரியவேண்டுமென்று முஸல்மான்கள் சொல்லுகிறார்கள். பாகிஸ்தான் அவர்களுக்கு நல்லதல்ல எனச்சொல்லுவதாலும், தர்க்கிப்பதாலும் பிரயோஜனமில்லை. ரயில் வண்டி யேறிப்போகவேண்டுமென்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய வீட்டைவிட்டுப் புறப்படும்போது முன் ஆசனத்தில் உங்களுடைய பிள்ளை உட்காரவேண்டுமென்று சொல்லுகிறது. அந்த ஆசனத்தை ஒரு சிநேகிதனுக்குக்கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டேனென்று அதோடு தர்க்கிப்பதில் பிரயோஜனமில்லை. உங்களுடைய தர்க்கத்தின் காரணங்களெல்லாம் சரியாயிருக்கலாம். ஆனால் ரயில் தப்பிவிடும். (சிரிப்பு) நீங்கள் ஞானமுள்ளவர்களாயிருப்பீர்களானால் அந்த முன் ஆசனத்தில் பிள்ளையை உட்காரவைத்துக்கொண்டு போய் ரயிலில் ஏறிவிடுவீர்கள்.

**"நாங்கள் உங்களை நிர்பந்தப்படுத்தப்போவதில்லை"** என்று என்னுடைய திட்டம் முஸ்லீம்களுக்குச் சொல்லு

கிறது. பெரும்பாலும் முஸ்லீம்களிருக்குமிடங்களில் அவர்கள் விரும்பும் எந்தவிதமான அரசியல் அமைப்பை வேண்டுமானாலும் நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்குண்டென்று தெளிவுபடுத்தினால் சமரஸத்திற்கு வழியுண்டு. இரண்டுபேரும்கூடி தீர விவாதித்து ஒரு முடிவுக்குவர காங்கிரஸ் லீகை அழைக்கவேண்டும்.

இந்த தேசத்து மக்கள் பலகட்சிகளாக இருக்க இடங் கொடுக்க முடியுமா?

"உறுதியுடன்வெளியாக்கப்பட்ட ஒருபிரதேசத்தினரின் இஷ்டத்திற்கு மாருக, இந்திய யூனியனில் இருக்கும்படி கட்டாயப்படுத்தும் தோரணையில் காரியக்கமிட்டி நினைக்க முடியாது" என்று டில்லி தீர்மானம் சொல்லுகிறது.

## காந்திக் கதை.

"முஸ்லீம்களில் பெரும்பாலோர் தங்களை தனித் தேசத்தவர் என்று முடிவாக நினைத்தால் உலகத்தி லுள்ள எந்த அதிகாரமும் அவர்களை வேறுவித மாக நினைக்கச்செய்யமுடியாது." என மகாத்மாகாந்தி தெளிவுபடுத்தியிருக்கிருர். நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை.

## பூதக் கதை.

பாகிஸ்தான் பூதம் உங்களைக் கொன்றுவிடாது. பஞ்சாபில் முஸ்லீம் அல்லாதார், பெரும்பான்மை முஸ்லீம்

களோடுதான் குடியிருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் உயிரோடு குதூகலமாயிருக்கிறார்கள். பஞ்சாப் நண்பர்களே! பாகிஸ்தான் ஒரு வெறும்பூதம். அதன் தாடியைப்பிடித்துப் பார்க்கவிரும்புகிறேன். (சிரிப்பு)

"அந்நிய ஆக்கிரமிப்பைத்தடுக்க ஹிம்ஸை முறையில் எதிர்ப்பது நியாயமானதுதான்" என்ற முந்திய தீர்மானத்திற்கு இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முரணானது.

## ஸ்ரீ கே. சந்தானம் ஆமோதித்துப் பேசியது.

### "கருங்கடல் கனி."

"தேசமிருக்கும் இக்கேவலமான நிலைமைக்குக் காங்கிரஸ் ஜவாப்தாரியல்ல" என்ற மனப்போக்கு சரியல்ல. ஆத்மீகப்பொறுப்பை பங்கு போடுவது மட்டும் போதாது. யார் இந்நிலைமைக்கு ஜவாப்தாரியாகவிருந்தாலும், சங்கடமான நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றவேண்டியதுதான் இப்போது வேண்டுவது. நம்மால் பொறுப்பைப் பங்கு போடுவதைத்தவிர வேறொன்றும் செய்யமுடியாவிட்டால் நாம் ஏன் இங்கு கூடியிருக்கவேண்டும்?

சுயநிர்ணயஉரிமையை காங்கிரஸ் அளித்தால் முஸ்லீம்கள் தங்களுக்குள் சிந்திக்கவும், முடிவுகட்டவும், ஒருசந்தர்ப்பத்தை காங்கிரஸ் அவர்களுக்களித்ததாகும். தாங்களே முடிவு செய்யும் உரிமை அவர்களை அறிவுள்ளவர்களாக்கும். சென்னைத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின்னர் சென்னையிலுள்ள முஸ்லீம்கள் சிந்திக்கத்தொடங்கியிருக்கிறார்கள். பஞ்சாப், வங்காளம், இம்மாகாணங்களிலுள்ள முஸ்லீம்க

ளுக்குப் பாகிஸ்தான் நன்மை பயக்கலாம். பம்பாய், சென்னையிலுள்ள முஸ்லீம்களின் பிரச்னையைத் தீர்க்காது என்று அவர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். *இதை அவர்களுக்குக் கொடுங்கள். அப்பொழுது இதை ஒரு* **"கருங்கடல்கனி"** *என்றும் முஸல்மான்களுக்குப்பிரயோஜனமற்றது என்றும் உணர்ந்து கொள்வார்கள். இதைக் கொடுக்க மறுத்தால் அறிவூட்டும் மார்க்கத்தை மறித்து ஒற்றுமைக்குள்ள பாதையை அடைத்தவர்களாவீர்கள்.*

டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத் பேசியது.

## கடல் கடையக் கூடவில்லை

*அமிர்தத்திற்காக கடலை கடைவதற்கு நாம் இங்கு கூடவில்லை. எந்தப் பக்கத்தில் தேவர்கள் இருக்கின்றார்கள் எந்தப் பக்கத்தில் அசுரர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் நாமறியோம். கடலைக் கடைவதால் அமிர்தம் வருமா? அல்லது விஷம்தான் வருமா என்று நமக்கு நிச்சயமாகத் தெரியாது. இதுவரை நம் பங்குக்கு விஷம்தான் கிடைத்திருக்கிறது. இந்தவிஷத்தை நாம் எவ்வளவு காலம்தான் விழுங்கிக் கொண்டே இருப்பது? அதற்கு நம்மிடம் சக்தியுண்டா?* ராஜாஜி கூறும் புராண உதாரணங்கள் கவைக்குதவாது.

ராஜாஜி தீர்மானத்தின் பிரதான நோக்கம் முஸ்லீம் லீகை சாந்தப்படுத்துவதற்கென்று தோன்றவில்லை. இரண்டு வருஷங்களாக எண்ணி வந்த ஏதாவதொரு மாகாண சர்க்காரை ஏற்படுத்துவது என்பதுதான் பிரதான நோக்கம் எனத்தோன்றுகிறது. *தேசிய சர்க்கார் என்றபேச்சு ஏற்பட்ட*

பிறகுதான் இப்பிரச்னை தோன்றியது. முஸ்லீம் லீகோடு சாசுவத சமரசம் செய்து கொள்வது பிரதானமாகக் கருதப் படவில்லை.

## "கானல் நீர்"

தேசீய சர்க்கார் என்பது ஒரு வெறும் கானல் நீர் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். அவ்வித சர்க்காரே இல்லை. கொடுப்பதாக வாக்குறுதியுமில்லை. இல்லாத ஒன்றைத்தேடி அலைவது வீண். முஸ்லீம்லீகின் கோரிக்கை தெளிவாக இல்லை. அது உருவாகாமல் தெளிவற்றிருக்கிறது.

முஸ்லீம் லீகின் கோரிக்கை என்னவென்று தெளிவு படுத்துமாறு நான் ஜனுப் ஜின்னுவைக் கேட்டேன். ஜனுப் ஜின்னு நீண்ட பதில் கொடுத்தார். ஆனல் அது ஒன்றையும் தெளிவுபடுத்தவில்லை. பாகிஸ்தானுக்கு ஒரு கற்பனையின் உருவோ அல்லது ஒரு திட்டத்தின் உருவோ கொடுக்கப்பட வில்லை. இந்தியா ஒரேதேசம்தான். புராதன காலத்திலிருந்து இப்படியேதான் இருந்து வந்திருக்கிறது. அதை பிரிக்கவும் முடியாது.

## பாகிஸ்தான் பொம்மையல்ல.

பாகிஸ்தான் வகுப்புப்பிரச்னையைத்தீர்க்காது. அது ஹிந்து—முஸ்லீம் இருசாராருக்கும் உதவாது. பிரிக்கப் பட்ட பிரதேசத்திற்கும், இதர பாகத்திற்கும் உதவாது. அழுகிற பிள்ளையை சாந்தப்படுத்தக் கொடுக்கும் ஒரு பொம்மையல்ல இந்தப் பாகிஸ்தான். ஜனுப் ஜின்னுகூட

*இம்மாதிரி ஒப்புக்கொள்ளமாட்டார்.* இது சாவா வாழ்வா என்னும் ஓர் பிரச்னை.

பண்டிட் ஜவஹர்லால்நேரு

## சர்க்காரின் தயவை நாடினால்?

*நான் ராஜாஜியின் தீர்மானத்தைப் பல காரணங்களுக்காக எதிர்க்கின்றேன்.* முக்கிய காரணம் இத்தீர்மானம் எவ்வித சமரஸத்தையும் உண்டுபண்ணும் நோக்கத்தைக் கொண்டதல்ல. இதனுடைய முழுநோக்கமும் ஏதோ ஒரு விதமான மாகாண நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது *தான். இந்த நோக்கத்தை நான் வெறுக்கிறேன். ஸ்ரீஜகத் நாராயண்லாலின் தீர்மானம் காரியக்கமிட்டி தீர்மானத்திற்கு விரோதமானதென நான் நினைக்கவில்லை ஆனால் ஒன்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். காரியக்கமிட்டி தெளிவு படுத்தினநிலையை எவ்விதத்திலும் மாற்ற நான் விரும்பவில்லை.* சரித்திர ஆரம்பம்முதல் எந்த நாடும் தன்மக்களின் சில பகுதியினருக்கு எவ்வித பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கனவு கண்டதோ—மனதில் தோன்றும் பாதுகாப்பு எவை, எவையோ—அவையனைத்தையும் வரம்பு மீறியும் கொடுக்க காங்கிரஸ் வாக்களித்திருக்கிறது.

## புண்படுத்தும் பாகிஸ்தான்.

*இந்தியாவிலேயே வளர்ந்து, உழைத்த எல்லோரையும் இந்தப்பாகிஸ்தான் எண்ணம் புண்படுத்தி விட்டது. சகிக்க முடியாததாகவும் செய்துகொண்டு வருகிறது.*

இந்திய சுதந்திரத்திற்கே விரோதமானவர்களைத்தவிர, வேறு நேர்மையான அறிவுள்ளவன் எவனும், பாகிஸ்தான் அறிவுள்ளது, என்று நினைப்பானு" என சந்தேகிக்கின்றேன்

*முஸ்லீம்களின் கோரிக்கைகளில் சிலவற்றை ஒப்புக் கொள்ளும்வரை, தேசீய சர்க்கார் ஏற்படுத்தக்கூடா தென்றும், அதற்குப்பூரண அதிகாரம் கொடுக்கக்கூடாதென் றும் ஒரு முஸ்லீம்லீக் பிரதிநிதி ஸர். கிரிப்ஸிடம் சமீபத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்டதாக நான் கேள்விப்படுகிறேன்.*

## சகிக்கமுடியாது.

*இந்தநிலைமையை கொஞ்சம்கூட சகிக்க முடியாதென் பதைமீண்டும் அழுத்தமாகக்கூற விரும்புகிறேன். இம்மாதிரி யோசனை கூறும் ஒரு சாராரோடு ஒரு சமரசத்திற்கும் நான் தயாரில்லை.* ஆனல் என் சம்பந்தப்பட்டவரை பாகிஸ்தானை எதிர்ப்பதற்கு பிரிட்டிஷ் சர்க்காரின் உதவியை விரும்பினுல் நான் என்றும் அழிந்துவிடுவேன். முஸ்லீம் லீக் பெரும்பான் மையான முஸ்லீம்களின் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. அதையும் இந்தியர்களின் பிரதிநிதி ஸ்தாபனமென்ற வழிக்குக் கொண்டு வர மிகப்பிரயாசைப்பட்டேன். ஆனல் அடிமை நாடென் பதை மறந்து எப்பொழுதும் தங்கள் சில்லரைக் கோரிக்கை களையே சதா சமர்ப்பித்துக்கொண்டிருக்கும் ஒரு சாராரோடு சேர்ந்துகொள்வதில் என்ன நன்மையுண்டாகும்? *இந்திய பரிபூரண சுதந்திரமே என் அடிப்படையான கொள்கை யாகும்.*

மௌலானா நூருத்தீன் பிஹாரி.

**நகைக்கத்தக்க திட்டம்.**

*காங்கிரஸ்—லீக் ஒப்பந்தம் ஏற்படுவதை நான் எதிர்க்க வில்லை. ஆனால் பாகிஸ்தான் ஹிந்துக்களின் நலனை மட்டு மின்றி பொதுவில் முஸ்லீம்களின் நலனையும் பாதிக்கும். இப்பாகிஸ்தான் எதிர்கால ஹிந்து—முஸ்லீம் சந்ததிகள் எல் லோருக்கும் பெரிய ஹானியை விளைவிக்கும் பிற்போக்கான வழியாகும். காங்கிரஸ்வாதியென்ற ஹோதாவில் நான் இதைச்சொல்லவில்லை. முஸ்லீம் என்றஹோதாவில் சொல் லுகின்றேன்.*

ஜனுப் யூசுப் மேஹரலி.

**பொருளாதாரத்துறையில் நிலையற்றது.**

*ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் திடீரென்று பீதி வசப் பட்ட வாசகத்தோடு இச்சபைக்குச் சிபார்சு செய்த தீர்மா னத்தை நான் எதிர்க்கின்றேன்.* பாகிஸ்தானை ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் திராவிடஸ்தானும் கேட்கிறார்போல் தோன்றுகிறது. *"முஸ்லீம்களின் அபிப்பிராயத்திலும்கூட பாகிஸ்தான் கூச்சல் அனர்த்தத்தை விளைவிப்பது" என்று நான் நம்புவதால்தான் இத்தீர்மானத்தை எதிர்க்கின்றேன்.* இத்திட்டம் ராஜீயத்தில் பிற்போக்கானது, பொருளாதாரத் துறையில் நிலையற்றது, கலாசார வகையில் நகைக்கத்தக்கது.

**பாகிஸ்தான் ஒரு கோஷமே.**

*இதில் ஒரு பெரும் அம்சமுண்டு.* இக்கோஷத்தை

எழுப்பிய முஸ்லீம் லீக் புத்திசாலித்தனமாக இதை ஒரு கோஷமாகவே வைத்திருக்கிறது இதைஅவர்கள் ஒருதிட்டமாக்கவில்லை. ஆனால் வயது முதிர்ந்த ராஜாஜி இங்கு முன் வந்து திட்டமாகாத ஒன்றைக் கொடுக்கும்படி காங்கிரஸைக் கேட்கிறார். இதை புத்திகூர்மையின் அனர்த்தம் என்றே கூறுவேன்.

விவாதத்திற்கு ராஜாஜி பதில்:—

## சிவாஜிக்கதை.

ஒரு குறிப்பிட்ட நிலைமைக்காக ஒருவன்மீது குற்றம் சாட்டுவதில் பிரயோஜனமில்லையென்பதை வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். நிலைமையை சமாளிக்க ஏதாவது செய்ய வேண்டுமென்ற நோக்கமிருக்குமானால், இந்தியாவின் இப்போதையநிலைமைக்கு பிரிட்டிஷார்தான் காரணமென்று கூறுவதால் பயனில்லை அவர்கள் கெடுத்துவிட்டதை நாம் சீர்படுத்தமுயலவேண்டும். இதுதான் சமயம். இதுபோன்ற சந்தர்ப்பம் இன்னும் நூறு வருஷங்களுக்குக் கிடைக்காது. பூரணமான சர்க்கார் தன்கையில் வரும்வரை சிவாஜி காத்திருந்தாரா? இப்போதிருக்கின்ற நிலைமையிலேயே அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, அதை சீர்படுத்த முயற்சித்து நமது நோக்கத்தைப்பூர்த்திசெய்ய அதைப்பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

## குறைகூறிப் பயனென்ன?

சந்தேகமின்றி கடைசிவரை நிரூபித்துவிட்டீர்கள். அதனால் என்னபிரயோசனம்? பூரணசுதந்திர திட்டத்திற்கு முஸ்லீம் லீக் எதிர்த்துநிற்கிறதென்று பண்டிதநேரு

கூறினர். அப்படியானால் அப்பிரச்னையையும் கவனிக்க வேண்டாமா? முஸ்லீம் லீக் தவறுசெய்வதாகக் கூறுவதால் மட்டிலும் என்ன நலம்?

என் தீர்மானத்தை சபை நிராகரித்தாலும் ஸ்ரீஜகத் நாராயண்லால் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டாமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் முஸ்லீம் லீகுக்கு விரோதமாகக் காங்கிரஸைக் கட்டுப்படுத்திவிடும். அது மிகவும் ஆபத்தான தீர்மானம்.

ராஜாஜி தீர்மானத்திற்குச் சாதகமாக 15 ஓட்டுகள்.
,, பாதகமாக 120 ,,
தீர்மானம் தோற்றது.

## ராஷ்ட்ரபதி மௌலானா அபுல்கலாம் ஆஸாத்.
## அளவுமீறிச் சென்றோம்

ராஜாஜி தன் கருத்தை நமக்குச் சொல்லிவிட்டார். காங்கிரஸ் லீக் வித்தியாசங்கள் நாட்டின் லட்சியத்திற்குக் கேடானதென்றும், அதை முடிவுகட்ட வேண்டுமென்றும் அவர் நம்புகிறார். இது விஷயத்தில் இருவித அபிப்பிராயங்கள் இருக்க முடியாதென்று நான் கூறுவேன். நாமும் அதேமாதிரிதான் நினைக்கின்றோம்.

ராஜாஜிக்கு இந்த நோக்கமிருக்குமானால், அதற்கு அவர் பின்பற்றிய வழியைக் கண்டு நான் ஆச்சரியப்படுகின்றேன். உண்மையில் இவ்விஷயத்தில் ராஜாஜி கையாண்ட முறையும், வழியும் இப்பிரச்னைக்கு மாபெரும் நாசத்தை விளைவித்து விட்டதென்றே நான் கருதுகின்றேன். இதற்கு ராஜாஜியை முழுப்பொறுப்பாளியாக்குகின்றேன்.

## ராஜாஜியே அறிவார்.

காங்கிரஸின் அந்தரங்க மந்திராலோசனை சபை (காரியக்கமிட்டி)க்கூட்டங்களில் இந்த வித்தியாசங்களைத்தீர்க்க நாங்கள் எல்லோரையும்விட எடுத்துக்கொண்ட முயற்சிகளனைத்தையும் ராஜாஜி நன்கறிவார். இது விஷயத்தில் என்னாலானதையெல்லாம் செய்திருக்கிறேன். ஐந்து வருஷ காலமாக முயற்சிக்குமேல் முயற்சி செய்திருக்கிறேன்.

**அதில் சில விஷயங்கள் உங்களுக்குத் தெரியும். ஆனால் சில விஷயங்களை நான் உலகத்துக்குச் சொல்லவில்லை.**

## தாண்டமுடியாத சுவர்.

ஏதாவது நிச்சயமான திட்டம் வருமாகில் அப்பொழுது சொல்லுவது நலமென்றிருந்தேன். நான் எதுவும் செய்யாமல் விடவில்லை. முஸ்லீம்லீகின் சூத்திரக்கயிற்றைத் தங்கள் கைகளில் வைத்திருக்கும் சிலர், காங்கிரஸிற்கு எதிராக, தாண்டமுடியாத ஒரு சுவரை எழுப்பியிருக்கிறார்கள். ஜனப் ஜின்னாவை நான் இரண்டு தடவை சந்தித்திருக்கின்றேன். பண்டித நேரு அவருடன் கடிதப்போக்கு வரத்து நடத்தியிருக்கிறார். காந்திஜீயும் ஜனப் ஜின்னாவைச் சந்தித்திருக்கிறார். காந்திஜீ முடிந்ததனைத்தையும் செய்தார். இக்காரியத்தில் நாங்கள் காட்டிய பிடிவாதத்திற்காக பொதுஜன அபிப்பிராயம்கூட எங்களுக்கு எதிராகவிருந்தது. அதற்குப் பின் சாத்தியமற்ற நிலைமை எங்கள்மீது சுமத்தப்பட்டது. இது ஹிந்து - முஸ்லீம் பிரச்னையென்றும், லீக்— காங்கிரஸ்

பிரச்னை அல்லவென்றும் எங்களிடம் சொன்னார்கள். இரு பூர்வாங்க அஸ்திவாரங்கள் எங்கள் முன்னாலிருந்தன. முதலாவதாக நமது 50 வருஷ சரித்திரம் மறையவேண்டிவரும். இரண்டாவதாக முஸ்லீம்லீக் முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனம் என ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த மூலவிஷயங்கள் சாத்தியமற்றவை. அதைக்கொண்டு ஒன்றும் சாதிக்கமுடியாது. இன்று காங்கிரஸில் பெருமிதமான முஸ்லீம்களிருக்கிறார்கள். ஆனால் அது பிரச்னையல்ல. காங்கிரஸில் ஒரு முஸல்மானோ, சீக்கியனோ, அல்லது கிருஸ்தவனோ இல்லையென்றே வைத்துக்கொள்ளுவோம். காங்கிரஸ் தேசீயக்கொள்கையைக் கடைப்பிடித்து, தேசீய நலன்களைக்காப்பதில் ஸ்திரமாகவிருக்கும்வரையில், அது முழு தேசத்தின் பிரதிநிதி ஸ்தாபனமே தவிற, வகுப்புவாத ஸ்தாபனமாகவோ, அல்லது ஒரு பகுதியினரின் ஸ்தாபனமாகவோ இருக்கமுடியாது. இந்த மனப்போக்கின் பலனாக பூர்வாங்கத்திலேயே நின்று விட்டோம். உண்மையான பிரச்னையில் புகவேயில்லை.

## யோசனை கூறினேன்.

கராச்சி முஸ்லீம்லீக் மகாநாட்டின்போதே நான் ஸர். ஸிக்கந்தர் ஹயாத்கான் மூலம், லீக் 5 பிரதிநிதிகளை அனுப்பட்டுமென்றும், நாம் எல்லோரும்கூடி, கலந்துபேசி எல்லாவற்றையும் தீர்த்துக்கொள்ளலாமென்றும் ஓர் யோசனை கூறினேன்.

அதுதான் சரியான முறை. அது வெற்றியடையாவிட்டாலும், அந்த முயற்சி செய்யக்கூடியதென்று எப்போதும் நான் கருதுவதுண்டு. அதனால் எவ்விதபாதகமுமிராது.

இப்பிரச்னை தேச முழுவதையும் பொறுத்த விஷயம். தனி நபர்களும் சொந்த உணர்ச்சிகளும் கணக்காகாது.

## விவாதிப்பதே வழி.

*ராஜாஜியின் முறை பிசகானது. அது முன்னுக்குக் கொண்டுவரும் விஷயத்திற்கே தீங்கானது. ஒரு கோரிக்கையை சமர்ப்பிப்பது, அதை நாம் ஒப்புக்கொள்வது என்ற பிரச்னையாக இல்லை அது. பிரதிநிதிகளை நியமித்து எழக் கூடிய பிரச்னைகளை விவாதிக்கவேண்டுமென்பதே சரியான வழி. காரியக்கமிட்டியைக் கூட்டி, ஐந்துபேரை நியமிக்கச் சொல்லி, சமரஸம் செய்து கொள்வதற்காக ஐந்து முஸ்லீம் லீக் பிரதிநிதிகளைச் சந்திக்கச்சொல்ல இன்றைக்கும் நான் தயார்.*

## எல்லாம் வழவழா.

*பாகிஸ்தான் இஸ்லாமிய தத்துவத்திற்கே விரோதமானது. ஒருநாட்டில்முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள பகுதியை* 'பாக்' *(சுத்தம்) என்றும், இதரபகுதிகளை* 'நாபாக்' *(அசுத்தம்) என்றும் சொல்லமுடியாது. பாகிஸ்தான் விவகாரங்களும் விளக்கமாயில்லை.* **ஸர். ஸிக்கந்தரைக்கேட்டால் அவர் ஒன்று சொல்லுகிறார். ஜனாப்ஜின்னா வேறொன்று கூறுகிறார்; தீர்மானமோ மற்றொன்றைச்சொல்லுகிறது.** *எல்லாம் "வழவழா"வாக இருக்கிறது. இத்தகைய நிலைமையில் பொறுப்பு வாய்ந்த நமது ஸ்தாபனம் ஆலோசனைக்கு எதை எடுத்துக் கொள்ளுவது? ராஜீயமுன்னேற்றத்திற்குத் தடையான ஒரு*

மனப்பான்மையை எந்த ராஜீயக்கட்சியும் கொள்வது தவறு கும். "இது எங்கள் கோரிக்கை (உருவகமாகாதது) இதை அனுமதிக்காவிடில், உங்களுடன் எங்களுக்கு வேலையொன்று மில்லை" என்று கூறுவது மிகமிகப் பிசகாகும்.

## ஒரு வார்த்தை.

மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் சம்பந்தமாக இருக்கக் கூடிய தப்பபிப்பிராயங்களைப்பற்றி ஒரு வார்த்தை. நான் ராம்கார் காங்கிரஸிலேயே எனது தலைமைப் பிரசங்கத்தில் யோசனையைத் தெரிவித்திருக்கின்றேன். மத்திய சர்க்கார் இருக்கவேண்டும். மாகாணங்களின் உள் விவகாரங்களில் மிகவும் குறைந்த பட்சம் மத்திய சர்க்கார் தலையிடக்கூடிய விதத்தில் மாகாணசர்க்கார்களை நிறுவவேண்டுமென்று கூறி யிருக்கிறேன்.

**மகாத்மா காந்தி.**

## "சுண்ணும்பும் வெண்ணெயும்"

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தனக்கு ஆதரவாக நான் சொன்னதை எடுத்துக்காட்டினாலும், சுண்ணும்புக்கும் வெண்ணெய்க்கும்உள்ள வித்தியாசம் எனக்கும் அவருக்கும் இடையே இருக்கிறது.

ஜப்பானிய சைன்யத்தை வராமல் தடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில், ஒற்றுமையை வாங்குவதற்காக அவர் இப்போது பிரிவினை உரிமையை விலையாகக்கொடுக்கத் தயா ராக இருக்கிறார். இந்தியாவைத் துண்டுபோடுவது பாப மென்று நான் கருதுகிறேன்.

## ராஜாஜீ உடந்தையாயிருப்பார்.

*என் பக்கத்து வீட்டுக்காரன் ஒரு பாபம் செய்தால் அதை நான் தடுக்க முடியாதென்பதே நான் சொன்னதின் கருத்து.* பக்கத்துவீட்டுக்காரன் அந்தப்பாபத்தை செய்யத் தான்செய்வேனென்ருல் ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் இதற்கு உடந்தையாயிருப்பார். ஆனுல் இதற்கு நான் உடந்தையா யிருக்கமுடியாது. அத்துடன் மட்டுமா? ஒற்றுமை ஏற்படு வதைத்தடுக்க மூன்ருவது மனிதன் இங்கிருக்கும் வரையில் ஒற்றுமை ஏற்படமுடியாதென்பது என்திடமான அபிப்ராயம்.

மூன்ருவதுமனிதன்தான் இயற்கையற்ற இந்த வித்தியா சத்தை சிருஷ்டித்தான்; அதை வளர்த்துக்கொண்டுமிருக்கி ருன். அவன் முன்னிலையில், ஹிந்துக்கள், முஸ்லீம்கள் மட்டு மல்ல, அதிருப்தியடைந்த யாவருமே அவனுடைய ஆதரவை நாடுவார்கள். அந்த ஆதரவும் அவர்களுக்குக் கிடைக்கும். தேசத்தின் சுதந்தரத்தைவிட அவர்களுடைய நலன்தான் பெரிது.

## சிந்தித்ததின் பலன்.

*ஒற்றுமையில்லாமல் சுதந்திரம் கிடைக்காதென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே என்று யாரும் என்னைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதில் ஒருவார்த்தையையாவது நான் வாபீஸ் பெற்றுக்கொள்ளவில்லை. அது வெளிப்படையான உண்மை. அதைப்பற்றி சிந்தித்ததில்தான், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வாபீஸ் பெறவேண்டுமென்ற பரிகாரத்தைக் கண்டுபிடித்தேன். அவர்கள் வாபீஸாகிவிட்டால்*

உடனே அதன்மூலம் சுதந்திரம் வந்துவிடுவதாக அர்த்தமில்லை. அதனால் ஒற்றுமை ஏற்படலாம். ஆதிக்கம் வகிக்கும் ஸ்தானத்தில் காலியேற்பட்டால் அதைப் பூர்த்திசெய்ய மற்றொரு வல்லரசு வரலாம் என்ற அபாயமும் இருக்கிறது.

## வாபீஸாவதே விடுதலைக்கு வழி.

ஆனால் பிரிட்டிஷார் கட்டுப்பாடாகவும், தாமாகவும், வாபீஸானால், தார்மீகத்துறையில் அவர்களுக்குப் பிரமாதமான மதிப்பு ஏற்படுவதோடு, ஒருபெரிய தேசத்தின் மனப்பூர்வமான நட்பையும் பெற்றவர்களாவார்கள். **முரண்பாடுள்ள எல்லோருமே சேர்ந்து இந்தியாவிலிருந்து அன்னிய ஆதிக்கத்தை ஒழிக்க முயற்சி செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.** இல்லையானால் அவர்களுடன் செய்துகொள்ளும் எந்த ஏற்பாடும் மணல்மேல் கட்டப்படும் வீட்டுக்குச் சமமாகும்.

## கண்ணை மறைத்துவிட்டது.

இந்தியாவை ஜப்பானியர்கள் வசப்படுத்திக்கொள்வார்கள் என்ற பயம், வெளிப்படையான உண்மையை ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் உணரமுடியாமல் கண்ணை மறைத்துவிட்டது. **சுதந்திரத்தில் பயமேது? ஜப்பானிய அராஜகம், பிரிட்டிஷ் சிங்கத்தின் கோபம் ஆகிய எதற்குமே அதில் இடமில்லை.**

## சுதந்திரத்தைத் தொடர்ந்தே ஒற்றுமை.

வகுப்பு ஒற்றுமையைப்பற்றியவரையில் மூன்றும்மனிதன்

வெளியேறி விட்டானுனல் பகலுக்குப்பின் இரவு வருவது போல் தானுகவே ஒற்றுமை ஏற்படும். ஒற்றுமை என்பதும் முன்னுல் ஏற்படாது. சுதந்திரத்திற்குப் பின்பே ஏற்படும்.

இன்று காங்கிரஸிற்கும், லீகிற்கும் உள்ள லக்ஷியம் ஒன்றுதானு என்பதுகூட நம்மால் தெரிந்துகொள்ள முடிய வில்லை. சுதந்திரத்திற்காக ஒத்துழைக்க வேண்டுமென்று லீகுக்கு லஞ்சம்கொடுத்து சரிப்படுத்த முடியாது. இந்தியா இந்தியருடையது. முஸ்லீம்களுக்கும் முஸ்லீமல்லாதார் களுக்கும் தாய்நாடென்பது லீக் தெரிந்துகொண்டிருந்தால் இந்நாட்டைப் பங்கிடுமுன் நாட்டிற்கு விடுதலை கிடைக்கும் வழியையே முதலில் பார்க்கவேண்டும்.

## சுதந்திரத்திற்குப்பின் பாகம்

*இங்கு வந்து உட்கார்ந்திருக்கும் அன்னியனை வெளி யேற்றியபின் பாகம் பிரிக்கவேண்டுமென்பதை லீக் கேட்க லாம். சாமாதானமாகவோ அல்லது பலாத்காரமாகவோ அதைப்பெறலாம். முஸ்லீம்களின் ஜென்மபூமி இந்தியா என்பதையே லீகர்கள் கருதாமல் போனுல் இந்தியாவை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க முஸ்லீம்களுடன் ஒப்பந் தம் பேசவேண்டுமென்ற பிரச்னையே எழவில்லை.*

**ராஜாஜியின் திட்டம் இயற்கைக்கு முற்றிலும் மாறு பட்டது என்பது என் அபிப்பிராயம். பிரிட்டிஷ் ஆட்சியில் அவர் தணிந்துபோக விரும்புகிருர்.** *தேசத்தை ஆளுபவர் என்பதினுல் பிரிட்டிஷாருக்கு வேண்டியது கிடைத்திருக் கிறது. இதற்காக அவர் லீகுக்கு சுய நிர்ணய உரிமையை அளிக்க முன்வருகிருர். ராஜாஜி பிரிவினையை விரும்பவில்லை.*

*இந்த உரிமையைக் கொடுப்பதாக ஒப்புக்கொள்வதன் மூலம் பிரிவினையே இல்லாமல் செய்துவிடலாமென நம்புகிறார்.*

**மியான் இப்திகாருதீன்**

## தற்கொலை வழி.

*பிரிவினை சுதந்திரத்தைக் கொடுத்துவிடுவதுதான் ஒற்றுமைக்கு வழி. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் இயக்கமானது ஒற்றுமை இயக்கமேயாகும்.*

இந்தியாவின் பிரிவினையானது முஸ்லீம்களின் நலத்திற்கே மிகுந்த பாதகத்தை விளைவிக்கும். இருந்தாலும் ஒற்றுமையையுத்தேசித்து நான் பிரிவினை சுதந்திரத்தை ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். ஆயினும் இந்த உரிமையை அவர்கள் உபயோகிப்பது தற்கொலை செய்து கோள்வதற் கொப்பாகும்.

## பல ஸ்தான்கள்!

*பிரிவினை சுதந்திரத்தை முஸ்லீம்களுக்குக் கொடுத்தால் சீக்கியர் போன்ற இதர சிறுபான்மை சமூகத்தினருக்கும் இதைக்கொடுக்கவேண்டியதுதான்.*

## சமூகக் குடியரசுகள்.

பாகிஸ்தான் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், சுயேச்சையுள்ள முஸ்லீம், சீக்கிய இதர சமூகக்குடியரசுகள் இந்தியாவில் ஏற்படவேண்டும். *ஒவ்வொரு சமூகமும் தன் வழியில் முன்னேற்றமடைவதற்கு சுதந்திரம் கொடுப்பதால்*

ஐக்கிய பத்தியமும் பெருமையும் குலைந்துவிடாது. அது போது அபிவிருத்தி ஏற்படும்படி செய்யக்கூடும்.

## பண்டித ஜவஹர்லால்நேரு.

## பிரிட்டிஷ் செல்வாக்கின் கனவு!

ஒவ்வொரு மாகாணத்திற்கும் போதிய சுதந்திரம் இருக்கவேண்டும். அப்போதுதான் கலாசார அபிவிருத்திக்கு இடமேற்படும்

ஆனால், இந்தியாவிலேயே இரண்டு மூன்று தனித்தனி ஆதிபத்தியமுள்ள நாடுகளிருந்தால் நமதுநிலைமை பலவீனப் பட்டுவிடும். நாமும் இராக், இரானைப்போலாய்விடுவோம். நமதுகலாசாரத்தை இழக்கும்நிலைமைகூடஏற்பட்டுவிடலாம்.

நாட்டைப் பிரிக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் பிரிட்டிஷ் செல்வாக்கு என்றென்றும் இந்நாட்டிலிருக்குமென்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் யுத்தத்தின் பலனாய் பிரிட்டிஷ் செல்வாக்குக் குறைந்தால் நிலைமையில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்படும்.

பரஸ்பர ஒப்பந்தம் மூலமோ, சர்வதேச மத்தியஸ்தம் மூலமோ நாம் ஒரு ஏற்பாட்டை செய்துகொள்ள முடியும். அடிப்படையான பிரச்னைகளைப்பற்றிப்பேச ஐந்து காங்கிரஸ் பிரதிநிதிகள் ஐந்து லீக் பிரதிநிதிகளைச் சந்திக்கலாமென்று ஏற்கனவேயே காங்கிரஸ் அக்ராசனர் யோசனை சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீ ஆச்சாரியாரின் யோசனை அடிப்படையான பிரச்னைகளைத்தீர்க்காமல் புதுப்பிரச்னைகளைக் கிளப்பியிருக்கிறது.

ஜனுப் யூசுப் மேஹர் அலி.

## சோதனை செய்தால்?

இந்தியாவில் இருதேசங்களிருக்கின்றன என்ற தத்துவம் வெறும் பகற்கனவே. சோதனை செய்தால் கனவு சிதறிப்போகும். அது அபூர்வமான பிரசார ஸ்லோகமாக இருக்கலாம். ஆனல் உண்மைக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.

பல நூற்றுண்டுகளாக ஹிந்துக்களும், முஸ்லீம்களும் பொதுப்படையான கலாசாரத்தையும் பழக்க வழக்கங்களையும் உருவாக்கி இருக்கிருர்கள். இருவரும் இந்த நாட்டை அவர்களுடைய பொதுத் தாயகமாகச்செய்திருக்கிருர்கள். **இந்தியாவிலுள்ள வகுப்புப் பிரச்னையை ஹிந்து—முஸ்லீம் பிரச்னையென வர்ணிப்பது மிகவுர்தவறு. உண்மையிலேயே அது ஹிந்து—முஸ்லீம்—பிரிட்டிஷ் பிரச்னையாகும். இந்த மூன்றில் ஒவ்வொன்றுக்கும் பொறுப்புண்டு.**

## சண்டை யார்யாருக்கு?

இந்தியாவில் இரு வகுப்புகள் இருக்கின்றன. அது ஹிந்து முஸ்லீம் வகுப்பல்ல. ஏழை—பணக்காரன் என்ற வகுப்புகள். இந்த இரண்டுக்குமிடையே சண்டை நடந்து வருகிறது. எக்கட்சியில் சேருவதென ஜனங்களே முடிவுசெய்ய வேண்டும். இருகட்சிகளிலும், ஹிந்து, முஸ்லீம், பார்ஸி, கிருஸ்தவர்களிருக்கிருர்கள். மதத்தை ஆதாரமாகக்கொண்டு இல்லாமல் பொருளாதார வழிகளை ஆதாரமாகக்கொண்டே வகுப்புப்பிரச்னைதிட்டமாகத்தீர்க்கப்படும். எனவேசுரண்டப் படுகிறவர்களின் ஸ்தாபனமே இச்சந்தர்ப்பத்தில் அவசியம்.

பண்டித என். ஜி. ரங்கா.

## பாகிஸ்டு நாடுகளாக்கவா?

*இந்தியா பிளவுபடலாகாதென்ற கொள்கையில் காங்கிரஸ் பலமாயிருந்ததைக்காண திருப்தியடைகிறேன்.* **தேச நலனைக்கருதும் எந்த மனிதனும் இந்தியா மூன்று பாஸிஸ்ட் நாடுகளாய்ப் பிரிந்துபோக சகிக்கமாட்டான்.** *அம்மூன்று நாடுகளும் மத வைராக்கியத்தினாலும், ஜாதி வெறியினாலும் போட்டிப்போட்டு ராணுவத்தைப் பெருக்கி யுத்தத்தை உற்பத்தி செய்யும்.*

உலகமெல்லாம் ஒரே ஐக்கியத்துக்குள் கொண்டுவரப்பட்டு ஒரே தற்காப்பு சக்தி உலகையெல்லாம் ஆளும்போதுதான் அமைதியான பாகிஸ்தான்கள் ஏற்படக்கூடும். அதற்கு முந்தி வருவனவெல்லாம் போர் புரியும் போட்டி சக்திகளே.

## முன் வருமா?

*அந்த சக்திகளில் வீணான ராணுவம், பயனற்ற பொருளாதார இடர்ப்பாடு, அதிகவரி, தரித்திரம், கட்டாயராணுவ ஏற்பாடு முதலியன எல்லாம் முளைக்கும்.* பாகிஸ்தான் திட்டத்தின் கீழ் இந்தியா முழுதுக்கும் ஒரே தற்காப்பு ராணுவம் போதுமென்றும், விவசாயிகளும், தொழிலாளிகளும் தத்தம் காரியங்களைத்தாமே செய்து கொள்ள சுதந்திரம் பெற்றிருப்பார்களென்றும் உறுதிகூற முஸ்லீம் லீக் முன் வருமா?

ஆச்சார்ய கிருபலானி.

## எதை உத்தேசித்து?

ஓர் சிறிய கட்சியின் நேசத்தைச் சம்பாதிக்க மற்ற பல கட்சியினர்களின் சம்பந்தத்தை உதறிவிட காங்கிரஸ் தயாராகஇல்லை. இந்தியாவிற்குச்சுதந்திரம்வருவதற்குமுன்பே பாகிஸ்தானைக் கொடுப்பதென்பது, தேசீய கடிகார முள்ளை ஐம்பது வருஷங்களுக்குப் பின்னால் திருப்பி வைப்பதைப் போலாகும். அவ்விதம் செய்தால் இத்தனை காலமாகச் செய்துவந்த தியாகங்களெல்லாம் வீணே. இதை எல்லாம் எதையுத்தேசித்து? 'தற்சமயம் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று கூறி நிராகரித்த ஓர் தேசீய சர்க்காரை நிறுவத்தான். சாசுவதமானஒற்றுமையை உத்தேசித்தல்ல.

முஸல்மான்களுக்கு மட்டும் பாகிஸ்தானைக் கொடுத்து விட்டால் பாஞ்சாலத்திலும், வங்காளத்திலும் இருக்கும் ஹிந்துக்களுக்கும் அதே சுதந்திரம் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கின்றேன்.

## ஹிந்துஸ்தானம் ஹிந்துக்களுக்கா?

"ஹிந்துக்களுக்குத்தான் ஹிந்துஸ்தானம்" என்று கூக்குரலிடும் ஹிந்து மகாசபையைக் கண்டிக்கவேண்டியதே. மகாராஜாக்களுக்கும், சமஸ்தானாதிபதிகளுக்கும் அவரவர்கள் விரும்புவதை விட்டுக்கொடுக்கவேண்டுமென்பது,வெறுப்பையும், குழப்பத்தையும்தான் உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை.

டாக்டர் ஷவுக்கத்துல்லா அன்ஸாரி.

## அரசியல் நிர்ணய சபையே தேவை.

*இந்திய ஐக்கியத்தைக் குலைக்கும் எந்தக்காரியமும் தேசத்திற்கும், முஸல்மான்களுக்கும் பாதகம் விளைவிக்கு மென்பது ஆஸாத்மகாநாட்டின் நிரந்தர அபிப்பிராயமாகும். அது ஒவ்வொரு மைனாரிட்டி வகுப்புக்கும் கலை, மதம், பொருளாதாரம் இவைகள் சம்பந்தமாக தனிப்பாதுகாப்பு நல்கவேண்டுமென்றும் வற்புறுத்தி யிருக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் எந்த உருவமுமில்லாத தெளிவற்ற பாகிஸ்தான் திட்டத்தை வெறுத்தும் வந்திருக்கிறது. மேலும் பிரிவினைத்திட்டங்களைப்பரிசீலனைசெய்து 'அவைகள் முஸ்லீம்களுக்கே பெரும் தீங்கை விளைவிக்கு'மெனக்கண்டித்துமிருக்கிறது.*

**இந்திய மக்களின் நலனை நிர்ணயிக்க ஒரு அரசியல் நிர்ணயசபையே தேவை என்பது என் அபிப்பிராயம். அரசியல் நிர்ணய சபை நியாயமான வரம்புக்குட்பட்ட மாகாண பிரிவினை உரிமையையும் அளிக்கக்கூடும்.** *எனவே பொதுவாக தேசஐக்கியத்திலிருந்து பிரியவேண்டியதில்லை. ருஷ்யா முதலிய நாடுகளில் இதுதான் நடந்திருக்கிறது.*

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி.

## ஜனநாயகமல்ல.

*வங்காளத்திலுள்ள ஹிந்துக்களையும், பாஞ்சாலத்திலுள்ள சீக்கியர்களையும் கலந்து கொள்ளாமல் முஸ்லீம் லீக்*

கிடம் பாகிஸ்தான் தருவதாக வாக்களிப்பது சாத்தியமல்ல ஜனநாயகமல்ல, தர்மமுமல்ல, சாத்தியமுமாகாது.

பாஞ்சால சட்டசபை, இரோடு ஸ்ரீ ராமசாமி நாயக்கருக்குத் திராவிடஸ்தான் கொடுப்பதாக வாக்குக்கொடுத்தால் அது எவ்வளவு பரிகசிக்கத் தக்கதாகுமோ அவ்வளவு பரிகாசத்திற்கு இடமுண்டு சென்னை வாசிகள் பாகிஸ்தான் கொடுப்பதாகச் சொல்லுவதில். பாஞ்சாலம், சிந்து, வடமேற்கு எல்லைப்புறம் ஆகிய மாகாணங்கள் கலந்துகொள்ளப் பட்டாலல்லாது பாகிஸ்தான் சாத்தியமான காரியமல்ல.

இதனால் ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமையை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதுவும் மிக அவசியம்தான். மசூதிமுன் மேளம் வாசியாமலிருப்பதற்கும் பசுக்கொலையைத் தடைசெய்யாமலிருப்பதற்கும் நாம் சுலபத்தில் இணங்கிவிடலாம்.

## என்னதான் செய்வது?

வகுப்பு ஒற்றுமைக்காக காங்கிரஸ் பெருமுயற்சி செய்திருக்கிறது. அது செய்துள்ள முயற்சியைப்போன்று உலகில் வேறெந்த ஸ்தாபனமும் செய்திருக்க முடியாதென்று திடமாகச் சொல்லலாம். வகுப்பு வேற்றுமையை வளர்க்கும் தனித்தொகுதிகளுக்கிணங்கினேம். வகுப்புத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவுமில்லை, நிராகரிக்கவுமில்லையென்று சொன்னேம். வேறு என்னதான் செய்வது? தேசத்தைக் காட்டிக்கொடுக்க முடியாது. முஸ்லீம்களுக்குக் குறையிருந்தால் அவற்றை நிவர்த்திக்க அன்றும் தயார், இன்றும் தயார், என்றும் தயார்.

ஸர்தார் சாந்தசிங்.

## அரசியல் சூதாடியின் நிலைமை.

*தன்னுடைய கருத்தையும், செய்கையையும் நிலைநாட்டுவதற்காக எந்த தியாகத்தையும் செய்யத்தயாராயிருக்கும் ஒரு அரசியல் சூதாடியின் நிலைமைக்கும் ஸ்ரீ ஆச்சாரியாரின் நிலைமைக்கும் வித்தியாசமே இல்லை.*

ஜனப் அப்துல்கையூம் அன்ஸாரி (மோமின் தலைவர்)

## ஓட்டுக்குவிடத் தயார்.

*இத்திட்டத்தினால் நாட்டில் சாசுவத அமைதி நிலவுமென நினைப்பது கனவே. எல்லா முஸ்லீம்களும் லீகை ஆதரிக்கவில்லை. லீகின் அபிப்பிராயம் முஸ்லீம்களின் அபிப்பிராயமாகாது. மோமின்கள் லீகை ஆதரிக்கவில்லையென்பதை ஆதார பூர்வமாகக் கூறுகிறேன். அதைத் தெரிந்துகொள்ள பொதுஜன அபிப்பிராயத்தை ஓட்டுக்கு விடத்தயார்.*

பாபு புருஷோத்தம்தாஸ் தாண்டன்.

## சிறிய பிரதேச ஐக்கியம்.

*இந்திய ஐக்கியம் ஆயிரம் வருஷங்களாக எதிர்பார்க்கப் பட்டுவரும் ஒரு விஷயம்.* உலகம் இன்றிருக்கும் நிலைமையில் சிறிய பிரதேசங்கள் ஐக்கியமடைவதே இப்பொழுது அத்தியாவசியமாகிறது.

ஸ்ரீ ஸி. என் முத்துரங்க முதலியார்.

## வகுப்புப் பூசலே வளரும்.

*ராஷ்ட்ரபதி காட்டிய வழியே சரியானது. இருசிறத்தாரும் சம்பாஷித்த பின்னர் காங்கிரஸ் பிரதிநிதிகள் யோசனை சொன்னால் அப்பொழுது கவனித்துக்கொள்ளலாம். தீர்மானத்தை இம்முறையில் ஸ்ரீ ஆச்சாரியார் கொண்டு வந்ததே வகுப்புப் பூசலை வளர்த்துவிடும்.*

ஜனப் ஏ. கே. அப்துல்ரஹீம், கோவை.

## கிளம்பாத விஷயத்தில் கிளர்ச்சி ஏன்?

*நமது தலைவர்களும், ஜனுப்ஜின்னவும் வேவலைச்சந்தித்தார்கள். வெறுங்கையுடன் திரும்பினார்கள். ஆகவே காங்கிரஸ்-லீக் இரு கட்சியினரும் பாதுகாப்பு விஷயமாகத் தான் விவாதம்நடத்தினார்கள் என்பது நன்குவிளங்குகிறது.* பாதுகாப்புப்பிரச்னை எதிர்பாராத ஏமாற்றத்தை கிரிப்ஸுக்கு உண்டாக்கிவிட்டது. வகுப்புப்பூசல்கள் கிளம்பும், அவைகளைத் தீர்த்துத் தங்கள் காரியத்தைச்சாதித்துக்கொள்ளலாமென்று நினைத்த கிரிப்ஸும், சர்ச்சிலும், பாதுகாப்புப்பிரச்னையையே எல்லாக்கட்சியினரும் கிளப்புவார்களென்று எதிர்பார்க்கவில்லை.

*திடீரென்று கிளம்பின பாதுகாப்புப்பிரச்னையைத்தீர்க்க முடியாமல் விழித்தார் கிரிப்ஸ்.* சுதந்திரத்தின் மூல ஸ்தானம் பாதுகாப்புதான் என்று உணர்ந்து எல்லோரும் அதையே

வற்புறுத்தினர். பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது பாகிஸ்தான் பிரச்னையே கிளப்பப்படவில்லை. காங்கிரஸ்—லீக் ஒன்றுனாலும் பாதுகாப்பை ஒப்படைக்க பிரிட்டிஷார் தயாராக இல்லை என்பது, கிரிப்ஸ் இந்தியாவைவிட்டுப் போனதிலிருந்து நன்கு புலப்பட்டுவிட்டது.

## மௌல்வி ஜனுப் கே எம். முஹம்மத்ஸாலீஹ் (நாகை)

### ஒரே உடல்.

தான் முஸ்லீம்களுக்குக் கொடுக்க முன்வந்தது விஷமென்றும், அது தீங்கையே விளைவிக்கக்கூடியதென்றும் ஸ்ரீ ஆச்சாரியாரே ஒப்புக்கொள்ளுகிறார். முஸ்லீம்களுக்குக் கொடுக்கப்படும் விஷம் மற்றவர்களைப்பாதிக்காதென்று அவர் நினைக்கிறாரா? இந்தியா ஒரே உடலென்பதையும், நாற்பது கோடி மக்களும் அதன் உயிரென்பதையும் அவர்கருதவில்லை போலும்.

## கனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி.

### சுய நிர்ணயத்தின் அபாயம்.

கிரிப்ஸ் பாகிஸ்தான் பெயரைச்சொல்லாமல் அதன் கொள்கையைத்தன் திட்டத்தில் புகுத்தி, அதை ஏற்றுக் கொள்வதாயின் பூராவையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தினர். சுயநிர்ணயம் ஒழுங்கானதல்ல. அமரிக்க பிரஸிடெண்ட் வில்ஸனின் சுயநிர்ணயக்கொள்கையை அனுசரித்துச்செய்யப்பட்ட வார்ஸேல்ஸ் ஒப்பந்தம்தான் இந்த மகாயுத்தத்திற்குக் காரணமாயிருந்தது.

முன்பிருந்து பின்னர் இழக்கப்பட்ட சில உரிமைகளை திரும்பக் கொடுப்பதற்குத்தான் சுயநிர்ணயம் உபயோகப் படுத்தப்படவேண்டும். தேசம் துண்டானபிறகு மறுபடி ஒற்றுமை ஏற்படுமென ஸி. ஆர். எண்ணுவது சரியல்ல. பிள்ளையார் கோவிலின்முன் உடைத்த தேங்காய் மூடிகள் மறுபடியும் ஒன்று சேர்ந்து முழுத்தேங்காயாகாது.

**பண்டித மதன்மோஹன் மாளவியா.**

## விஷத்தன்மை வாய்ந்தது.

பாகிஸ்தான் யோசனை விஷத்தன்மை வாய்ந்ததுடன் அது நிறைவேற்றப்படுமானல் தாய்நாட்டின் க்ஷேமத்தையே நாசப்படுத்திவிடும். மேலும் ராஜீய விஷயத்தில் இந்தியாவை பலவீனப்படுத்தி, ஒருவரில்லாவிடில் மற்றொரு அன்னியரின் கீழ் இந்தியா சதா அடிமையாயிருக்கும்படிச் செய்துவிடும். ஹிந்து முஸ்லீம்களுக்கிடையே சாஸ்வதமான அவநம்பிக் கையை வளர்த்து என்றும் ஹிந்து—முஸ்லீம் தகராறு இருந்துகொண்டே வரும்படியும் செய்துவிடும். பலமான, ஸ்திரமான தேசிய சர்க்கார் அமைவதும் அசாத்தியமானதாகி விடும். உலகநாடுகளுக்கு மத்தியில் பலமான, சுபிட்சமான நிலைமையில் இந்தியா அமைவதற்கும் வழியில்லாது போய் விடும்.

**ஸ்ரீ கே. காமராஜ்.**

## பாதகமே உண்டாகும்.

ராஜாஜி கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லும் பாகிஸ்தானை, பாகிஸ்தான் வேண்டுமென்று கேட்கும் லீகர்களோ, ஜின்னுவோ இதுவரையில் ஆதரித்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்க எதைக்கொண்டு ஹிந்து—முஸ்லீம்

ஒற்றுமையை ஏற்படுத்தப் போகிறுரென்று கேட்கிறேன். ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமைக்கு பாகிஸ்தான் கொடுப்பது நல்லது அல்ல. சில மாகாணங்களைத் தவிர மெஜாரிட்டி தொகையுள்ளவர்கள் மற்றைய மாகாணங்களில் மைனுரிட்டிகளாயிருக்கிருர்கள். அவர்களுக்குப்பாகிஸ்தானுல் பாதகமே உண்டாகும். இந்த அரசாங்கத்தின்கீழ் மாகாண சர்க்காரை ஏற்றுக் கொள்ளுவதினுல் ஜப்பானியர்களைவிரட்டமுடியாது. மகாத்மாஜி சொல்லும் அஹிம்ஸைமுறையினுல்தான் எவ்வித படையெடுப்பையும் தடுக்க முடியும்.

## மௌலாஞு சையத் ஹபீபுர் ரஹ்மான்.

## தேசம் வகுப்புகளுக்கு மேற்பட்டது.

முஸ்லீம்கள் இந்தியாவிற்கு வந்தபொழுது அவர்கள் இந்நாட்டைத் தங்கள் சொந்த நாடாகக்கொண்டார்கள். அவர்கள் இங்கு ஒருபுதிய சமூகத்தைச் சிருஷ்டித்தார்கள். உருது, ஹிந்தி ஆகிய பொது பாஷைகளை ஏற்படுத்திஞர்கள். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்ததால் ஒரு புதிய நாகரிகமும் புதிய அறிவு வளர்ச்சியும் ஏற்பட்டன. இரு சமூகங்களுக்கு மிடையில் பொதுவாயில்லாத விஷயங்கள் மிகக் கொஞ்சம். உண்மையில் இந்தியாவிலிருக்கும் முஸ்லீம்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்களின் சந்ததியாரே. தேசம் வகுப்புக்களுக்கு மேற்பட்டதாய்க் கருதப்படவேண்டும். எங்கும் தேசீய உரிமைகளும் நலன்களும் வகுப்புக்களின் நலன்களோடும் உரிமைகளோடும் ஒன்று சேர்க்கப்படுகின்றன. ஆனுல் முஸ்லீம் லீகின் போக்கினுல் இந்தியாவில் அவ்வாறு செய்வது சாத்தியமில்லாமலிருக்கிறது.

## ஜனுப் முஹம்மது யுஸுப் ஷெரீப். (நாகபுரி)

## பிரிவினையால் விமோசனம் இல்லை.

இந்தியாவை ஹிந்துராஜ்யம் என்றும் முஸ்லீம் ராஜ்யம்

என்றும் இரண்டாகப் பிரிப்பதால் பலம் ஏற்படுவதற்குப் பதிலாக கொதிப்பும் இடையறாத உள்நாட்டுக் கலவரமும் தான் ஏற்படும். இத்தகைய கலவரங்கள் உள்ள நாடு சுதந்திரம் அடைய எவ்வளவுகாலம் பிடிக்கும்? இந்தியாவைப் பிரிப்பதால்நாட்டிற்கோ அல்லது வேறு எந்தசமூகத்திற்கோ விமோசனம் ஏற்படாது. வகுப்புக்களைப் பற்றிச்சிந்திக்கச் சிந்திக்க அவநம்பிக்கைகளும் வளர்கின்றன.

## ஜனாப் முஹம்மத் பாய் ராவஜி.

## அரசியல் தற்கொலை

நாட்டின் பெரிய முஸ்லீம் தலைவர்கள் பாகிஸ்தான் பிரச்னையைத் தடுக்காமல்! இப்படியே விட்டு வைத்திருப்பது வருந்தத்தக்க விஷயம். பாகிஸ்தான் ஏற்பட்டால் முஸ்லீம் சமூகத்திற்கே அழிவு ஏற்படும் என்பதை நல்லறிவும், பொறுப்புவாய்ந்த முஸ்லீம்கள் இதற்குள் உணர்ந்திருப்பார்கள். இந்த உபயோகமற்ற திட்டத்தைப் புகுத்துவது ஒரு அரசியல் தற்கொலையாகும்.

## ஜனாப் ஜபருல் ஹஸன் லாரி.

## இஸ்லாத்துக்கு விரோதம்,

நாட்டை ஹிந்து, முஸ்லீம் ராஜ்யங்கள் என்று பிரிப்பது இஸ்லாமியக் கொள்கைக்கே விரோதமானது. முஸ்லீம்களுக்குக் குறைகள் இருந்தால் பாகிஸ்தான் அதற்கேற்ற நிவாரணமன்று. அது தேசீய சக்திக்குக் கேடுவிளைவிக்கக் கூடியது. இரு வகுப்புகளுக்கிடையே போர் நடக்கும் ஒரு யுத்தகளமாக அது நம் நாட்டைச் செய்துவிடும்

## மூன்றும் அத்தியாயம்.

# வழி என்ன?

இந்தியாவில் பிரிட்டிஷ்ஆட்சி ஸ்திரமானபின், இந்திய அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கும் ஒரு சிறு பங்கு கிடைத்ததிலிருந்துதான் ஹிந்து-முஸ்லீம்களிடையே வேற்றுமை ஆரம்பமாயிற்று. அதற்குமுன் அந்த இருசாரார்களிடையே இன்றிருப்பது மாதிரி மனக்கசப்பு இருந்ததா? **முஸ்லீம்கள் இந்தியாவை ஆண்டுவந்த பொழுதாவது தேசத்தில் ஒற்றுமைக்குறைவிருந்ததா? அல்லது ஹிந்து மன்னர்கள் ஆண்டுவந்த பாகங்களிலாவது வேற்றுமை உணர்ச்சி இருந்ததா?** இக்கேள்விகளுக்குப் பதிலை உண்மையான இந்தியச் சரித்திரத்தில் ஆராய்ந்து பார்த்தால் இத்தகைய மனக்கசப்பு என்றுமே இருந்ததாகத் தெரியவில்லை.

### சண்டை எதற்கு?

இந்தியாவில் ஹிந்து மன்னர்கள் சில பாகங்களிலும், முஸ்லீம் மன்னர்கள் சில பாகங்களிலும் ஆண்டு வரும் சமயங்களில் அடிக்கடி சண்டைகள் நடந்திருக்கின்றன.

அச்சண்டைகள் நடந்ததற்குக் காரணம் ஹிந்து—முஸ்லீம் களிடையே ஏற்பட்ட வேற்றுமையல்ல. ஆளும் பூமியின் விஸ்தீரணத்தைப் பெருக்கிக்கொள்ளவே சண்டைகள் நடந் திருக்கின்றன, என்பதை ஆங்கில சரித்திராசிரியர்கள்கூட ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

## வேற்றுமை விருக்ஷம்.

"*வேற்றுமை*" விதை எப்படி இந்தியாவில் விதைக் கப்பட்டது என்பதற்குச் சில ஆதாரங்கள் முதல் அத்தியா யத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வேற்றுமை வித்து முளைத்துப் பெரிய மரமாக வளர்ந்து இன்று நம்முன் ஹிந்து - முஸ்லீம் பிரச்னைரூபத்தில் காணப்படுகிறது. பெரிய மரமாக வளர்வதற்குக் காலாகாலத்தில் தண்ணீர் ஊற்று வதற்கும், அதற்கு ஒருவித இடைஞ்சலும் ஏற்படாவண்ணம் பாதுகாப்பதற்கும் ஒரு காவலாளி கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறான் என்பது நன்கு புலனாகிறது.

இந்நிலையில் நாட்டிலுள்ள வேற்றுமையை அகற்ற நாம் செய்யவேண்டுவதென்ன? இந்தியாவில் கணக்கற்ற ஜாதிகள், மதங்கள் இருக்கும்போது இரு சமூகத்தினர்களுக்குள்ளாக மட்டும் ஏன் வேற்றுமையுண்டாயிற்று என்பதைப்பற்றி சிறிது ஆராயவேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஸ்திரப்படுவதற்கு முன் இத்தேசத்தின் பெரும்பாகத்தை முஸ்லீம்மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். இந்தியாவில் ஒருபெரிய சமூகம் இஸ்லாமிய சமூகம். சமீபத்திய நீண்டகால ஆளும் சமூகமாகவும் இருந்

திருக்கிறது. இந்தியாவில் பெரும் பகுதியினராகிய ஹிந்து சமூகத்தாரை சில சந்தர்ப்பங்களில் எதிர்த்துநிற்பதற்குச் சக்தி வாய்ந்ததாகவும் இருக்கவேண்டும். இந்த இரு சமூகத்தாருக்குமிடையே வேற்றுமையையுண்டுபண்ணினால்தான் அவ் வேற்றுமை சாசுவதமாக நீடிக்குமென்பதை தற்கால ஆளும் வர்க்கத்தினர் நன்குணர்ந்துகொண்டனர்.

## பொறுமையுண்டாக்கவே.

*ஆகவே வேற்றுமையுணர்ச்சியை வளர்ப்பதற்குப் பலவித முறைகளைக் கையாண்டனர். அம்முறைகளில் சில வற்றை முதல் அத்தியாயத்தில் வாசித்தோம். அதில் வட்ட மேஜை மகாநாட்டு வகுப்புத்தீர்ப்பு ஒன்று. அத்தீர்ப்பைக் கண்ட பெரும்பான்மை ஹிந்து சமூகத்தலைவர்களுக்கு ஓரளவு ஆத்திர உணர்ச்சியுண்டாவது இயற்கையே. அந் நிலைமையும் ஏற்பட்டது.*

## சலுகைக்குக் காரணம்.

*அத்தீர்ப்பில் முஸ்லீம்களுக்கு அதிகச் சலுகை காட்டப்பட்டதேன்?* முஸ்லீம்களுக்கு அதிகச் சலுகை கொடுத்தால் அதை ஹிந்துக்கள் எதிர்ப்பதும் "நமக்குக் கிடைக்கும் சலுகையைக்கண்டு ஹிந்துக்கள் பொறுமைப்படுகிறார்களே" என்று முஸ்லீம்கள் மனதில் தோன்றுவதும் இயற்கையே. *இவ்வுணர்ச்சி முற்றினால்,* "நாம் சலுகைகளோடு சுகமாக வாழ்வதை பிரிட்டிஷ் ஆட்சி இருக்கும் போதே ஹிந்துக்கள் எதிர்க்கின்றார்கள். சுதந்திரம் வந்த பின்னர் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் எப்படிச்சேர்ந்து வாழ

முடியும்'' என்ற நிலைமையில்தான் முடியும். வகுப்புத்தீர்ப்பு அவ்வுணர்ச்சியை உண்டாக்கி விட்டது. அத்தீர்ப்பின் நோக்கமும் அதுவே.

## தரித்திரம் நீங்கவில்லையே.

வகுப்புத் தீர்ப்பின்படி சட்ட சபைகளில் முஸ்லீம்களுக்கு ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைத்தனவெனினும் முஸ்லீம்களின் பிரச்னை தீர்ந்து விட்டதா? இல்லை. முஸ்லீம் பாமர மக்களின் வறுமை நிலையை கோடியில் ஒரு பாகத்தையாவது போக்க அது உபயோகப்பட்டதா? இல்லை. அத்தீர்ப்பில் சலுகைகள் குறைவாகக் கிடைத்த ஹிந்து சமூகத்தினர்களின் நிலைமை பொதுவாக ஏதாவது தாழ்ந்து விட்டதா? இல்லை. இரு சமூகத்தினர்களும் ஒரே நிலையில்தான் க்ஷீண தசையடைந்திருக்கின்றனர். ஆனால் வேற்றுமை யுணர்ச்சி மட்டும் உச்ச நிலையை அடைந்துவிட்டது.

## ஊன்றிப் பாருங்கள்!

இதை ஹிந்து முஸ்லீம்கள் நன்கு கவனிக்கவேண்டும். சந்தேகத்தன்மையை இருசமூகத்தினரும் விட்டுவிடவேண்டும். அன்னிய ஆட்சியின்கீழ் சலுகைகள் கொடுக்கப்படுவதினால் ஒரு சமூகம் முன்னேறிவிட முடியுமென்று நினைப்பது தவறென வகுப்புத்தீர்ப்பு நிரூபிக்கவில்லையா?

## எத்தனை மகாநாடுகள்!

சர்வகட்சி மகாநாடுகள், வகுப்பு ஒற்றுமைக்கு ஒப்பந்தங்கள் இதுவரை எத்தனை நடந்திருக்கின்றன? என் பலன்

*ஒன்றும் ஏற்படவில்லை? பலதடவைகளில் எடுத்துக்கொண்ட சர்வ முயற்சிகளும் தோல்வியடைந்து விட்டன. இதற்குக் காரணம் கண்டுபிடிக்கவேண்டும்.*

## அதோ மூன்ரும் மனிதன்!

ஒற்றுமை ஏற்படாமல் தடுப்பதில் மூன்ரும் மனிதன் சுலபமாக வெற்றியடைகிருன். இதை மகாத்மா காந்தி சமீபத்தில்தான் உணர்ந்து கொண்டார். தடுத்துக்கொண்டிருக்க ஒருமனிதன் இருக்கும்வரை ஒற்றுமைஏற்படாதென்ற காந்தீஜியின் கருத்தை முன் அத்தியாயத்தில் கூறினேம். காந்தீஜியின் கருத்துப்படி மூன்ரும் மனிதன் வெளியாகிவிட்டால் ஒற்றுமை ஏற்படுவதில் தாமதமேற்படாது என்பது திண்ணம். அதற்குச்சரியான வழியைக் கண்டு பிடிப்பது தான் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி.

## புது வழியா!

*அதைவிட்டு இச்சந்தர்ப்பத்தில் ராஜாஜி மீண்டும் பழைய வழியிலேயே தீவிரமாக ஓட ஆரம்பித்திருக்கிருர்.* அவ்வழியேசென்றுகொண்டிருந்த காங்கிரஸ், வழி தவருனது என்பதையுணர்ந்து வேறு சரியான மார்க்கத்தில் செல்லுகிறது. *ராஜாஜி பழையவழியில் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்ட சிலர், "அவர் ஒரு புதுவழியைக்கண்டுபிடித்துவிட்டார்" எனக் கருதுகிருர்கள். அவரும் அவரைப்பின்பற்றுவோரும் அதைத்தவறெனச் சீக்கிரத்தில் உணர்ந்துகொள்வார்கள். வழி பழையதுதான். நடப்பதைநிறுத்தி ஓடுவதற்கு யோசனை செய்தாரே அதுதான் புது யோசனை.*

## ஒற்றுமைக்குப் பிளவு.

ஒற்றுமைக்காக ஆரம்பிக்கப்பட்ட ராஜாஜியின் வழி மகத்தான ஸ்தாபனத்தில் பிளவையுண்டாக்கிவிட்டது. கட்டுப்பாட்டைமீறி ராஜாஜி சுற்றுப்பிரயாணத்தைத் தென்னாட்டில் ஆரம்பித்தார். ஊரூராகத்தன் கருத்தை மக்களுக்கு எடுத்துச்சொன்னார். ஆதரிப்போருக்கும், எதிர்ப்போருக்கும் ஓர் யுத்தம் ஆரம்பமாயிற்று. பத்திரிகைகளுக்கு விஷயதானம் அபரிமிதமாகவே கிடைத்தது. சில பத்திரிகைகள் பத்திரிகா தர்மத்தையும் மீறின. ஆசிரியர்கள், பிரசுரகர்த்தாக்கள் இவர்களின் பூர்வ சரித்திரங்கள் பிரசுரிக்கப்பட்டன. மக்கள் யுத்தவிஷயங்களில் கவனத்தைச்செலுத்துவதைவிட்டுப் பிரிவினை யுத்தவிஷயங்களில் அதிக அக்கரை காட்ட ஆரம்பித்தனர். பொதுக்கூட்டங்களில் குழப்பம். ஒருஸ்தாபனம் இரண்டாகப்பிரிந்தது. ஒருபக்கத்தில் சிலர்; மற்றொரு பக்கத்தில் பலர். சிலர் பலரை "அறிவின்வழி அறியாதவர்கள்" என்கிறார்கள். "தேசத்துக்கே ஆபத்து" என்கிறார்கள் பலர். கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டது.

## ராஜாஜியின் வாதங்கள்.

1. ஜப்பான் ஆக்கிரமிப்பை நாம் எதிர்க்கவேண்டும்.
2. அப்படி எதிர்ப்பதற்கு தேசியசர்க்கார் வேண்டும்.
3. தேசிய சர்க்கார் ஏற்பட ஒற்றுமைவேண்டும்.
4. ஒற்றுமைஏற்பட ஹிந்துமுஸ்லீம் பிணக்குத்தீரவேண்டும்.
5. ஹிந்து-முஸ்லீம் பிணக்குத்தீர காங்கிரஸ்-லீக் சமரஸம் வேண்டும்.

6. காங்கிரஸ்-லீக் சமரசத்திற்குப் பிரிவினை உரிமையை ஒப்புக்கொள்ளவேண்டும்.
7. பிரிவினை உரிமையை ஒப்புக்கொள்வதென்றால், பாகிஸ்தான் கொள்கையை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.
8. ஆகவே பாகிஸ்தான் கொள்கையை ஒப்புக்கொண்டால் ஜப்பான் ஆக்கிரமிப்பை எதிர்த்து வெற்றியடையலாம்

## ஜப்பான் வந்தால்!

ஜப்பானை எதிர்க்கவே தனது முயற்சியென ராஜாஜி ஒப்புக் கொள்கிறார். இந்தியாவின் உண்மைப் புதல்வன் எவனும் ஜப்பானை வரவேற்கமாட்டான் என்பது திண்ணம். ஆக்கிரமிக்க வருபவனை எதிர்க்க மறுப்பவன் தேசத்துரோகியே என்பதில் ஐயமில்லை. "ஜப்பானியர் வந்தால் அதிகக் கொடுமையாக நடத்துவார்கள்" என ராஜாஜி கூறுகிறார். ஜப்பானியர் மாத்திரமல்ல. அடக்கியாள வேண்டுமென்ற ஆசை கொண்ட எந்த எதேச்சாதிகாரமானாலும், தங்கள் நன்மைக்காக அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளை கொடுமையாகநடத்தப் பின்வாங்கமாட்டார்கள். இந்த எதேச்சாதிகாரங்களுள் வித்தியாசம் எள்ளளவும் இருக்கமுடியாது.

## ஆதாரமில்லை.

"ஜப்பானியர் வந்துவிட்டால் நாம் சுதந்திரம் அடைய முடியாமல் இன்னும் வெகுகாலத்திற்கு அடிமைகளாகவே இருக்கநேரிடும்" என ராஜாஜி சொல்லுகிறார். இதற்கு யாதொரு ஆதாரமும் கொடுபடவில்லை. ஜப்பானை வராமல் தடுப்பதற்குச் சரியானவழியென்ன என்று ஆராய்ந்துபார்த்தால் இந்நாட்டிலிருக்கும் அன்னிய ஆதிக்கத்தை அகற்றுவது

தான் என நன்கு புலனாகிறது. இந்தியாவில் இன்றிருக்கும் ஆளும் வர்க்கத்தினர் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கப் பாலிருப்பவர்கள் என்பதை ஜப்பான் அறியாமலில்லை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்துவந்து ஒரு பெரிய தேசத்தில் ஆட்சி நடத்துவதினால் உண்டாகும் பலன்களை அனுபவிப்பதைப் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கும் ஜப்பானைப்போன்ற ஒரு வல்லரசு, சமீபத்திலிருக்கும் நாம் ஏன் அந்தப் பலனையடையக்கூடாதென' நினைப்பது இயற்கையே. ஆகையால் ஜப்பானிய ஆக்கிரமிப்பு இந்நாட்டிற்கு வருவதற்கு காரணமாயிருப்பது இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி இருப்பதுதான். அது போய்விட்டால் இந்நாட்டிற்கு இருக்கும் அன்னிய ஆக்கிரமிப்பு பீதி ஒழிந்துவிடும்.

## கஷ்டமன்று.

மேலும் இந்நாட்டில் நன்கு ஸ்திரமான பிரிட்டிஷ் ஆட்சியை அப்புறப்படுத்த முடியும் என்ற தைரியம் இந்திய மக்களுக்கிருக்கிறது. அப்படியே அவ்வாட்சியை அகற்றி விட்டால் புதிய ஆதிக்கம் இத்தேசத்தை ஆக்கிரமிக்க வருவதற்குத் தைரியம்வராது. அப்படிவந்தாலும் ஒருஅதிகாரமும் இல்லாமலும், கணக்கற்ற அடக்குமுறைகட் குட்பட்டும், ஸ்திரமான, பலம்படைத்த ஆதிக்கத்தை அகற்றமுடியுமென்ற முழு உறுதியுடனிருக்கும் நமக்கு, புதிதாகத் தன் ஆதிக்கத்தை இந்நாட்டில் நிலைநாட்டிக்கொள்ளவரும் எந்த எதேச்சாதிகாரத்தையும் விரட்டுவது கஷ்டமன்று.

## எது தேசீய சர்க்கார்!

ஆக்கிரமிப்பைத் தடுக்க தேசீய சர்க்கார் வேண்டுமென்

பது ராஜாஜியின் வாதம். எத்தகைய தேசிய சர்க்கார்? டில்லியில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் தேசிய சர்க்காரின் தன்மையை ராஜாஜி கீழ்க்கண்டவாறு விளக்கியிருக்கிறார்.

> "பொதுஜன அபிப்பிராயம், பொதுஜனங்களின் பல்வேறு பகுதிகளின் அபிப்பிராயம் இவைகள் பிரதி பலிப்பதும், அதன் முடிவுக்கேற்ப சுதந்திரத்துடன் செயலிலிறங்குவதும், காரியத்தைச் செய்வதுமான சர்க்கார்தான் இப்போதைய அவசர நிலைமையில் தேசீய சர்க்கார்"

இத்தகையசர்க்கார் அமைப்பதற்குப்பிரிட்டிஷார் சம்மதிக்கவில்லையென்பது கிரிப்ஸ் தூது முறிவிலிருந்து நன்கு வெளியாகிவிட்டது. 'உண்மையான அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்ற பிரிட்டிஷார் இஷ்டப்படாததாலேயே கிரிப்ஸ் தூது முறிந்ததென அதிகாரபூர்வமான காங்கிரஸ் அக்ராசனரின் அறிக்கையும் வெளியிடப்பட்டது. காங்கிரஸ்—லீக் ஒற்றுமை ஏற்படாததால் தேசீய சர்க்கார் ஏற்படுவது தடைபட்டுவிட்டதென்ற ராஜாஜியின் கூற்று உண்மையல்ல என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ராஜாஜி அவ்வறிக்கையை மறுக்கமுடியவில்லை.

## பேச்சே எழவில்லையே!

ஸர். கிரிப்ஸோடு பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை, காங்கிரஸ்—லீக் ஒற்றுமை, அல்லது பாகிஸ்தான் இவைகள் சம்பந்தமாக ஒரு நாளாவது பேச்சே எழவில்லை. ஆகையால் தேசீய சர்க்கார் ஏற்பட

ராஜாஜி சொல்லுவதைப்போன்ற காரணங்கள் தடையாக இல்லை என்பது நன்கு வெளிப்பட்டு விட்டது.

## தானே வரும்!

'பிரிட்டிஷார்கொடுக்கும் அதிகாரத்தோடு நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டால் தற்காப்பு அதிகாரம் தானே கைக்கு வந்துவிடு'மென ராஜாஜி கூறுகிறார். எப்படி வருமென விளக்கவில்லை. இது சாத்தியமா? பர்மாவில் ராஜாஜி சொல்லுவதைப்போன்ற ஒரு சர்க்கார்தானிருந்தது. தற்காப்பிலாகாவின் நடவடிக்கைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளக்கூட அந்தமந்திரி சபையால் முடியவில்லை. பர்மாவில் நடத்தப்பட்ட யுத்தத்திற்கும் அங்கிருந்த மந்திரிசபைக்கும் சம்பந்தமில்லாமல் நடந்ததாலேயே மக்களிடையே ஏற்பட்ட பீதியைத் தக்க முறையில் போக்க முடியவில்லை. யுத்தப் பிரதேசத்தில் மக்களிடையே குழப்பமுண்டானால் அது மிகப்பெரிய பலஹீனமாகும். அப்படி குழப்பம் உண்டாகாமலிருக்க ராணுவத்தின் மீது மக்களின் பிரதிநிதியாகிய மந்திரி சபைக்கு சர்வ ஆதிக்கமும் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் மக்களிடையே ஏற்படும் பீதியையும், குழப்பத்தையும் ஏற்படாமல் வெற்றிகரமாக தடுக்கமுடியும்.

## இல்லாவிட்டால்?

சமாதான காலங்களில் மந்திரி சபைகளின் நிர்வாகம் நடைபெறுவதைப்போன்று யுத்த காலத்தில் தற்போதைய அரசியல் அமைப்பின் கீழ் மாகாண, மத்திய மந்திரிசபைகளின் நிர்வாகம் நடைபெற முடியாது. அதற்குப் பர்மா, மலேயா முதலிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளே

நம்முன் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. மந்திரிசபைக்கும் தேசத்தின் ராணுவத்துக்கும் அதிகாரபூர்வமான தொடர்பு இருந்தாலல்லாது யுத்தத்திலீடுபட்டு ஆக்கிரமிப்பைத் தடுப்பதும், உள்நாட்டுக் குழப்பத்தைச் சமாளிப்பதும் சாத்தியமல்ல.

## நிலையென்ன!

எதிரியிடம் கீழ்ப்படியும் மனப்பான்மை மந்திரிசபைக்கில்லையென வைத்துக்கொள்வோம். யுத்தத்தை நடத்தும் இலாகா கீழ்ப்படிந்துவிட உத்தரவிட்டு ராணுவமும், கீழ்ப்படிந்துவிட்டால் அப்போது மந்திரிசபையின் நிலைமை என்னவாகும். அன்னிய ஆக்கிரமிப்பைத் தடுப்பது என்பது வாய் வேதாந்தமாகவும், வெறும்கோஷமாகவுமே முடியும். ஆகையால் ராஜாஜி சொல்லுவதைப்போன்ற தற்காப்பதிகாரமற்ற தேசீய சர்க்கார் ஏற்படுமானால் அன்னிய ஆக்கிரமிப்பைத் தடுப்பதென்பது வெற்றிகரமாக நடைபெறாது.

## வெறும் கூட்டம்!

எனவே ராஜாஜி சொல்வது, அவருடைய வியாக்கியானப்படியே அது தேசீய சர்க்கார் அல்ல. **வைஸ்ராயின் நிர்வாக சபைதான்.** மந்திரிசபை என்றபெயர் அதற்குப் பொருந்தாது. **ஒரு தேசத்திற்கு எந்த அதிகாரம் உயிர் நாடியோ அந்த அதிகாரமில்லாத ஒரு நிர்வாகக்கூட்டத்தை தேசீய மந்திரி சபையெனக் கூறமுடியுமா ?**

## புதிய சித்தாந்தம்.

இத்தகைய நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள, முஸ்லீம் லீகின் தேசத்தைத்துண்டாடும் யோசனையை ஏற்றுக்

கொண்டு லீகோடு சமரஸம் செய்து கொள்ள வேண்டுமென் பது ராஜாஜியின் அபிப்பிராயம். முஸ்லீம்லீகோடு செய்து கொள்ளும் சமரஸம்தான் ஹிந்து—முஸ்லீம் சமரஸம் என்பது ராஜாஜியின் புதிய சிந்தாந்தம்.

## அவசரப்படுவதற்கில்லை!

1942-ம் வருஷம் ஜூன் மாதம் கடைசி வாரத்தில் ராஜாஜி ஜனப் ஜின்னாவின் இல்லத்திற்குச்சென்று பேச்சு வார்த்தைகளை நடத்தியும்கூட ஜனப் ஜின்னா ராஜாஜியின் யோசனைகளை ஏற்க மறுத்துவிட்டார். 1942-ம் வருஷம் ஜூலை மாதம் 2ந்தேதி ஜனப் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தை கள் நடத்தியதைப்பற்றி பத்திரிகைப்பிரதிநிதிகள் ராஜாஜி யைக் கேட்டபொழுது கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.

"உடனே உருப்படியாக ஒன்றும் ஏற்படவில்லை என்பதற்காக நான் நம்பிக்கையை இழக்கக்கூடாது. சம்பந் தப்பட்ட மனிதர்கள் மனதிலேயே விஷயங்கள் புலப்படு வதற்கு நாம் அவகாசமளிக்கவேண்டும். மதிப்புவாய்ந்த காலம் வீணாகப்போகிறது என்பது வாஸ்தவம்தான். ஆனால் நான் அவசரப்படுவதற்கில்லை அவநம்பிக்கைகள் போய்விடும் என்று நம்புகிறேன்."

## ஒருவார்த்தைக்கூட இல்லை.

1942-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ந் தேதியன்று ஜனப்ஜின்னா வெளியிட்ட அறிக்கையில் தேசத்திற்கேற்பட் டிருக்கும் அபாயத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் குறிப்பிட வில்லை. ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் ஐக்கியமுயற்சி எடுத்துக்

கொள்வதைப்பற்றி ஒருவார்த்தையும் கூறவில்லை. ஆனல் பிரிட்டிஷாரிடத்தில் பாகிஸ்தான்கேட்கிருர். ஏதாவது அமெரிக்கர்களின் யோசனையைக்கேட்டு பாகிஸ்தான் கோரிக்கைக்கு விரோதமாயிருந்தால் தேசத்தில் பெரும் குழப்பம் ஏற்படும் என்று மிரட்டியிருக்கிருர்.

## சமரஸம் யாரோடு!

பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளத்தயாராகவிருக்கும் ராஜாஜியோடு பிடிகொடுத்துப் பேசாத ஜனப் ஜின்ஞ, பிரிட்டனிடம் பாகிஸ்தானைக் கொடுக்கவேண்டுமென கேட்கிருர். இந்த பிரிட்டனின் தயவால் பாகிஸ்தானை அடையலாம்என நம்பிக்கொண்டிருக்கும் ஜனப்ஜின்னுவோடு, பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதே தன் கொள்கையென வைத்துக்கொண்டு நடவடிக்கையை மேற்கொள்ளும் காங்கிரஸ் சமரஸம் செய்து கொள்வது சாத்தியமா என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளவேண்டும்.

ஜனப் ஜின்னுவுக்கோ அல்லது அவரது லீகுக்கோ தேசத்திலிருந்து அன்னிய ஆட்சி நீங்க வேண்டுமென்ற எண்ணமோ; அன்னியஆக்கிரமிப்பு இந்தியாவில் ஏற்படாமலிருக்கவேண்டுமென்ற எண்ணமோ இருப்பதாகத் தெரியவில்லை.

## பலியாக நேரிடும்.

ஆகையால் ராஜாஜியின் யோசனையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டாலும் லீக் ஏற்றுக்கொள்ளாது என ஜின்ஞ சாஹிபின் அறிக்கை விளக்கிவிட்டது. மேலும்

ஜனுப் ஜின்ஞு பிரிட்டிஷாரோடு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராயிருக்கிருரேயொழிய காங்கிரஸோடு ஒற்றுமை ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளத் தயாராக இல்லை. ஆகவே அக்கரை என்று இல்லாத ஒன்றை இருப்பதாக நம்பிக் கொண்டு கடற்கரையில் கிடக்கும் ஒரு ஓட்டைப்படகைக் காட்டி "இப்படகில் ஏறிஞல் அக்கரைக்கு அழைத்துச்செல்கிறேன்" என ராஜாஜி அழைத்தார் காங்கிரஸை. அதை ஓட்டைப்படகு என்று உணர்ந்து மறுத்துவிட்டது காங்கிரஸ். *ராஜாஜிஅப்படகில் ஏறி ஒரு சிலரோடு பிரயாணம் செய்ய முயற்சிக்கிருர். ஏறிப்போஞல் அக்கரையே இல்லாத, ஆழங் கண்டுபிடிக்கமுடியாத சாகரத்திற்குப் பலியாக வேண்டியது தான்.*

## ஏது ஒற்றுமை!

*ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை இத்தேசத்தில் ஏற்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும். ஒப்பந்தங்கள் செய்துகொள்வதஞலோ அல்லது ஒற்றுமை மகாநாடுகள் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதஞலோ ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டு விடாது. பரஸ்பரம் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை ஒருவர் உணரவேண்டும்; பொருளாதாரத்துறையில் இருசமூகத்தாரிடையேயும் சமத்துவம் ஏற்படவேண்டும். அப்போதுதான் சாசுவதமான ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை ஏற்படும். பொருளாதார சமத்துவத்தையும் பரஸ்பரஉணர்ச்சியையும் அடிப்படையாகக்கொண்ட ஒற்றுமைக்கான முயற்சிகள் இதுவரை செய்யப்படவில்லை.* "முஸ்லீம்களில் ஒரு பகுதியினரின் ஸ்தாபனமாகிய முஸ்லீம் லீகோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டால் அது முஸ்லீம்களோடு செய்துகொண்ட ஒப்பந்தமாகிவிடும்" *என்ற அடிப்*

படையிலேயே இன்றுவரை முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. செய்துகொண்ட எத்தனை ஒப்பந்தங்கள் இன்று இருக்குமிடந்தெரியாமல் போய்விட்டன. இதனால் ஸ்தாபனங்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது என்பது தெளிவாகி விட்டது. இதை முன்னரே நன்குணர்ந்த பண்டித ஜவஹர்லால் நேரு "பாமர முஸ்லீம்களிடையே நெருங்கிப் பிரசாரம் செய்வதே ஒற்றுமையை உண்டாக்கு"மென வற்புறுத்தினர். காங்கிரஸ் அம்முறையை அனுஷ்டித்திருக்குமானல் நன்கு பலனளித்திருக்கும்

## அவசியம் என்ன?

பாமர முஸ்லீம்களிடையே பிரசாரம் செய்யவேண்டிய அவசியம் என்ன என்பதைப்பற்றி ஆராய்வோம். தேசத்தின் முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனம் என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளும் முஸ்லீம்லீக் உண்மையான பிரதிநிதித்துவ ஸ்தாபனமல்ல. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் என்றைக்கும் இருக்கவேண்டுமென்ற மனப்பான்மையுடையவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஸ்தாபனமாகும் முஸ்லீம் லீக். அவர்கள் யார்?

## பூர்வோத்திரம்.

மொகலாய அரசாட்சி இந்தியாவில் நடைபெற்ற பொழுது ஆளப்படும் பிரதேசத்தைப் பல பாகங்களாகப் பிரித்து வரி வசூல் செய்வதற்கு அதிகாரிகளை நியமித்திருந்தார்கள். அவ்வாட்சி சீர்குலைய ஆரம்பித்த காலத்தில்தான்

பிரிட்டிஷார் இந்திய ஆட்சியைக் கைப்பற்றத்தீவிர முயற்சிகளில் ஈடுபட்டார்கள். மோகலாய ஆட்சியின்கீழ் அக்காலத்தில் வரி வசூல் அதிகாரிகளாயிருந்த பலரிடத்தில் ஆங்கிலேயர்கள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு அவரவர்களுக்குட்பட்டிருந்த பிராந்தியங்களை ஜாகீர்களாகக் கொடுத்தார்கள். அப்போதைய நவீன யுத்தப்பயிற்சியில் திறமைசாலிகளாக ஆங்கிலேயர்கள் திகழ்ந்ததாலும், தங்களுக்கு ஜாகீர்கள் கிடைக்கின்றன என்ற ஆசையினாலும் அவர்களும் அதற்கு உடன்பட்டுவிட்டார்கள். நல்ல ராணுவத்தையுடைய ஆங்கிலேயர்களின் ஒத்தாசை இருந்ததினால் வரிவசூல் செய்வதில் ஜாகீர்தார்களுக்குச்சிரமம் ஏற்படாமல் போயிற்று. ஜாகீர் ஒன்றுக்கு, ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையும் ஜாகீருக்குத்தக்கபடி இவ்வளவென நிர்ணயிக்கப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கும் ஆட்சி நடத்துவதில் கஷ்டம் குறைந்தது. இந்தப்பரம்பரையிலேயே வந்தவர்கள்தான் இன்று நமது நாட்டில்இருக்கும் ஜமீந்தார்கள், ஜாகீர்தார்கள், சமஸ்தானாதிபதிகள்.

## இரு வெறுப்புகள்.

இந்தியாவில் பிரிட்டிஷ்ஆட்சி வேரூன்றிவிட்டபின்னர் பெரிய பிராந்தியங்களையுடைய சமஸ்தானாதிபதிகளின் ஆதிக்கம் வலுப்பட்டுவிடாமல், அவர்களின்மேல் தங்கள் ஆதிக்கத்தை நன்கு ஸ்திரப்படுத்திக்கொண்டார்கள். பிற்காலத்தில் பிரிட்டிஷாரின் தயவில்லாமல் தாங்கள் காலங்கடத்த முடியாதென்ற நிலைமையையும் ஏற்படுத்திவிட்டார்கள். இந்தியாவெங்கும் சுதந்திர உணர்ச்சியுண்டாயிற்று. சமஸ்

தானங்களில் நடைபெறும் சமஸ்தானாதிபதிகளின் எதேச்சாதிகாரத்தை மக்கள் வெறுக்க ஆரம்பித்தார்கள். மக்களிடையே ஏற்பட்ட சுதந்திரஉணர்ச்சியை சமஸ்தானாதிபதிகள் வெறுத்தார்கள். சமஸ்தானங்களில் உண்டான சுதந்திர உணர்ச்சியை அடக்குவதற்குச் சர்க்காரின் பூர்ண உதவி தேவை. சர்க்காரும் அவ்வுதவியை அவர்களுக்கு அளித்து வருகிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் வளர்ந்துகொண்டிருக்கும் சுதந்திரக்கிளர்ச்சியைத்தடுத்து இந்திய சுதந்திரத்தை தாமதப்படுத்த சமஸ்தானாதிபதிகளை சர்க்கார் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

## பட்டங்கள் தானம்!

இந்தியாவிலுள்ள ஜமீன், ஜாகீர்தார்களுக்குக் கௌரவப் பட்டங்கள் அளித்தும், அவர்கள் தங்கள் ஜாகீர்களில் தங்களிஷ்டப்படி வரிவசூலிக்க இடங்கொடுத்தும், தங்கள் தயவில்லாவிட்டால் ஜாகீர்களிலுள்ள மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்ற நிலைமையை உண்டுபண்ணியும், பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலிருந்தால்தான் தாங்கள் சுகபோகங்களோடு வாழமுடியுமென்ற மனப்பான்மையுடையவர்களாக்கியும், இந்தியா சுதந்திரத்தைத் தடைப்படுத்த அவர்களையும் உபயோகிக்கிறார்கள்.

## காட்டுத்தீ!

பொருளாதார சமத்துவம் ஏற்படவேண்டுமென்ற உணர்ச்சி உலகத்தில் காட்டுத் தீயைப்போல் பல பாகங்களிலும் பரவிக்கொண்டிருக்கிறது. சகோதரத்துவ உணர்ச்சி

என்னும் இக்காற்று அடிமை இந்தியாவிலும் வீச ஆரம்பித்து விட்டது. இந்திய சமஸ்தானாதிபதிகள், ஜமீன், ஜாகீர்தார்கள், சுயநலத்தை யுத்தேசிக்கும் பட்டதாரிகள் இவர்களைக் கொண்ட ஒரு சுவற்றை எழுப்பி இந்தியாவில் வீசும் அக்காற்றைத் தடுத்துவிடலாமென பிரிட்டிஷார் முயற்சிக்கிறார்கள். சமஸ்தானாதிபதிகள், ஜமீன், ஜாகீர்தார்கள், பட்டதாரிகள் இவர்களெல்லாம் வெறும் காகித அட்டைகளுக்கொப்பானவர்கள் என்பதைபிரிட்டிஷார் உணரவில்லை. இந்த அட்டைகளைக்கொண்ட சுவற்றை எழுப்பி இயற்கை காற்றின் வேகத்தைத் தடுத்து விடலாமென நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இயற்கைகாற்றின் வேகம் அதிகரிக்கும் இக்காலத்தில் காகித அட்டைகள் காற்றில் அடித்துக்கொண்டு இடந்தெரியாமல் போய்விடுமென்பதை அவர்கள் உணரவில்லை.

## போர்வையின் உபயோகம்!

*இந்தியா சுதந்திரமடைந்துவிட்டால் இன்றிருக்கும் முறையில் தங்கள் நிலைமையை நீடிக்கச்செய்ய காலம் இடங்கொடுக்காதென்பதை ஜமீன்தார்கள் நன்கு தெரிந்துகொண்டார்கள். இந்திய மக்கள் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும் அவர்களுக்கு மதத்தில் நம்பிக்கை அதிகம். மதத்தைக் காட்டித்தான் அவர்களின் ஆதரவை சுலபமாகப்பெற முடியுமென்ற உண்மையை அறிந்துகொண்டனர். உயிரற்றிருந்த சமூக ஸ்தாபனங்கள் பலப்பட ஆரம்பித்தன. சமஸ்தானாதிபதிகளும் தங்கள் தங்கள் சமூக ஸ்தாபனங்களுக்கு ஆதரவு காட்ட ஆரம்பித்தனர்.* பாமர மக்களைத்

தங்கள் பக்கத்தில் இழுக்க "மதத்திற்கு ஆபத்து" என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டனர். 'ஹிந்துக்கள் ஆட்சியை ஸ்தாபிக்கப் போகிறார்கள்' என்றும், 'முஸ்லீம்கள் ஆட்சியை மீண்டும் ஸ்தாபிக்க முயற்சி செய்கிறார்கள்' என்றும் இரு சாராரும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர்.

## ஆதிக்கம் அழியும்.

பாமர ஹிந்துக்கள் சிறிது கல்வியறிவுள்ளவர்கள். 'மதத்திற்கு ஆபத்து' என்ற சுயநலவாதிகளின் கோஷத்தில் ஹிந்துக்களைச் சுலபமாகச் சிக்கவைப்பது கடினம். பாமர முஸ்லீம் மக்களின் கல்வியறிவு மிகக்குறைவு. ஆயினும் மதப்பற்றுடையவர்கள். சுயநலக்கும்பலின் 'இஸ்லாத்திற்கு ஆபத்து' கோஷத்தை உண்மையெனநம்பி அம்மாயவலையில் விழுந்துவிடுகிறார்கள். சந்தர்ப்ப வாதிகளான ஜமீன், ஜாகீர்தார்களின் குட்டை உடைத்துப் பிரசாரம் செய்தால் வெகு சீக்கிரத்தில் இவர்களின் ஆதிக்கத்தை லீகிலிருந்து அவர்கள் அழித்துவிடுவார்கள், அல்லது லீகை பலமற்ற ஸ்தாபனமாகச் செய்து விடுவார்கள்.

"அரசியல் நிர்ணயசபைத் தேர்தலில் தனித்தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லீம் பிரதிநிதிகள் தனித்துக் கூடி எதைக்கேட்கிறார்களோ அதை அப்படியே காங்கிரஸ் ஒப்புக்கொள்ளும்' என்று காங்கிரஸ்செய்த தீர்மானத்தை 'மிக்க அபாயகரமான யோசனை' என லீகின் தலைவர் அறிக்கை வெளியிட்டாரென முதல் அத்தியாயத்தில் வாசித்தோம். என்ன அபாயம்?

## தியாகிகளின் போட்டி.

அரசியல் நிர்ணய சபை மூலம் இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தை வகுக்க ஒப்புக்கொண்டால் தேர்தலில் லீகின் சார்பில் நிறுத்தப்படும் அபேட்சகர்கள் அநேகமாக ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், சுயநலப்பட்டதாரிகள், பெரும் பணக்காரர்கள் இவர்களாகத்தானிருப்பார்கள். ஏழை மக்களின் நன்மையை நாடியும், பொருளாதாரத்துறையில் ஏழை முஸ்லீம்களின் நிலைமையை உயர்த்தவும், பொருளாதார சமத்துவத்தைத் தேசத்தில் உண்டாக்கவும் அரும்பாடுபட்டு வரும் தீவிரவாதிகளான முஸ்லீம்கள் அவர்களோடு போட்டியிடுவார்கள். தேர்தல் காலத்தில் பலமாக பிரசாரம் நடைபெறும். உண்மை நிலைமை மக்களிடையே விளக்கப்படும். ஜமீன், ஜாகீர்தார்கள் தங்களிடம் எப்படி வரி வசூலிக்கிறார்கள், தங்களை எப்படி நடத்துகிறார்கள், என்ற ஞாபகங்கள் வாக்காளர்கள் மனதில் உண்டாகுமல்லவா? அதேபோன்று சிறைக்குச் சென்று, தடியடிபட்டு, அரசாங்க அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டு, ஏழை மக்களின் நிலையை உயர்த்த உழைப்பவர்களாகிய போட்டியிடும் முஸ்லீம் தீவிரவாதிகளின் தியாகமும் அவர்களின் மனக்கண்முன் தோன்றும். எதிர்கால வாழ்வின் ஞாபகம் முன்னால் வந்து நிற்கும். வாக்காளர்கள் யாரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ளலாம்.

## அபாயம் யாருக்கு?

“இஸ்லாத்திற்கு ஆபத்து” என்ற கூச்சல் ஏமாற்றுக்

கூச்சல் என்று வெளிப்பட்டுவிடும். இதனால்தான் முஸ்லீம் லீகும், அதன் தலைவர் ஜனப் ஜின்னாவும் 'அரசியல் நிர்ணய சபை அபாயகரமானது' எனக்கூறுகிறார்கள். அபாயம் யாருக்கு? முஸ்லீம்களுக்கோ, அல்லது இஸ்லாமிய தத்து வத்திற்கோ அல்ல. எதேச்சாதிகாரம், ஜமீன்தாரித்துவம், சுயநலம் இவைகளுக்குத்தான் அபாயம்.

## தேர்தலுக்கு வரட்டுமே.

*நாட்டிலுள்ள பத்துகோடி முஸ்லீம்கள் தங்களையே ஆதரிப்பதாகக்கூறும் லீக், ஏன் தேர்தலுக்கு பயப்பட வேண்டும்?* தங்கள் பாகிஸ்தான் கோரிக்கையை அரசியல் நிர்ணய சபைத்தேர்தலின்போது மக்களிடையே சமர்ப்பித் துப் பிரசாரம் செய்து ஏன் வெற்றியடையக்கூடாது?

*முஸ்லீம் லீகர்கள் தேர்தலுக்கு நிற்கத்தயாராகஇல்லை. முஸ்லீம் மக்களின் யோசனைக்குத் தங்கள் கோரிக்கையை சமர்ப்பிக்கத் தயாராயில்லை.* பத்துகோடி முஸ்லீம்களின் எதிர்கால அரசியல் வாழ்வை நிர்ணயிக்கும் உரிமையை ஜமீன்தார்களின் ஆதிக்கம் கொண்ட லீக் கேட்கிறது. அதைக் கொடுப்பதுதான் சுயநிர்ணயம் என ராஜாஜி சொல் லுகிறார்.

## நாஸி முறை.

*பத்துகோடி முஸ்லீம்களின் வாழ்வை நிர்ணயிக்க பத்துகோடியில், வயதுவந்த முஸ்லீம்கள் யாவருக்கும் உரிமையுண்டென்று காங்கிரஸ் சொல்லுகிறது. தங்களுக் குத்தான் அந்த உரிமையென்பது லீகர்கள் வாதம்.* லீகர்

களின் இந்த வாதம் ஜனநாயக முறையை அடிப்படையாகக் கொண்டதல்லாத நாஸி முறைக்கோப்பாகும். இதை எந்த ஜனநாயக வாதியும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

## இளைஞர்களுக்குப் பயந்தே.

சுயநலத்திற்காகவே வாழுகிறார்கள் என்று நிதர்சனமாகத் தெரிகின்ற ஒரு சாராரிடத்தில் பத்துகோடி முஸ்லீம்களின் எதிர்காலவாழ்க்கையை, ஒப்படைத்து அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதுதான் ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை எனக்கூறுவது பேத்தலாகும். இந்த ஸ்தாபனம் சுயநலத்திற்காக ஏகாதிபத்திய தாசர்களாயிருப்பவர்களின் ஸ்தாபனமாகும். காங்கிரஸ் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனம். இவ்விரண்டு ஸ்தாபனங்களின் நோக்கத்திலும் வித்தியாசமுண்டு. எட்டளவில் லீக் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனமெனத்தோன்றும். ஆனால் கிரியாம்சையில் அது ஏகாதிபத்ய ஆதரிப்பு ஸ்தாபனமே. ஏட்டளவில் கொள்கையை மாற்றியதுகூட முஸ்லீம் இளைஞர்களின் ஆர்ப்பாட்டத்திற்குப் பயந்து என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே இந்த இரண்டு ஸ்தாபனங்களும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு ஒன்றுசேர்வது சாத்தியமானதல்ல. ஒருக்கால் எதிர்பாராதவிதமாக ஒன்று சேர்ந்தாலும், இந்தஸ்தாபனத்திலிருக்கும் ஏகாதிபத்ய தாசர்கள் பிரிந்து புதிய ஒருஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பார்கள். அதற்கு அரசாங்கத்தின் ஆதரவும் கிடைக்கும். அதுதான் முஸ்லீம்களின் சரியான பிரதிநிதித்துவ ஸ்தாபனமெனப் பறைசாற்றப்படும்.

## விழலுக்கிறைத்த நீர்.

லீக் உள்பட தேசத்திலுள்ள எல்லா ஸ்தாபனங்களும் சைமன் கமிஷனைப்பகிஷ்கரிக்கத்தீர்மானித்தன. அப்போது 'உண்மை முஸ்லீம் லீக்' என்று சொல்லிக்கொண்டு ஒரு ஸ்தாபனம் புதிதாகத்தோன்றி சைமன் கமிஷனை வரவேற்க வேண்டுமெனத் தீர்மானம் செய்ததாக முதல் அத்தியாயத் தில் படித்தோம். அதுவே போதிய சான்றாகும். ஸ்தாப னங்களோடு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் நிலைத் திருக்கமாட்டா. ஒரு காலத்தில் ஒரு ஸ்தாபனத்திற்குச் செல்வாக்கிருக்கலாம். சில காலத்திற்குப்பின் அது பலமற்ற ஸ்தாபனமாக மாறலாம். அப்போது பலம் பெற்றிருக்கும் வேறு ஸ்தாபனம் புதிய பிரச்னைகளைக்கிளப் பும். ஒற்றுமைக்கு இத்தகைய முறையை மேற்கோள் வது விழலுக்கிறைத்த நீருககோப்பாகும்.

## இதுதான் வழி.

முஸ்லீம்மக்களிடையே அணுகி அவர்கள் சுயநலவாதிக ளால் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள் என்ற உண்மையான நிலைமையை எடுத்துச்சொல்லி, பொருளாதார சமத்துவத்தின் அவசியத்தைப்பற்றிப் பிரசாரம் ஆரம்பித்தால் அவர்களுக்குச் சுயநல வாதிகளிடையே இன்றிருக்கும் பிரேமைமாறி வெறுப் புணர்ச்சியுண்டாகும். அந்த உணர்ச்சி ஒன்றுதான் வேற்றுமையைச்சுட்டுச் சாம்பலாக்க முடியும். அத்தகைய பிரசாரத்தை சர்க்கார் அனுமதிக்குமா? நிச்சயமாக அனும திக்காது. அந்தப்பிரசாரத்தால் தங்கள் ஆதிக்கம் குறைந்து, இழக்கவும் நேரிடலாம் என்று உணரும் சர்க்காரின் சக்தியும்,

தங்கள் செல்வாக்கு மறைந்து ஒழிந்துவிடுமென திகிலடையும் சுயநல ஏகாதிபத்திய தாசர்களின் எதிர்ப்புச் சக்தியும் ஒன்ருகச்சேரும். ஒன்றுசேர்ந்த இவ்விரண்டு சக்திகளும் அப்பிரசாரத்திற்கிடையூறுவிளைவிப்பதில் தீவிரமாக ஈடுபடும்.

## முதல் வேலை?

சர்க்காரின் அடக்குமுறை, இன்றைய நிலையில் ஏகாதிபத்திய தாசர்களின் உதவியின்றி வெற்றிகரமாக நடைபெற முடியாது. ஏகாதிபத்திய தாசர்களின் எதிர்ப்பு சர்க்காரின் உதவியின்றி நடத்தமுடியாது. இரண்டு சக்திகளும் ஒன்ரேடோன்றுஇணைக்கப்பட்டிருக்கின்றன. அம்முறையை கையாளுவதனல் முதலில் சில சந்தர்ப்பங்களில் கலகங்களும் நடைபெறலாம். அவைகள் "சமூகக் கலகங்கள்" என்று பலத்த பிரசாரம் செய்யப்படலாம். அம்முறையைக்கையாளுவதற்குமுன் இதற்கு மூலசக்தியாக இருக்கும் அன்னிய சர்க்காரை அகற்றுவதே முதலில் செய்யவேண்டிய வேலையாகும். அதை மகாத்மா காந்தி காலத்தை அறிந்து ஆரம்பித்திருக்கிருர். அவரது முயற்சி நல்லபலனை சீக்கிரத்தில் உண்டாக்கும்.

## ஒற்றுமைக்கு ஜின்ஞவின் வழி!

முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள சிந்து, வடமேற்கு எல்லைப்புறம், பஞ்சாப், வங்காளம் முதலிய மாகாணங்களையும், இன்னும் சில பிரதேசங்களையும் இந்தியாவிலிருந்து பிரித்து, அதில் இஸ்லாமிய ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டுமென்பது முஸ்லீம்லீகின் தற்போதைய கோரிக்கை. பிரிக்கப்பட வேண்டுமென்கிற அப்பிரதேசத்திற்குத்தான்

'**பாகிஸ்தான்**' என்கிறார்கள். லீகின் இக்கோரிக்கைப் பூர்த்தி செய்யப்பட்டால்தான் நிரந்தரமான ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுமென்பது ஜனுப் ஜின்னுவின் முடிவு.

## யோசனை சரியா?

தேசம பிரிக்கப்பட்டு இரண்டு பாகங்களாக்கப்படுவது சரியான யோசனையா? பிரிக்கப்பட்ட பிரதேசத்தில் இருக்கும் ஹிந்துக்களும், இதர பிரதேசத்திலிருக்கும் முஸ்லீம்களும் தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு தொகையினராக இருக்கிறார்கள். **சுயநிர்ணய உரிமையோ அல்லது ஜனநாயகத்தன்மையின் அடிப்படையில் அவர்களுக்குள்ள உரிமையோ, இத்தேசத்திலேயே பிறந்து வளர்ந்து, மடியப்போகும் அம்மக்களுக்குக் கிடையாதோ! தேசத்தின் மூன்றில் ஒரு பங்கினரைத் தன் தேசத்திலேயே, பிறநாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நிலைமையில் இப்பாகிஸ்தான் வைத்துவிடும்.** இது நியாயமான, அல்லது சாத்தியமான நடவடிக்கையாகுமா?

## பாகிஸ்தானிகள் பேச்சு!

பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்களின் நிலைமையும், ஹிந்து இந்தியாவிலுள்ள முஸ்லீம்களின்நிலைமையும் எப்படியிருக்குமென '**பாகிஸ்தானிகள்**' திட்டமாக விளக்கவில்லை. இவர்கள் 'அன்னிய நாட்டினரைப்போன்று பாவிக்கப்படுவார்கள்' என்று பொதுப்படையாகக் கூறுவது போதாது. 'ஹிந்து இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுக்கு எந்த அளவு சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தஅளவு சலுகை

கள்தான் பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்களுக்கும் கொடுக்கப் படும்' என்று பாகிஸ்தானிகள் காற்றுவாக்கில் பிரசங்கங் களைச்செய்து கொண்டே போகிறார்கள். இப்படிச் சொல்லு வதைப்பொறுப்புள்ள வார்த்தையெனக் கருதமுடியுமா?

## விவேகமாகாது.

எதிர்காலத்தில் நிரந்தரஒற்றுமையை உண்டாக்கத்தான் இந்த யோசனை என்று பறைசாற்றும் பாகிஸ்தானிகள், சந் தேகமறத் தங்கள் திட்டத்தை விளக்கி, ஒற்றுமையேற்படும் என்பதற்குத் தக்க ஆதாரங்களைக் காட்டி அதை நிரூபிக்க வேண்டும். *அதுதான் நியாய புத்தியும், நல்லெண்ணமும் படைத்தவர்களின் செயலாகும்.* அதைவிட்டு திட்டத்தைச் சொல்லாமலே தேசத்திலுள்ளவர்கள் அதை ஒத்துக்கொள்ள வற்புறுத்துவது விவேகமாகாது.

## சர்க்காரின் உதவியே காரணம்.

*வேண்டுமானால் விளக்கிச் சொல்லுவதற்குத் திட்டம் இன்னும்தயாரிக்கப்படவில்லை என்று சொல்லலாம். அதற்கு அவகாசம் வேண்டுமென்றும் கேட்கலாம். அதுவரை 'இந்த யோசனையை (உருவமாகாததை) ஒத்துக்கொள்ளுங் கள்' என்று பாகிஸ்தானிகள் கேட்பதை ஒத்திப்போடலாம். இல்லாவிட்டால் பாகிஸ்தானில் ஏற்படப்போகும் அரசியல் அமைப்பு* **'இந்தமுறையைக்கையாண்டு நிறுவப்படும்'** *என்று ஒரு முறையையாவது சமர்ப்பிக்கவேண்டும். ஒன்றுமே சொல்லாமல் பிடிவாதமாகத் தாங்கள் சொன்னதையே*

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் சர்க்காரின் பூரண உதவி இருப்பதே இப்படிவாதத்திற்குக்காரணம் என்பதை வாசகர்கள் உணரவேண்டும்.

## பிரச்னையைத் தீர்ப்பது யார்?

தேசம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு இரண்டு ஆட்சிகள் ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம். இரண்டு பாகங்களிலும் பெரும்பான்மை மதத்தினரின் ஆட்சி நடைபெறும். அவ்வாட்சிகளில் சிறுபான்மையினராக இருக்கும் மதத்தினர்க்குச் சலுகைகளைத் தவிர ஆட்சி நடத்துவதில் சம்பந்தமிராது. பெரும்பான்மையினரின் ஆட்சியில் தங்களுக்குக் குறைகள் ஏற்பட்டால் அதைத்தீர்த்துக்கொள்ள பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்கள் ஹிந்து இந்திய ஆட்சியிடமும், ஹிந்து இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் பாகிஸ்தான் ஆட்சியிடமும் முறையிட்டுக்கொள்ளவேண்டும். இதைத்தீர்த்து வைக்க ஒரு மத்தியஸ்தப்போர்டு ஏற்படுத்த நேரும். இம்மத்தியஸ்த போர்டில், எந்த இந்தியாவைச் சேர்ந்த, எம்மதத்தினர், எந்த விகிதத்தில் அங்கம்வகிப்பது என்ற பிரச்னைக் கிளம்பும். இந்தப்பிரச்னையைத் தீர்த்து வைப்பது யார்?

## பரஸ்பரம் போய்விடும்.

"நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து இதைத் தீர்த்துக்கொள்ளலாம்" என்று இன்று வாயளவில் சொல்லலாம். ஆனால் பிரிந்தபின் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகும்தன்மை குறைந்துவிடும். அதனால் பரஸ்பர

உணர்ச்சிக்குறைந்து ராஜ்யத்தை நடத்தும் கர்வமும். அகம் பாவமும் விட்டுக்கொடுக்கும் தன்மையைத் தடுத்துவிடும்.

## சர்வதேச மத்தியஸ்தம்.

"சர்வதேச மத்தியஸ்தத்திற்கு விட்டு தீர்த்துக்கொள்ள லாம்" என்று வாதிக்கலாம். சர்வதேச மத்தியஸ்தத்தினல் ஏற்படும் முடிவு எப்படியிருக்கும்? பிரிக்கப்பட்ட இரு தேசங்களின் அன்னியநாட்டு வியாபார ஒப்பந்தங்களைப் பொருத்தே அம்மத்தியஸ்தம் இருக்கும். அது நியாயமான முறையில்தான் இருக்கும் எனச்சொல்லமுடியாது. மஞ்சு கோவை ஜப்பான் பிடித்துக்கொண்டது. பின்னர்சர்வதேசங் களும் அதை ஒத்துக்கொண்டன. இதேமாதிரிதான் ஜன நாயக ஆட்சியை அழித்த பிராங்கோவின் ஆட்சியையும் ஒத்துக்கொண்டனர். சர்வதேசங்களும் ஒத்துக்கொண்ட தனல் இவைகள் நியாயமான செய்கைகளாகிவிடுமா? ஆகவே மத்தியஸ்தத்தினல் அப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்வதென் பது சாத்தியமல்ல. பலத்தவன் பக்கத்தில்தான் சலுகை யிருக்கும்.

## மீண்டும் தாண்டவம்.

இதனல் இரண்டு நாடுகளிடையேயும் சச்சரவுகள் உண்டாகும். அந்த சச்சரவுகள் வளர்ந்து கிளர்ச்சியாக மாறும். கிளர்ச்சியின் அடிப்படை 'சிறுபான்மையினரின் உரிமைகள்' என்ற தத்துவத்தைக் கொண்டதாக இருக்கும். கிளர்ச்சியைத் தொடர்ந்தே அடக்குமுறை ஏற்படும். இரண்டு பிரதேசங்களிலும் அடக்குமுறை மிகைப்படுத்திக் கூறப்படும். அப்பிரசாரம் இருதேசங்களையும் பெரும் போருக்கு அழைத்

துச்செல்லும். போரில் வெற்றியடைய இதர தேசங்களின் ஒத்தாசை தேடப்படுவது இயற்கையே. இதர பலம் படைத்த தேசங்கள், இருதேசங்களின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிட்டுத் தங்களின் ஒத்தாசைக்கு பிரதிப்பிரயோசனமாகச் சுரண்டுவதற்கு அஸ்திவாரத்தைப் போட்டுவிடுவார்கள். அன்னியர்களால் உற்பத்தி செய்யப்பட்ட இச்சச்சரவுகள் தேசத்தைப் பிரித்ததோடல்லாமல் மீண்டும் அன்னிய ஆதிக்கங்களின் தாண்டவத்தையும் ஆரம்பமாக்கிவிடும்.

## ராணுவப் போட்டி !

மேலும் இருதேசங்களிடையே ராணுவப்பெருக்குப் போட்டி பலமாக நடைபெறும். நவீன யுத்த சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு அன்னிய தேசங்களிலிருந்து அறிஞர்கள் அழைக்கப்படுவார்கள். இந்நிலையில் இந்தியா ஒரு நிரந்தரப் போர்க்களமாகவே மாறிவிடும். ஐரோப்பாவில் நடந்த நூற்றுண்டுப் போரைப்போன்று இரு இந்தியாவினிடையேயும் நீண்டகாலப் போர் மூளும்.

## ஐந்தாம்படை வேலை !

பாகிஸ்தான் ஆட்சிக்குட்பட்டிருக்கும் ஹிந்துக்கள் ராணுவத்திலும், இதர முக்கியமான உத்தியோகங்களிலும் இடம் பெறுவார்களா என்பது சந்தேகம். அதே மாதிரி தான் ஹிந்து இந்தியாவிலுள்ள முஸ்லீம்களின் நிலைமையும். பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்கள்மீது முஸ்லீம்களுக்கும், ஹிந்து இந்தியாவிலிருக்கும் முஸ்லீம்கள்மீது ஹிந்துக்களுக்கும் நாளுக்கு நாள் அவநம்பிக்கை அதிகரிக்கும். இந்த

அவிநம்பிக்கை ஐந்தாம்படை வேலையைத் தோற்றுவிக்கும். ஐந்தாம்படை வேலை கலகங்களையும், கிளர்ச்சிகளையும் உற்பத்தி செய்யும். கலகங்களும், கிளர்ச்சிகளும் இரு தேசங்களின் உள்நாட்டின் அமைதியைக் குலைத்து முன்னேற்றத்தைத் தடுத்து நாசமாக்கிவிடும்.

## பொருத்தமற்ற வாதம்.

ஆகையால் இப்பிரிவினைத் திட்டம் பிரிக்கப்பட்ட இரு பிரதேசங்களுக்கும் நன்மை பயக்காது. அத்துடன் பெரும் தீமையையும் உண்டாக்கும். இதனல் ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தி விடலாமென்பது பொருத்தமற்ற வாதம்.

## இடம் மாற வேண்டுமா?

"சுயேச்சையுள்ள சமூகக் குடியரசுகள் இந்தியாவில் ஏற்படுவதால் ஐக்கிய பத்தியமும், பெருமையும் குலைந்து விடாது" என்பது மியான் இப்திகாருதீன் அவர்களின் வாதம். இந்தியாவை சமூகச் சிறுநாடுகளாக்குவதென்றல் மக்கள் இடம் மாற வேண்டுமா என்பதைப்பற்றி அவர் தெளிவாக ஒன்றும் சொல்லவில்லை. இடம்மாற வேண்டுமென்றல் அது சாத்தியமா? இடம் மாற வேண்டியதில்லையென்றல் பிரிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும்பான்மை சமூகத்தினரின் ஆட்சியே நடைபெறும். அங்கும் சிறுபான்மை பிரச்னைதான் கிளம்பும்.

## முன்னேற்றத்தை தடுக்கும்.

ஒரு நாட்டை மதவாரியாகப் பிரிப்பதென்பது மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தைத் தடைபடுத்திவிடும். இந்த

மோசமானயோசனையை ஒருமுஸ்லீம் கிளப்புவதுஇஸ்லாமிய பரந்த நோக்கத்திற்குப் பங்கம் விளைவிப்பதாகும். இதர சமூகத்தினரோடு முஸ்லீம்கள் சேர்ந்து வாழக்கூடிய தன்மையுடையவர்களல்ல என்பதைக் காட்டுகிறது. இது மிகவும் பிற்போக்கான யோசனையாகும்.

## எத்தனை குடியரசுகள்!

சமூகக் குடியரசுகளாகப் பிரிக்க வேண்டுமென்றால் கணக்கற்ற மதங்களுடைய இந்நாட்டில் எத்தனைக் குடியரசுகள் ஏற்படும்? அத்தனையும் தன் தன் பிராந்தியங்களைத் தானே நிர்வகித்துக்கொள்ளப் பொருளாதார நிலை இடங் கொடுக்குமா? இவைகளெல்லாம் விவரிக்கப்படாமல் யோசனையைச் சொல்லி விடுவது பொருப்புள்ளவர்களின் செயலாகாது.

## காரணம் என்ன?

தேசத்தைப்பிரிக்கவேண்டுமென லீகர்கள் வற்புறுத்துவதேன்? பொருளாதார சமத்துவம் வேண்டுமென்ற உணர்ச்சி நாட்டில் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இவ்வுணர்ச்சி வெகுசீக்கிரத்தில் ஒருபுரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தும். லீகின் சூத்திரக்கயிற்றைத் தங்கள் கையில் வைத்திருக்கும் ஜமீன், ஜாகிர்தார்கள், முதலாளிகள், அரசாங்கப்பட்டதாரிகள் அம்மாறுதலை விரும்பவில்லை. முஸ்லீம் இந்தியாவென ஒரு பாகத்தைப் பிரித்துவிட்டால் தேசத்திற்கு ஐக்கிய பங்கம் ஏற்பட்டுவிடும். அதை சாதகமாக உபயோகப்படுத்திக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலை

நாட்டிக்கொண்டு விடலாம் என்ற நினைவோடு பிரிட்டிஷார் பிரிவினை யோசனையைக் கிளப்பிவிட்டு, அதற்கு ஆதரவும் காட்டுகிறார்கள். பொருளாதார சமத்துவம் ஏற்பட்டுவிட்டால் தாங்கள் இன்று நடத்திக்கொண்டிருக்கும் ஆடம்பர வாழ்க்கையும், ஜமீன்தாரித்துவமும் அழிந்துபோகுமென்பதையுணர்ந்த இவர்கள் முஸ்லீம் இந்தியாவென்று பிரிக்கப்பட்டு விட்டால் மதத்தின் பெயரைக்காட்டி கல்வியறிவிலே இதர சமூகத்தினருக்குச் சமமாக முன்னேற்றமடையாத பாமர முஸ்லீம்களைப் பொருளாதார சமத்துவக் கிளர்ச்சியிலீடுபடுவதிலிருந்து தடுத்துவிடலாமென்ற நோக்கத்தோடு இப்பிரிவினையை வற்புறுத்துகிறார்கள். நாட்டிலுள்ள முஸ்லீம்கள் இதை நன்குணரவேண்டும்.

## உயிர் பிழைக்க முடியுமா ?

**ஜமீன்தார்களின் இந்த எண்ணம், கடலிலே விழுந்து தத்தளிக்கும் ஒருவன் ஒரு துரும்பைக் கண்டவுடன் அதைக் கொண்டுஉயிர்தப்பிவிடலாமென்றுநினைப்பதற்குச்சமமாகும்.** காலத்தில் வேண்டுமானால் சிறிது தாமதம் ஏற்படலாமேயல்லாது அதை ஏற்படாமலேயே தடுத்துவிடலாமெனநினைப்பது அசட்டுத்தனத்தையே குறிக்கும்.

## ஸ்லோகத்தின் ரகசியம்!

'ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை' என்றஸ்லோகத்திற்குள் எத்தனை ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை வாசகர்கள் ஒருவாறு உணர்ந்திருப்பார்கள். இந்த ரகசியங்கள் வெளியாக்கப்பட்டால், புதிய ரகசியங்கள் அக்கோஷத்

*தைப் பின்தொடராமல் செய்வதற்கு, ரகசியங்களின் உற்பத்திசாலையாக இந்தியாவில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சி அகற்றப்படவேண்டும்.*

அதைத் தொடர்ந்தே சுதந்திரமும், பகலுக்குப்பின் இரவும், இரவுக்குப்பின் பகலும் தொடர்வதைப் போன்று ஏற்படும்.

அன்னிய ஆட்சிக்குமுன் இருந்த இத்தேசத்தின் பொருளாதாரநிலை, சுபிட்சம் இவ்விரண்டையும் ஒருக்கணம் இந்நாட்டு மக்கள் மனதில் நினைத்தால் வேற்றுமையுணர்ச்சி மறைந்து உதிக்கும் புதிய உணர்ச்சியானது, நித்திரையிலாழ்ந்திருக்கும் இந்தியர்களின் வீரத்தைத் தட்டி யெழுப்பி, சூரியனைக் கண்ட பனிபோல் அன்னிய ஆட்சியை மறையச்செய்யும். **இந்தியனே உலகத்திற்கு வழி காட்டு!**

---

ஜனோபகார அச்சுக்கூடம், துறையூர்.